விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 18 ஞாயிற்றுக்கிழமை (03.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 258

## போர்க்குற்றவாளி என பொன்சேகா கூறினாலும்

# இராணுவத்தினரை அரசு என்றும் பாதுகாக்கும்!



### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு) முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய போர்க் குற்றம் புரிந்துள்ளார் என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துக்கள் அவரது தனிப்பட்ட கருத்துக்களே என தெரிவித்துள்ள துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க, நிலைமை எதுவாயினும் போர்க்குற்றச் சாட்டுக்களில் இருந்து போரில் ஈடுபட்ட இராணுவத்தினரை அரசாங்கம் என்றும் பாதுகாக்கும் என குறிப்பிட்டார். (15-ம் பக்கம் பார்க்க...)

## காணாமல்போன மீனவர் திரும்பல்

(வல்வெட்டித்துறை)

காணாமல்போன மீனவர் ஒருவர் உடல் பலவீனமான நிலையில் நேற்றுக் கரை திரும்பியுள்ளார்.

வல்வெட்டித்துறை பிரதேசத்தைச் சேர்ந்த வடிவேல் சிறிதரன் (வயது47) என்பவர் கடந்த ஓகஸ்ட் மாதம் 31ம் திகதி வியாழக்கிழமை காலை யில் கடலில் தொழிலுக்காக சென்ற போது காணாமல் போயிருந்தார்.

இவர் பயணித்த படகின் 15

## மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான அரசியல் தீர்வு அவசியம் - சித்தார்த்தன்

(யாழ்ப்பாணம்)

எங்களது போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய வேண்டும் என்றால் மக்கள் ஏற்றுக்கொள்ள கூடிய நியாயமான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 32 ஆம் ஆண்டு நினைவு தினம் தாவடியில் அமைந்துள்ள அவரது நினைவு தூபியில் நேற்று காலை 7 மணியளவில் நடை 16

## கிளிநொச்சியில் மின்னல் தாக்கி மனைவி பலி; கணவன் காயம்

(பரந்தன்)

கிளிநொச்சியில் நீண்ட நாட்களுக்கு பின் பெய்த கன மழையின் போது ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் சிக்கிய தம்பதியரில் மனைவி பரிதாபகரமாக உயிரிழந்ததுடன் கணவன் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் கிளிநொச்சிலுள்ள பல பிரதேசங்களிலும் கன மழை பெய்து 15



## மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞன் பரிதாப மரணம்

### மற்றொரு இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அதி வேகத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதியதில் மோட்டார்சைக்கிளை ஓட்டிச்சென்ற இளைஞர் ஸ்தலத்திலே உயிரிழந்ததுடன் அவருடன் பயணித்த மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் தோப்புக்காட்டை சேர்ந்த வேலுப்பிள்ளை சிவஞானவேல் (வயது 30) என்ற இளைஞனே பரிதாபமாக உயிரிழந்ததுடன் அதே இடத்தை 14

## சிறையில் இருக்கும் கணவனுக்கு கஞ்சா கொண்டு சென்ற மனைவி நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

சிறையில் இருக்கும் கைதியான தனது கணவனுக்கு சவர்க்காரத்தினுள் மறைத்து வைத்து கஞ்சாவை கொண்டு சென்ற மனைவி யாழ்ப்பாண பொலிஸாரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள குறித்த பெண் யாழ்ப்பாணம் சிறைச்சாலை உள்ள தனது கணவரைப் பார்ப்பதற்கு நேற்றைய தினம் சிறைக்கு வந்துள்ளார்.

அவர் கொண்டுவந்த பொதியை சிறைச்சாலை ஊழியர் சோதனை செய்தபோது, சன்லைட் சவர்க்காரத்தினுள் கஞ்சா இருப்பது 15

## மரத்தில் இருந்து விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மாங்காய் பறிக்கச் சென்ற வேளை மரத்தில் இருந்து கீழே விழுந்த குடும்பஸ்தர் ஒரு 15

## உற்பத்தித்துறை வீழ்ச்சி - பிரதமர்

(குருநாகல்)

கடந்த 2004-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நாட்டின் 15

PSP Rent a Car
Thirunelvely
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக)
கார்கள் நாள், கிழமை, மாதம் அடிப்படையில் வாடகைக்கு
Prius hybrid - CAT
Premio - CAB
Premio - KF
Axio - KM
Axio - KL
Axio - KI
Nissan 16 - KD
Nissan 15 - KD
Alto - KI
Indica - KI
Dawoo - 18
தொடர்பு: 0773777502

### புதிய அரசியலமைப்பு வெற்றி பெறாவிடின்

# ஆயுதம் ஏந்தாத வழியில் நாம் போராட வேண்டும்



### தர்மலிங்கம் நினைவஞ்சலியில் சுமந்திரன் எம்.பி உரை

(யாழ்ப்பாணம்)

இந்த அரசியலமைப்பு வெற்றி பெறாவிட்டாலும் அடுத்தது என்ன செய்வது என்று தீர்மானிக்கின்ற போது ஆயுதம் ஏந்தாத ஒரு போராட்ட வடிவுக்குள் நாங்கள் நிற்க வேண்டும் என்ற தீர்க்கமான முடிவை நாம் அனைவரும் எடுக்க வேண்டும் என தமிழ்த் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உயர்தரத்தின் பின்னர்

உங்கள் திறமைகளை வளர்ப்பதற்கு சர்வதேச தரம் வாய்ந்த டிப்ளோமா பாடநெறிகள்

IT மற்றும் ஆங்கிலத்திற்கு | இலங்கையின் பிரபல்யம் பெற்ற இரட்டை டிப்ளோமா பாடநெறிகள்

DUAL DIPLOMA

Diploma in Information Technology (DiTEC INTERNATIONAL) — காலம் : 4 மாதங்கள்
+
Diploma in English (DiE) — காலம் : 4 மாதங்கள்

புரட்டாதி 15 வரையிலான பதிவுகளுக்கு இலவச ESOFT T-Shirt வழங்கப்படும்!

ஏனைய டிப்ளோமா பாடநெறிகள்

- Diploma in Software Engineering (DiSE) — காலம் : 6 மாதங்கள்
- Diploma in Web Engineering (DiWE) — காலம் : 6 மாதங்கள்
- Diploma in Graphics Designing (DiGD) — காலம் : 4 மாதங்கள்
- Diploma in Hardware & Networking (DiHN) — காலம் : 4 மாதங்கள்



Assured by PEARSON

தரச் சான்றளிக்கப்பட்டுள்ளது

கட்டணக்கழிவு 25%* | 50%*

- Diploma in Business Management (DiBM) — காலம் : 4 மாதங்கள்
- Diploma in Computerized Accounting (DiCA) — காலம் : 5 மாதங்கள்
- Diploma in Hospitality Managemnet (DiHM) — காலம் : 4 மாதங்கள்
- Diploma in Auto CAD (DiCAD) — காலம் : 4 மாதங்கள்

பாடநெறியின் இறுதியில் பிரித்தானியச் (UK) சான்றிதழ் வழங்கப்படும்

அனைத்துப் பாடநெறிக் கட்டணங்களும் தவணைமுறையில் செலுத்த முடியும்

## ஆலோசனைக் கருத்தரங்கு

ESOFT METRO CAMPUS மற்றும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் இணைந்து நடத்தும் உயர்கல்வி வழிகாட்டல் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான ஆலோசனைக் கருத்தரங்கு

**05.09.2017** (செவ்வாய்க்கிழமை) **காலை 9.00 மணி**

பதிவுகளுக்கு : உங்களது பெயர், முகவரி ஆகியவற்றை 077 55 888 95 தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

(சி-9502)

**ESOFT METRO CAMPUS**
Shaping Lives, Creating Futures.
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 | Hotline : 077 309 9 308

இலங்கையின் மிகப் பெரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு — 021 7 572 572



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## வீடு, காணி தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட இடங்களில் வீடு, காணி விலைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:-

**0773611282** (சி-9488)

## வைத்தியம்

கண்டு பிடிக்க முடியாத நோய்களினால் அவதிபடுகிறீர்களா? வைத்தியம் பல காலம் செய்து தீர்வு கிடைக்கவில்லையா? எம்மை நாடுங்கள்! பாரம்பரிய சிறப்பு மிக்க 'நாடிபரிசோதனை' (Pulse Diagnosis) மூலம் உங்களுக்கு தற்சமயம் இருக்கும், ஏற்கெனவே வந்த மற்றும் வர போகும் நோய்கள் அல்லது குறைபாடுகளை அறிந்து உலக பிரபல்யம் வாய்ந்த மருந்தில்லா சிகிச்சையான 'அக்குபஞ்சர்' சிகிச்சை மூலம் நிரந்தர தீர்வு பெற்றிட அழையுங்கள். (289)

(Alu) Dr.Sanker 0770357307

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி வடக்கில் பெரிய வீடு வாடகைக்கு உண்டு. (களஞ்சியம், தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது) (409)

தொடர்புகளுக்கு:-

**0212251728, 0766688253**

## காணி விற்பனை

A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகில் உள்ள மட்டுவில் தெற்கு வீதியில், எல்லை வீதிக்கு அருகே 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**0778730129** (414)

# முருகன் அருளாலே மோகனமாய் நீர்வாழி



கோதிலருள் புரிசந்நிதிக் கோயிற் பாங்கே
குறைகளைய ஆச்சிரமம் அமைத்தே பாரில்
ஓதுபுகழ் திருமுறைகள் உரைகள் பசியோ
டுலைதலற அன்னதானம் ஞானதானம்
ஏதிலர்கள் முதியவர்கள் பாலர் கலைஞர்
இகமுயரச் செய்பணி தமிழகத்தார் கண்டே
காதலொடு கலாநிதியாம் விருது தந்தார்
கண்யமடை மோகன்தாஸ் சுவாமி வாழி

வியாவில் ஐயனார் தேவஸ்தானம், காரைநகர். | க.சோமசேகரம் அறங்காவலர் (சி-9518)



The Thinnai | GET Gnanam Education Trust

# மாணவர்களுக்கான இலவச ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி

**த திண்ணை** (THE THINNAI) ஹோட்டல் ஞானம் எடியுகேஷன் டிரஸ்டின் அனுசரணையுடன் முற்றிலும் இலவசமான, 40, 000/- பெறுமதியுள்ள 3 மாத ஹோட்டல் பயிற்சி நெறியொன்றை ஒக்டோபர் முதல் ஆரம்பிக்க வுள்ளது. கீழ்காணும் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. முதலில் விண்ணப்பிக்கும் 40 மாணவர்களே நேர்முக தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.



- வயதெல்லை-18-25
- G.C.E O/L
- ஆங்கில அறிவு
- ஆர்வமுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்
- விண்ணப்படிவங்களை த திண்ணை ஹோட்டலில் பெற்றுக் கொள்ள முடியும்



- விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி-15.09.2017.

(410)

அனுப்ப வேண்டிய முகவரி: 86, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல: 0212030400/ 0767528628

மின்னஞ்சல்: hr@thethinnai.com

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டு தகுதியுடையோர் தகுந்த ஊதியத்துடன் தொழில் ரீதியாக உள்வாங்கப்படுவார்கள்.

## கார், வான் வாடகைக்கு

Van and Car



விசேட சலுகைகளுடன் வாடகைக்கு விடப்படும்.

**இல.28, ஐயனார் கோவில் வீதி, வண் மேற்கு, யாழ்ப்பாணம்.** (181)

தொடர்புகளுக்கு:-0710319219



**பேரன்பிற்குரிய வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு**

இனிவரும் **போயா தினங்களில்** எமது நிறுவனச் செயற்பாடுகள் நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம். இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது மனவருத்தத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (சி-9504)

அன்புறிமையுடன்:

# கரிகணன்

வடக்கின் அச்சகதாரர்

# இனப்படுகொலையைக் கண்டித்து யாழ்.நகரில் நேற்றுப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

மியன்மாரில் இடம் பெற்று வரும்முஸ்லிம்மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை கண்டித்தும், அவ்இனப்படு கொலையை உடன் நிறுத்த வலியுறுத்தியும் கவனயீர்ப் புப்போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. நேற்றுக் காலை யாழ்.பிரதான பேருந்து நிலையத்தின் முன்பாக இடம்பெற்ற இக் கவனயீர்ப் புப் போராட்டம் சமூக வலைத்தளங்களினூடாக ஒன்றிணைந்த இளை ஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்நாட்டில் முஸ்லிம் மக்கள் நூற்றாண்டுகளுக்கு முன்பாகவேகுடியேறிவாழ்ந்து வருகின்ற போதும் இன்னமும் அவர்களுக்குஎதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. குறிப்பாக ரோஹிஞ்ஜா முஸ்லிம்களுக்கு எதிராகவே இப் பேரவலாமனதுக ட்டவிழ்த்து விடப் பட்டுள்ளது.

அத்துடன் இம் மக்கள் மீது பாலியல் வன்புணர்வுகள், கொலைகள், சித்திரவதைகள் என்பவும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதனைக் கண்டித்து நேற்று யாழில் நடந்த இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் வடமாகாணசபை உறுப்பினர்களான பொ.ஐங்கரநேசன் , விந்தன் கனகரட்னம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)



# பிரபாகரனை உயிருடன் மீட்கும் அவசியம் பலருக்கு காணப்பட்டது

## முன்னாள் அமைச்சர் டியூ விளக்கம்

இறுதிக்கட்ட போரில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அடையாளம் காண கருணாவை நானே அனுப்பி வைத்தேன் என, முன்னாள் அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் நீண்ட காலம் நீடித்த யுத்தம் அவ்வளவு சீக்கிரம் நிறைவடையும் என நான் நினைக்கவில்லை.

அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் வெளிநாட்டிற்கு சென்றிருந்தனர். பல்வேறு தொலைபேசி அழைப்புகள் வந்தது. பிரபாகரனை உயிருடன் பிடித்து படகு மூலமாவது மீட்டுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் பலருக்கு காணப்பட்டது.

எனினும் 18ஆம் திகதி யுத்தம் நிறைவடைந்து விட்டது. எனது அமைச்சில் அப்போதைய பிரதி அமைச்சராக விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) செயற்பட்டார்.

அந்த சந்தர்ப்பத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக சமகால ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே செயற்பட்டார். பிரபாகரனின் உடலை அடையாளம் காண்பதற்கு கருணாவை நானே அனுப்பி வைத்தேன். கருணா பிரபாகரனை அடையாளம்கண்டவுடன் நேரடியாக நாடாளுமன்றத்திற்கே வந்தார். யுத்தம் நிறைவடைந்தவுடன் நாடாளுமன்றத்தில்முதல்உரையை நானே நிகழ்த்தினேன்.

அந்தக் காலத்தில் நல்ல ஒற்றுமை காணப்பட்டது. அதுவே யுத்தம் வெற்றி பெறவும் காரணமாக இருந்ததென முன்னாள் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்து சமுத்திர வலய நாடுகள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதான பொருளாதார வளமாகக் காணப்படும் சமுத்திரத்தின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு முன்னுரிமையளித்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

கொழும்பில் இடம்பெறவுள்ள 2ஆவது இந்து சமுத்திர வலய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்துள்ள அதன் உபதலைவியான இந்திய வெளிநா ட்டலுவல்கள் அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்று முன் தினம் முற்பகல் ஜனாதிபதியை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்த வேளையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மதுபான விற்பனை நிலையத்தில் தீ





(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் இயங்கி வந்த மதுபான விற்பனை நிலையம் ஒன்று நேற்று அதிகாலை தீயில் எரிந்து நாசமானது. பருத்தித்துறை பிரதான வீதியில் இயங்கி வந்த மேற்படி மதுபான நிலையத்தில் அதிகாலை 3. மணியள வில் தீப்பிடித்துக் கொண்டதாக அயலில் உள்ளவர்களால் தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு பருத்தித்துறைப் பொலிஸார் உடனடியாக விரைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தீயணைப்புப் படைப் பிரிவினரும் வரழைக்கப்பட்டு அதிகாலை 5 மணியளவில் தீ கட்டுப்படுத்தப்பட்டது.

மின்சாரக் கோளாறினால் இத்தீ ஏற்பட்டதா அல்லது யாராவது தீ வைத்தார்களா என்றகோணத்தில்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் மதுபான விற்பனைநிலையத்தின் முன் பகுதியில் பொருத்தப்பட்டிரு ந்த சீ.சி.ரி.வி. கமராக்களில் ஒன்று அருகில் உள்ள ஐயனார் கலட்டி வீதிப்பகுதியை கண்காணிப்பதற்காக பொருத்தப்பட்டிருந்தது. அது கீழ் நோக்கி திருப்பப்பட்டுள்ளதனால் யாராவது தீயை வைத் திருக்கலாம் என்ற சந்தேகமும் வலுப்பெற்றுள்ளது. இதைவிட இம்மதுபான சாலையை அகற்றுமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-60-19)

# கோத்தபாய மீதும் விசாரணை நடக்கும்


## பதறுகிறார் மகிந்த

தன் மீதும், தனது சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ மீதும் அமெரிக்காவில் போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரேசில் உள்ளிட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகளில், ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள போர்க்குற்ற வழக்கு தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"ஜெனரல் ஜெயசூரியவுக்கு எதிரான போர்க்குற்றச் சாட்டுகள் குறித்து, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் விசாரணை செய்யப்படும் போது, நானும் எனது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வும், கூட குற்றம்சாட்டப்படு வோம்.

இந்தநிலைமைகள் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றும் மகிந்த தெரிவித்தார். (இ)



(சி-9496)

# சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு 'டாக்டர்' பட்டம்

சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் திரு.செ.மோகனதாஸ் அவர்களுக்கு தமிழ்நாடு – மத்திய பல்கலைக்கழகம் வழங்கியுள்ள கௌரவ 'டாக்டர்' பட்டம் வழங்கும் விழா நேற்று முன்தினம் 01.09.2017 வெள்ளிக்கிழமையன்று ஆச்சிரம மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது.

தமிழ்நாடு – மத்திய பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி வி.கிருஷ்ணமூர்த்தி, துணைவேந்தர் பேராசிரியர் ஏ.பி.தாஸ் ஆகியோரின் கையொப்பத்துடன் கூடிய கௌரவ டாக்டர் பட்டமானது சுவாமிகளுக்கு 2016இல் வழங்கப்பட்ட போதிலும் அங்கு சென்று அதனைப் பெற்றுக் கொள்வதில் சுவாமிகள் காட்டிய தயக்கத்தின் காரணமாக 01.09.2017ல் இந்நிகழ்வு இங்கேயே நடைபெறும் வாய்ப்புக் கிட்டியது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன், பேராசிரியர் கந்தையா தேவராசா (முகாமைத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), கொழும்பு – தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர், பேராசிரியர் திரு.நா.யோகராசா ஆகியோர் சந்நிதி வேலவனின் திருவாசலிலிருந்து குடை – கொடி – ஆலவட்டத்துடன் ஆச்சிரம வாசலுக்கு அழைத்து வரப்பட்டு மண்டப வாசலில் பூரண கும்ப வரவேற்பு அளிக்கப்பட்டது.

மண்டப மேடையில். நடைபெற்ற வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து அதிபர் திரு.செ.பரமேஸ்வரன் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

அறிமுகவுரையை ஆசிரியை திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்களும் தலைமையுரையினை பேராசிரியர் திரு. நா.யோகராசா அவர்களும் நிகழ்த்தினர்.

துணைவேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்களதும் பேராசிரியர் கந்தையா தேவராசா அவர்களதும் சிறப்புரையினைத் தொடர்ந்து ஆச்சிரம சுவாமிகளுக்கு – பேராசிரியர்கள் இருவரும் இணைந்தபடி – கௌரவ 'டாக்டர்' பட்டத்தை வழங்கினர்.

பட்டம் வழங்கும் நிகழ்ச்சிக்காக பேராசிரியர்கள் இருவரும் பல்கலைக்கழக பட்டமளிப்பு சீருடையுடன் வந்திருந்ததுடன் ஆச்சிரம சுவாமிகளும் அதே சீருடையில் மண்டபத்தில் அடியார்கள் முன்தோன்றியது பார்வையாளர்கள் அனைவரையும் பரவசப்படுத்தியது. பல்கலைக்கழக பாரம்பரிய முறையிலான பட்டமளிப்பு நிகழ்வு நிறைவெய்தியதும் நமது இயல்பான வழமைப்படி – சுவாமிகளுக்கு பேராசிரியர்கள் மூவரும் மலர்மாலை அணிவித்து – பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து விழாவுக்கு வருகை தந்திருந்த முக்கியஸ்தர்களும் ஆச்சிரம அன்பர்களும் சுவாமிகளுக்கு மலர்மாலை அணிவித்து – சுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெற்றனர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை விழாவுக்கு முத்தாய்ப்பாக அமைந்தது. விழாவினை சிறப்புற நடத்தி வைத்த பேராசிரியர்கள் மூவருக்கும் சுவாமிகள் நினைவுப் பரிசினை வழங்கி கௌரவித்தார்.

ஏற்புரை நிகழ்த்திய ஆச்சிரம சுவாமிகள், நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் தனது உள்ளன்பான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார். ஆசிரியர் இரா.செல்வவடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் பட்டமளிப்பு விழா நிறைவுக்கு வர, ஆச்சிரமத்தின் வழமையான அன்னதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.



சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள்
**திரு.செ.மோகனதாஸ்** அவர்கள்





















சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுக்காலை இடம்பெற்றது.

உ
சிவமயம்

உடுப்பிட்டி வடக்கு


# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கும்பாபிஷேகம்

(03.09.2017 இன்று காலை 9.00 மணி)



கும்பாபிஷேக பிரதம குரு:
பாலகிருஷ்ண குருக்கள்

கும்பாபிஷேக நிகழ்வு
சிறப்புற நடைபெற
எல்லாம் வல்ல
அம்பாளின் அருளாசியை
வேண்டுகின்றோம்.



(9485)

பரந்தாமன் சிற்றுண்டிச் சாலை, கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

## இராசி பலன்

03.09.2017
(ஆவணி 18, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
துவாதசி முற்பகல் 11.14 மணிவரை
உத்தராடம் முற்பகல் 10.31 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
ஆவணி ஓணம், பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை, புனர்பூசம் | | ராகு, சுக், |
| சந் கேது | | | சூரி, புத, செவ் |
| | சனி | குரு | |

**மீனம்:** உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**மேடம்:** சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சிறிய வேலை ஒன்றிற்காக சற்று அலையும் நிலை ஏற்படலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்களை தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** சிந்தனை மிகுதியான நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் செல்லும்.

**சிம்மம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்:** வருமானம் அதிகரிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**துலாம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

# நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது

## ஈ.பி.டி.பியின் மகளிர் பேராளர் மாநாட்டில் டக்ளஸ்







(யாழ்ப்பாணம்)

பெண்கள் சமத்துவத்தை பேணக் கூடிய வகையில் மட்டுமல்லாது அவர்களது வாழ்வாதாரத்திலும் முன்னிலையை வகிக்கக் கூடிய தான கொள்கைத்திட்டத்தை ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தொடர்ச் சியாக முன்னெடுத்துவருகின் றது.

இத்திட்டத்தை நாம் எதிர் காலத்திலும் நிச்சயமாக முன் னெடுத்துச் செல்வோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா மகளிர் பேராளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி யின் மகளிர் பேராளர் மாநாடு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செய லகத்தில் வெகு பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரை யாற்றிய செயலாளர் நாயகம் டக் ளஸ்,

அரசியலில் பெண்களின் பிரதி நிதித்துவம் 25 வீதமாக இருக்க வேண்டும் என அரசு அறிவித் துள்ளது.

ஆனால் நாம் எமது கட்சியில் அந்த வகிபங்கை 50 வீதத்திற்கும் அதிகமாக மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். இந்நிலைமையில் பெண்களின் மேம்பாட்டுக்கான வகிபாகத்தை முன்னேற்றும் வகை யில் அனைத்து செயற்பாடுகளுக் கும் நாம் வழிகாட்டியாக இருந்து செயற்படுவோம்.

அந்த வகையில் பெண்கள் சமூகத்திற்கு வழிகாட்டும் வழி காட்டிகள் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

பெண்கள் தாயாகவும் தார மாகவும் இருந்து சமூகத்திற்கான பொறுப்பை உணர்ந்து பாடுபட வேண்டும்.

எனவே எதிர்காலத்தில் கிடைக் கக்கூடிய சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்தி எமது கட்சியின் பலத்திற்கு வலுச் சேர்ப் பார்கள் என நம்புகின்றேன்.

எனவே கட்சியை நம்பும் உங் களது எண்ணங்கள் நம்பிக்கை யானதாக அமையப் பெறும் என் றும் தெரிவித்தார். (இ-7)



சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகளுக்கு தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

# முன்னாள் போராளிகளின் அமைதியான வாழ்க்கையைச் சீரழிக்க முற்படாதீர்கள்

## அரச தரப்பிடம் சிவாஜிலிங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேசத்துக்கு கொடுத்த வாக் குறுதிகளை நிறைவேற்ற திராணி இல்லாத நீங்கள், முன்னாள் போராளிகளை பயமுறுத்துவதை நிறுத்துங்கள், என தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் போராளிகளின் அமைதியான வாழ்வை சீரழிக்க முற்படுவீர் களேயானால் அதற்கான விளைவு களை அனுபவிக்க வேண்டிவரும் எனவும் எச்சரித்துள்ளார்.

இராணுவத்தினர் தண்டிக்கப் பட்டால் முன்னாள் போராளிகள் தண்டிக்கப்படுவார்கள் என, அமை ச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்து தொடர்பில் கேட்டபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 12 ஆயிரம் போராளி கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அது சர்வதேச போர் முறைகளுக்கு அடிப்படையில் நடைபெற்றது.

போர்க்கைதிகளை விடுதலை செய்வது என்பது பொதுவான நியதி. ஆனால் போரின் போது, போர்க்குற்றங்களை புரிந்தவர்களை தண்டிப்பது என்பது வேறு நியதி. எனவே போர்க்கைதிகள் விடுவிக் கப்பட்டுள்ளார்கள். இதிலே சாதா ரண இராணுவ வீரர்களை தண்டிக்க வேண்டும் .குற்றம் சாட்ட வேண்டும் என சொல்ல முடியாது.

யார் யார் உத்தரவுகளை பிறப் பித்தார்களோ அதாவது அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அன்றைய பதில் பாதுகாப்பு அமைச்சரான இன்றைய ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு படைகளின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, படைகளின் தலைவர் சரத்பொன் சேகா உள்ளிட்ட ஏனைய படைத் தளபதிகள் மீது தான் போர்க்குற்றங் கள் குறித்து குற்றம் சாட்டப்படுகிறது.

இந்த நிலையில் உலகத்தி னுடைய விதிமுறைகளை மீறி அப்பட்டமாக இனவாதம் பேசுகி றவர்களை அமைச்சரவையில் வைத்துக்கொண்டு தமிழ் மக்க ளின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி எவ்வாறு தேசிய நல் லிணக்கத்தை கட்டியெழுப்பப் போகி றார்.எவ்வாறு புதிய அரசியல மைப்பின் மூலம் தீர்வு காணப் போகிறார் என்ற பலத்த சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் 200 க்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் விடு தலைக்கு தீர்வில்லை, 20 ஆயி ரத்துக்கு மேற்பட்ட காணாமல் போனவர்களின் பிரச்சினைக்கோ? குற்றமிழைத்தவர்களை விசாரிப் பதற்கோ?தண்டிப்பதற்கோ? வாய் திறக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அமைச்சரவையில் இரு ந்து கொண்டு சரத்பொன்சேகா சீரு டையுடன் ஜனாதிபதிக்கு பக்கத் தில் இருக்கும் காட்சிகள் வெளி யாகியிருந்தன.

இவற்றை எல்லாம் பார்த்து நாங்கள் அரசிடம் கேட்க விரும்பு கிறோம். நீங்கள் என்ன .இரட்டை வேடம் இட்டு நடிக்கிறீர்களா? இவ் வாறு இரட்டை வேடம் ஏற்கும் அசிங்கமான நிலைமைகளை வைத்துக்கொண்டு. நாங்கள் இராணுவ ஆட்சியை இல்லாமல் செய்து விட்டோம்.சிவில்முறையை கொண்டு வந்து விட்டோம் என்ற கூற்றை நாம் ஏற்றுக்கொள்வோம் என நம்புகிறீர்களா?

இன்று ஆட்சியில் உள்ளவர்கள் யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்கா வில் கூட்டத்தை கூட்டி, எமக்கு ஆதரவு அளியுங்கள் . நல்லாட்சியை கொண்டு வருகிறோம் என கூறி னீர்கள் இது தானா அந்த நல் லாட்சியின் இலட்சணம்?

சர்வதேசத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற திராணி இல்லாத நீங்கள், சர்வ தேசத்தின் அழுத்தம் இன்னமும் அதிகரிக்கும் போது தான் நீங்கள் அதை உணர்வீர்கள்.

ஒரு நாட்டுக்குள் தீர்வை காண் பதற்கு தயாராக உள்ளோம். ஆனால் அது இலங்கைக்குள் அரசியல் தீர்வு இல்லை என்று வரும் பொழுது போர்க்குற்றம், இனப்படுகொலை போன்றவற்றை சர்வதேச ரீதியாக அழுத்தம் கொடுத்து வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் பொது வாக்கெடுப்பை நடத்தக்கூடிய சூழ் நிலை கூட உரு வாகலாம்.

எனவே தேவையில்லாமல் வீண் புரளிகளையும் பயமுறுத் தல்க ளையும் விடுவதை நிறுத் துங்கள். 12 ஆயிரம் போராளி களின் அமை தியான வாழ்வை சீரழிக்க முற்படு வீர்களேயானால் அரசு அதற்கான விளைவுளை அனுபவிக்க வேண் டும் என எச்சரிக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தேரும் தீர்த்தமும்

ஈவினை மத்தி ஸ்ரீ கற்பக விநா யகர் திருகோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடந்து இடம் பெற்று வருகின்றது. நாளை 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி க்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-7)

## நூல் வெளியீடு

புதிய நீதி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் சி.கா.செந்திவேல் எழுதிய வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை என்ற அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூலின் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணி க்கு யாழ்ப்பாண நகரில் மணிக் கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்துள்ள ரிம்மர் மண் டபத்தில் இடம்பெறும்.

கலாநிதி சி. சிவசேகரம் தலை மையில் இடம்பெறும் இந் நிகழ் வில் வரவேற்புரையினைச் சட்டத் தரணி சோ.தேவராஜா , மதிப்பீட்டு உரைகளை அரசியல் பொருளா தார ஆய்வாளர் அகிலன் கதிர்கா மர் , எழுத் தாளரும் சமூக ஆய்வா ளருமான சி. கருணாகரன், சமூக விஞ்ஞான செயற்பாட்டாளர் மு. மயூரன் ஆகியோர் ஆற்றவுள்ள னர். (இ-3)

**சர்வதேச பாடசாலைகளில் கற்பித்தலுடன் ஆங்கில மொழி மேலதிக வகுப்புகளை நடாத்தி மாதத்திற்கு ரூ.50,000/= இற்கு மேல் வருமானம் உழைக்க உங்களுக்கும் விருப்பமா? அப்படியானால் உங்களுக்கொரு அரிய வாய்ப்பு.**

## பாடத்திட்டம்

## பாடநெறி காலம் 08 மாதங்கள்

துரித அழைப்பு 0715669641

■ ஆசிரியர் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படும் சகல பயிற்சிபெற்ற ஆசிரிய ஆசிரியைகளும் 8 மாதகால பயிற்சிக்கு இணைத்துக்கொள் எப்படுவர். வாரத்திற்கு 4 நாட்கள் பாடத்திட்டம் நடைபெறும். காலை 8.00 இலிருந்து மாலை 4.00 வரை நடைபெறும். அவசியமானவர்களுக்கு மட்டும் 60 நாட்கள் ஆங்கில டிப்ளோமா பாடநெறி இலவசமாக பெற்றுத்தரப்படும் (பாடத்திட்ட காலத்திற்கு மேலதிகமாக)

■ ஆங்கில பாடநெறி இலவசமாக பெற்றுத்தரப்படும் பயிற்சி காலத்தினுள் வேலைவாய்ப்பு பயிற்சிக்கால சர்வதேச பாடசாலை மற்றும் அரசு தனியார் இணை பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்படுவர். அது மட்டு மன்றி பயிற்சியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளுக்கு வேலைவாய்ப்பிற்காக அவரவர் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் தொழில் பெற்றுத்தரப்படும்.

*8 மாதகால பயிற்சியின் பின்னர் சர்வதேச பாடசாலைகளில் கண்டிப்பாக இணைக்கப்படுவார்கள்.

* மேலும் அனுமதிக்கட்டணத்திற்கு மேலதிகமாக மாதம் ஆசிரிய பயிற்சிக்காக ரூ.7800 வீதம் 8 மாதம் செலுத்த வேண்டும் பாடநெறி கட்ட ணத்தை ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும். அவசியமானவர்களுக்கு தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

### அடிப்படை தகைமை

* 18 - 35 வயதிற்கிடைப்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தியடைந்த மற்றும் க.பொ.த (உ/த) தோற்றிய சகல இலங்கை வாழ் இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம்

* ஒருநாள் பயிற்சி செயலமர்வின் பின்னர் தெரிவு செய்யப்படும் விண் ணப்பதாரர்களுக்கு எமது களனி அல்லது யாழ்ப்பாண (வசதியான நிலையத்தினை தெரிவு செய்யலாம்) கல்வி நிலையங்களில் 12 மாதகால பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

பதிவாளர் (பிரதான செயலகம்)

**புளூமிங் பட்ஸ் சர்வதேச ஈ கெம்பஸ் ஆசிரியர் பயிற்சி பாடசாலை**

இல.40, கண்டி வீதி, தலுகம, களனி

**Tel: 0112 912641 / 0754 933349**

**www.bloomingbudsecampus.com**

facebook.com/bloomingbuds international ecampus

---

கரவெட்டி பிரதேச செயலகத்தின்

# வடமராட்சி JOB FAIR & CAREER GUIDANCE

மாபெரும் தொழில் சந்தையும் தொழில் வழிகாட்டலும்

1st Day 08 September .09.2017

2nd Day 09 September

நேரம்: மு.ப 9.00 – பி.ப 5.00

இடம்: பிரதேச செயலகம் கரவெட்டி

சகல தொழில் வாய்ப்புள்ள துறைகளும் அமையப்பெற்ற

**மாபெரும் தொழில் சந்தை**

OCEAN UNIVERSITY OF SRI LANKA

union assurance · WUSC SRI LANKA · ESOFT Shaping Lives. Creating Futures. · Sri Lanka Insurance

University College of Jaffna · IDM · BCAS CAMPUS · SIKARAM ACADEMY

கரவெட்டி பிரதேச செயலகம் - வடமராட்சி

---

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:பட்டதாரி லண்டன் NOT PR<br>தொ.இ: B/7036 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 32<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA Reading<br>தொ.இ: G/7042 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 21செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BA, MA, / அரசதொழில்<br>தொ.இ: B/7037 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 28 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7043 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/7038 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BMS/ஆசிரியர்<br>தொ.இ: G/7046 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 34 சூரிசெவ் 7 இல்<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/7039 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 36செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/7054 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.





உடுவில் - மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 32 ஆவது நினைவு தினம் நேற்றுக்காலை யாழ். தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபியில் இடம்பெற்றது. நவாலியூர் க.கௌரிகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவஞ்சலி நிகழ்வில் சிரேஷ்ட பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலதிபர் அமரர் க.அமிர்தலிங்கத்தின் புதல்வரான வைத்தியகலாநிதி பகீரதன் (ரவி) உட்பட பலர் அஞ்சலி உரைநிகழ்த்தினர். அமரர் வி. தர்மலிங்கத்தின் புதல்வரான யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் நன்றியுரையாற்றினார். வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், கே.சயந்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்:- உ.சாளின்)

# கானல் நீரானது அனிதாவின் வைத்திய கனவு

## நீட் தேர்வால் சோகமானது தமிழகம்



"மருத்துவம் படித்து ஏழை மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே என் இலட்சியம்"

அரியலூர் மாவட்டம், செந்துறை அருகே உள்ள குழுமூர் கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சண்முகத்தின் மகள் அனிதா. இவர் அரச பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 1,176 மதிப்பெண் பெற்று மாநிலத்திலே முதல் மாணவியாக வந்தவர்.

மருத்துவம் படித்து ஏழை மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே தன் லட்சியம் என்று கூறியிருந்தார். ஆனால், அவரது கனவை சுக்குநூறாக சிதைத்துவிட்டது நீட் வடிவில் வந்த எமன்.

மாநில பாடத்திட்டத்தில் படித்து அதிக மதிப்பெண் பெற்ற அனிதாவுக்கு, நீட் தேர்வில் 700இற்கு 86 மதிப்பெண் மட்டுமே கிடைத்தது. நீட் தேர்வின் அடிப்படையில் கலந்தாய்வு நடத்தப்பட்டால், தனக்கு கிடைக்க வேண்டிய மருத்துவ இடம் கிடைக்காமல் போகும் என்று கூறி உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தார். ஆனால், அவரது சட்டப் போராட்டத்திற்கு பலன் கிடைக்கவில்லை. நீட் தேர்வின் அடிப்படையில் மருத்துவக் கலந்தாய்வு நடைபெற்றது.

மருத்துவம் படிக்க இடம் கிடைக்காததால் கடும் விரக்தியில் இருந்த அனிதா, தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். இது அவரது உறவினர்கள் மட்டுமன்றி தமிழக மக்கள் அனைவரையும் வேதனையில் ஆழ்த்தி உள்ளது.

### பொலிஸ் குவிப்பு

மாணவி அனிதா தற்கொலையில் மத்திய, மாநில அரசுகளை கண்டித்து சென்னை அண்ணாசாலையில் மறியல் போராட்டம் நடந்தது. மெரினாவிலும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

சென்னையில் திராவிடர் மாணவர்கள் கழகத்தை சேர்ந்த ஒரு மாணவி உட்பட 15 மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை சென்னை அண்ணாசாலையில் உள்ள அரசு பல்நோக்கு வைத்தியசாலை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக வந்தனர்.

பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியதால், அவர்கள் அண்ணாசாலையில் உள்ள பெரியார் சிலை முன்பு வீதிமறியல் போராட்டத்தில் குதித்தனர். அப்போது நீட் தேர்வை கொண்டு வந்த மத்திய, மாநில அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை அவர்கள் எழுப்பினர். வீதிமறியல் போராட்டம் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் 15 பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.




மாணவி அனிதா தற்கொலைக்கு மத்திய, மாநில அரசுகளே காரணம். எனவே இதனை கண்டித்து மாபெரும்போராட்டம்நடத்த மாணவ-மாணவிகள் பெருந்திரளாக மெரினா கடற்கரையில் குவிய வேண்டும் என்று வலைத்தளங்களில் செய்திகள் பரவின.

இதையடுத்து மெரினா கடற்கரையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டனர். போராட்டக்காரர்கள் யாரும் நுழைந்து விடாத வகையில் மெரினா கடற்கரை பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். மேலும் மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று மக்கள் அதிகார மையம் அறிவித்துள்ளது.

எனவே மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன்பு பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### சாலை மறியல்

அனிதாவின் இல்லத்திற்கு மாவட்ட கலெக்டர் மற்றும் பொலிஸ் அதிகாரி நேரில் சென்று ஆறுதல் கூறினர்.

அனிதாவின் தற்கொலையால் கடும் ஆத்திரம் அடைந்த அவரது உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அரியலூரில் வீதி மறியலில் ஈடுபட்டனர். இதேபோல்சென்னை, திருவாரூர், செந்துறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மாணவர்கள் வீதி மறியல் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என அவர்கள் முழக்கமிட்டனர். உயிரிழந்த மாணவியின் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.(8)

# உலர் உணவுப் பொருட்கள்



அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வறுமைக் கோட்டின் கீழுள்ள வரட்சியால் பாதிக்கப்பட்ட 1059 பேருக்கு உலர் உணவுப் பொருட்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலக அலுவலகத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறுவர் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஸ்ரீ தாமோதரராஜா , பாராளுமன்ற உறுப்பினர் சோமசுந்தரம் சேனாதிராஜா, வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ். சுகிர்தன், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-10-104)

# நளினி-முருகன் சிறையில் சந்திப்பு



வேலூர் சிறையில், நளினி - முருகன் சந்திப்பு நேற்று முன்தினம் நடந்தது. முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதே வழக்கில், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட இவரது மனைவி நளினி, வேலூர் பெண்கள் சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார். முருகன் உண்ணாவிரதத்தை கைவிட்ட நிலையில், நேற்று முன்தினம் நளினி - முருகன் சந்திப்பு நடந்தது.

இதற்காக, நேற்று முன்தினம் முற்பகல் 10.15 மணிக்கு, வேலூர் சிறை கண் காணிப்பாளர் சண்முக சுந்தரம் தலைமையிலான பொலிஸார் முருகனை, பெண்கள் சிறைக்கு பாதுகாப்புடன் அழைத்து வந்தனர். அங்கு இவர்கள் சந்திப்பு, ஒரு மணி நேரம் நடந்தது. அப் போது, முருகனை பார்த்ததும், நளினி கதறி அழுதார். முருகன் மனைவியை சமாதானப்படுத்தினார்.

பின், ஜீவ சமாதி குறித்த தகவல்களை நளினியிடம் பரிமாறிக் கொண்டார். இதையடுத்து, காலை, முற்பகல் 11.15 மணிக்கு, முருகன் மீண்டும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

வழக்கமாக, 30 நிமிடம் மட்டுமே சந்திப்பு நடக்கும் ஆனால், நேற்று முன்தினம் சிறப்பு ஏற்பாடாக, ஒரு மணி நேரம் இவர்கள் சந்திப்பு நடந்ததாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். (8)


# VACANCIES

பிரபல கல்லூரியின் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் புதிதாக திறக்கப்படவுள்ள கிளிநொச்சி கிளைகளுக்கு

1. ENGLISH TEACHER
2. COMPUTER TEACHER
3. ACCOUNTS CLARK

விரும்பும் கிளையினை குறிப்பிட்டு email மூலம் விண்ணப்பிக்கவும்

BRITISH COLLEGE OF EDUCATION

email.- britishcollegekandy@gmail


# உழைக்கும் போது செலுத்தும் வரி

## Pay As You Earn (PAYE)

அரசாங்கத்திணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள் , அதிகார சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்திலும் எந்த ஓர் ஊழியருக்கும்வழங்கப்படும் பணம்/பணம் அல்லாத நன் மைகள் மாதாந்தம் ரூ.62, 500 இற்கு மேற்படும் போது அவர்கள் தம்மை உழைக்கும் போது செலுத்தும் வரிக்கு (PAYE) பதிவு செய்து கொள்ள வேண் டும் என்பது சட்டக் கட ப் பாடாகும்.

இதற்காக பின்வரும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்தியக் காரியாலயத்தில் வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (Taxpayer Identification Number -TIN ) ஒன்றினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

உழைக்கும் போது செலுத்தும் வரிக்கு (PAYE) பதிவு செய்து கொள்ளல் வேண்டும். கொடுப்பனவுகள் யாவும் இலங்கை வங்கிக் கிளைகளில் மட்டும் அதற்கென வடிவமைக்கப்பட்ட வரி செலுத்தும் நறுக்கில் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 222 2076 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிராந்திய ஆணையாளர் கேட்டுக் கொண்டார். (இ)

# மரண அறிவித்தல்

## அமரர் தம்பையா தணிகாசலம்



தும்பளை பருத்தித்துறையினை பிறப்பிடமாகவும் இல. 552 இரத்தினபுரம், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தம்பையா தணிகாசலம் அவர்கள் கடந்த (01.09.2017) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா அகிலாண்டேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வரதலட்சுமி அவர்களின் பாசமிகு கணவரும் அமரர் அருணாச்சலம், அமரர் நடராசா, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் சுப்பிரமணியம், அமரர் ஆறுமுகம், அமரர் கந்தசாமி நடேசபிள்ளை, இரத்தினபூபதி, சரஸ்வதி, திலகவதி ஆகியோரின் மைத்துனரும், பிரதீபன், கோகுலதீபன், யவதீபன், கௌஷிகா, லக்ஸ்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விபூஷனாவின் அன்பு மாமனாரும் சேதா, நேமிதா அவர்களின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.09.2017) ஞாயிற்றுக்கிழமை இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத் தருகிறோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இரத்தினபுரம்
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

(406)

# நல்லூரிலிருந்து கொக்கட்டிச் சோலை வரை சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் யாத்திரை

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்த்திருவிழாவை முன்னிட்டு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் வரையான புனித திருத்தல தரிசன பாதயாத்திரை எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி எதிர்வரும் 10.09.2017 ஞாயிற்றுக்கிழமை கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது. (இ-3)

# அதிபரின் முக்கிய அறிவித்தல்

யாழ். கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மூன்றாம் தவணை கல்விச் செயற்பாட்டுக்குரிய முன்னாயத்தப் பணிகளுக்காக அனைத்து ஆசிரியர்களும் தரம் 4 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்கள் அனைவரையும் 05.09.2017 திகதி செவ்வாய்க் கிழமை காலை 7.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்கும்படி அதிபர் கே. குணசிங்கம் அறிவித்துள்ளார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 100 | 140 | 130 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 250 | 300 | 280 |
| தக்காளி | 150 | 200 | 120 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 40 | 80 | 80 |
| கோவா | 80 | 120 | 50 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 100 | 200 | 120 |
| பூசணி | 30 | 40 | 30 | 60 | 60 |
| புடோல் | 80 | 120 | 60 | 120 | 60 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 220 | 180 | 200 | 150 |
| பெரிய வெங்காயம் | 130 | 160 | 170 | 160 | 130 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 120 | 50 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 160 | 110 | 140 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 90 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 50 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 80 | 40 |
| குடைமிளகாய் | 140 | 200 | 80 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 20 | 40 | 80 | 80 |
| போஞ்சி | 180 | 250 | 120 | 200 | 140 |
| கத்தரிதும்புள்ள | 140 | 120 | 100 | 160 | 120 |
| கீரை-1பிடி | 40 | 20 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 120 | 140 | 150 | 280 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 75 | 60 |
| இராசவள்ளி | 200 | 450 | 250 | 300 | - |
| வெங்காயப்பூ | 200 | - | 150 | 180 | 250 |
| முள்ளங்கி | 80 | - | 20 | 40 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 40 | 30 | 60 | - |


A level's பரீட்சையின் பின்னர்.......

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவில்

Full / Part time

Diploma in Spoken English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.

Course Fee: Spoken English : 15250/= | Diploma in English : 21000/=

COMPUTER COURSES | MS-OFFICE | DIPLOMA | GRAPHIC | WEB

BRITISH COLLEGE OF EDUCATION

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 02 -4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. Tel: 081-4949590
13, 1st Chaphel Rd, Colombo-06. Tel : 011-2362775

Hot line : 0777-596148

BRITISH COUNCIL IELTS Students Registration Centre

IELTS Exam Centre

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்



உறவினர்களை ஆதரிப்பதில் ஒப்பற்ற குணம் படைத்த ரிஷப இராசி அன்பர்களே!

உங்கள் இராசிக்கு 8ஆம் இடமான தனுசுக்கும் 11ஆம் இடமான மிதுனத்திற்கும் உரியவர் குருபகவான். அவர் இதுவரை உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்தார். அவர் இப்பொழுது உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார்.

எட்டாமிடத்திற்கு அதிபதியான குரு, 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போவதால் பழமொழி. எனவே 6ஆம் இடத்திற்கு குரு வரும் பொழுது, பகை அதிகரிக்கும் என்பது பொதுவான நியதி. எனவே சீறும் குணத்தை மாற்றிக் கொண்டு பொறுமையோடு செயற்பட்டால் அருமையான வாழ்க்கை அமையும்.

குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே இராகு-கேதுக்களின் பெயர்ச்சியும் நடைபெற்றிருக்கிறது. தற்சமயம் உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் இராகுவும் 9ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில மாதங்கள் கழித்து, அதாவது 19.12.2017 அன்று உங்கள் இராசிக்கு 7இல் சஞ்சரித்து வந்த சனிபகவான், அஷ்டமத்துச் சனியாக அடியெடுத்து வைக்கப் போகிறார்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு குருவின் பெயர்ச்சிப் பலன்களை நாம் பார்க்க வேண்டும். குருவிற்குரிய சிறப்பு ஆலயங்கள் தமிழகமெங்கும் இருக்கின்றன. உங்கள் ஜாதகத்திற்கு ஏற்ற ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டால் வாழ்வில் வசந்தம் ஏற்படும்.

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக உங்கள் வாழ்க்கையில் மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரப்போகிறது. உங்களின் கனவுகளை நனவாக்கும்

## 02.09.2017-04.10.2018

வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொள்கைப்பிடிப்பைச் சில சமயங்களில் தளர்த்திக் கொண்டாலும், அது நன்மையாகவே இருக்கும். நெருக்கடி நிலைமாறும். நிகழ்காலத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பற்றாக்குறை பட்ஜெட்டிலேயே காலத்தை ஓட்டிய நீங்கள், இனி உற்றார், உறவினர்கள் மதிக்கத்தக்க விதத்தில் முன்னேறுவீர்கள். பொதுவாக குடும்ப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், கொடிகட்டிப் பறந்த பிரச்சினை படிப்படியாகத் தீரும். சுபநிகழ்வுகள் இல்லத்தில் நடத்தும் யோகம் உண்டு. கொடுத்த வாக்குறுதிகளை கடைசி நேரத்திலாவது நிறைவேற்றுவீர்கள்.

குருவின் பஞ்சம பார்வை உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் பதிவதால், பணியில் இருந்து வந்த தொய்வு நிலை அகலும். எடுக்கும் முயற்சிகள் எளிதில் வெற்றி பெறும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். தொழில் ரீதியாக வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட ஏற்ற இறக்க நிலை மாறும். தொழில் நிலையம் வைத்திருப்பதியான குரு பகவான் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப பச்சுமை அதிகரிக்கும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். முகத்தில் பொலிவும், வார்த்தையில் தெளிவும் உருவாகும் நேரமிது. விட்டுப் போன சொந்தங்களும் தட்டிப்போன வாய்ப்புகளும் வந்து சேரும். சேமிப்பால் சிகரத்தை தொடப்போகிறீர்கள். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!

உங்கள் இராசிநாதன் சுக்ரன் என்பதால், மகாலட்சுமி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். தற்சமயம் கண்டகச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், சனிக்கிழமை தோறும் எள் தீபம் ஏற்றுங்கள். சிறப்பு வழிபாடாக திருக் கடையூர் அபிராமி அம்மன் சமேத அமிர்தகடேஸ்வரரை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி, வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலேயே அமைகிறது. ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லை உருவாகும். அதை உடனே சரி செய்து கொள்வது நல்லது. எந்தக் காரியத்தைச் செய்தாலும் குடும்பப் பெரியவர்களைக் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.

திருமணமாகாதவர்களுக்கு வரன்கள் வந்து சேரும். தாய்வழி ஆதரவு எப்பொழுதும் போல இருக்கும். சகோதரர்கள் உங்கள் தொழிலுக்கும் உதவியாக இருப்பர். 6ஆம் இடத்தில் குரு வருவதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்க குடும்பப் பெரியவர்கள் சம்மதிப்பார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளால் நன்மை உண்டு. பௌர்ணமிகிரிவலம் வருவதோடு, வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமி வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். இராசிநாதன் சுக்ரனுக்கு பகை கிரகமாக குரு விளங்குவதால், அதன் வக்ர காலம் பொற்காலமாக அமையும். மனக் கலக்கம் அகலும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். பிளவுபட்ட குடும்பங்கள் ஒன்றிணையும். ஒரு சிலருக்கு சொந்த வீடு கட்டிக் குடியேறும் யோகம் உண்டு. வெளிநாட்டில் தங்கி பணிபுரியும் வாய்ப்பு சிலருக்கு கிடைக்கும். ஆனந்தம் மலரும் காலம் இது.

## ஆறில் வரும் குரு உங்களுக்கு அதிர்ஷ்டம் வழங்கப் போகிறது!

'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப, விபரீத ராஜயோக அடிப்படையில் நீங்கள் நினைத்துப் பார்க்க இயலாத நிகழ்வுகள் இனி நடக்கப் போகிறது. குரு பகவானைப் பொறுத்தவரை ஸ்தான பலத்தை விட, பார்வை பலம் அதிகம். அந்த அடிப்படையில் அதன் சிறப்பு பார்வை பதியும் இடங்களையும் நாம் பார்க்க வேண்டும். குரு தனது 5ஆம் பார்வையால் உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தையும் 7ஆம் பார்வையால் உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தையும் 9ஆம் பார்வையால் உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தையும் பார்க்கிறார். இந்த நேரத்தில் குரு பார்வையை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், உங்கள் இராசிக்கு மற்ற கிரகங்கள் சஞ்சார அடிப்படையில் சாதகமாக இருக்கின்றதா? என்பதையும் பார்க்க வேண்டும்.

குறிப்பாக தற்சமயம் உங்கள் இராசிக்கு 7ஆம் இடமான களத்திர ஸ்தானத்தில் சனி இருக்கிறார். 3ஆம் இடமான சகாய ஸ்தானத்தில் ராகு இருக்கிறார். 9ஆம் இடமான பிதுர்ரார்ஜித ஸ்தானத்தில் கேது இருக்கிறார். எனவே இவற்றையும் ஒப்பிட்டு சுய ஜாதக அடிப்படையில் திசா புத்தியின் பலமறிந்து, சிறப்பு பரிகாரங்களை செய்தால் செயற்பாடுகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். மேலும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருபகவானையும் வழிபடுவது நல்லது. பிரதோஷ நாளில் நந்தியையும், சிவன், உமையவளையும் வழிபடுவதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். இப்பொழுது 6ஆம் இடத்திற்கு வந்த குரு சீரான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்குமா? சிறப்பான பலன்களை வாரி வழங்குமா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

ஆறில் சஞ்சரிக்கும் குருபகவான்!

'6இல் குரு ஊரில் பகை' என்பது விதத்தில் இந்த குருப்பெயர்ச்சி அமைகிறது. குடும்பச்சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை. எதைச் செய்தாலும் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டுச் செய்வது நல்லது. அனுபவமிக்கவர்களின் ஆலோசனைகள் உங்கள் காரிய வெற்றிக்கு கைகொடுக்கும்.


சனி உங்களுக்கு யோகம் செய்யும் கிரகம் என்பதால், அது விலகும் நேரத்தில் குரு பலமும் கூடி வருவதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். பங்காளிகள் மற்றும் மூத்த சகோதர வர்க்கத்தினரின் பகை மாறும். உத்தியோகத்தில் திடீர் உயர்வு கிடைக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த சலுகைகளும் வந்து சேரும். சம்பளப் பாக்கிகள் மொத்தமாக வந்து சேரப்போகிறது. அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் உங்களுக்கு நல்ல காரியங்கள் நடைபெற வழிவகுத்துக் கொடுப்பர். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வந்து சேரலாம்.

கோடி நன்மை தரும் குருவின் பார்வை!
இரண்டினை குருதான் பார்த்தால்
எழிலான குடும்பம் வாய்க்கும்!
திரண்டதோர் செல்வம் சேரும்!
செல்வாக்கும் அதிகரிக்கும்!
பத்தினை குருதான் பார்த்தால்
பணம்தரும் தொழிலும் வாய்க்கும்!
பன்னிரண்டை குருதான் பார்த்தால்
பயணத்தால் பலன் கிடைக்கும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் குருவின் பார்வை பலத்தால் இரண்டாமிடம் புனிதமடைவதால் திரண்ட செல்வம் இனி தேடி வரப் போகின்றது.

வறண்ட சூழ்நிலை மாறும். வாய்ப்புகள் வந்து அலைமோதும். கொடுத்தக்கும் இடத்தில் ஏற்பட்ட வில்லங்கங்களும் விவகாரங்களும் வழக்குகளும் தீரும். உத்தியோகத்தர்கள் சுயதொழில் தொடங்க எண்ணுவீர்கள். அப்படித் தொடங்கும் தொழிலை, குடும்ப உறுப்பினர் பெயரில் தொடங்கி, மேற்பார்வை செய்தால் மேன்மையும் இலாபமும் கிடைக்கும். வெளிநாட்டு யோகம் ஒரு சிலருக்கு வாய்க்கலாம். சனிப் பெயர்ச்சிக்குப் பிறகு பயணங்களை உருவாக்கிக் கொண்டால் சென்ற இடத்தில் சிறப்பாகப் பணிபுரிய இயலும்.

குருவின் பார்வை 12ஆம் இடமான




அயன சயன ஸ்தானத்தில் பதிவதால், அந்த ஸ்தானம் புனிதமடைகிறது. அதுவும் சப்தம பார்வையாக குரு பார்க்கிறார். எனவே பிரிந்திருந்த தம்பதியர் இணையும் வாய்ப்பும் பிரச்சினைகளில் இருந்து விடுபடும் வாய்ப்பும் உண்டு. பொது சேவையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். இட மாற்றங்கள் இனிமை தருவதாக அமையும்.

குருவின் அதிசாரம்!

14.2.2018 முதல் 11.4.2018 வரை, குரு அதிசாரமாக விருச்சிக இராசிக்குச் செல்கிறார். இது உங்களுக்கு அதிக நன்மை வழங்கும் காலமாகும். உங்கள் இராசிக்கு 8.11 ஆகிய இடங்களுக்கு அதி


(தொடரும்)

## எமது அன்னையின் பத்தாவது ஆண்டின் நினைவுகூரல்

அமரர். திருமதி.

# சண்முகம்–காசுபதி

திதி:
சப்தமி
12.09.2017



நினைவு
தினம்:
03.09.2017

கடந்த 2007.09.03ஆம் திகதியன்று சிவப்பேறு பெற்று உய்ந்த எங்கள் அன்புத் தாயாரின் பத்தாவது ஆண்டின் நிறைவு தினமான இன்று அவரை என்றும் நினைந்தவாறு இறைவனை வேண்டி நிற்கின்றோம். என்றும் அம்மா எங்களோடு இருந்து எம்மை ஆசீர்வதித்த வண்ணம் இருக்கின்றார். மட்டுவின் மருதடி விநாயகரின் பூரண அருட் கடாட்சம் பெற்று நித்திய ஆன்மா சாந்தியுடன் உய்ந்திட அம்மாவை பாசமுடன் வணங்கி நிற்கின்றோம்.

1010/6, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி,யாழ்ப்பாணம்.

((F-9535)

திரு.திருமதி. ச.நந்தகோபால்
குடும்பத்தினர்.(ருபி ஜுவலறி)


# வீதியோரத்திலிருந்து எறிகணை மீட்பு



வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் மண்டு மண்டுப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையிலுள்ள வீதியோரத்தில் நேற்று துப்புரவு பணி மேற்கொண்ட போதே இந்த எறிகணை மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்ததையடுத்து பொலிஸார் உடனே அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டு அதிரடிப் படையினருக்கு தகவல்களை வழங்கியுள்ளனர். இதனையடுத்து இந்த எறிகணை மீட்கப்பட்டது. (இ)


## மணமகள் தேவை

சொர்க்கம் திருமணசேவை- கனடாவில் வசிக்கும் 33 வயதுடைய இந்து சமயத்தைச் சேர்ந்த மணமகனுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அழகான மணமகளைத் தேடுகிறோம், லண்டனில் வசிக்கும் 30 வயதுடைய மணமகனுக்கு அழகான மணமகளை தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: TP & Viber
0014166661855, 0016475043336

## தேவை

கொழும்பை அண்மித்த பகுதிகளில் உடனடி தொழில் வாய்ப்பு. 17-50 வயதுடைய இருபாலாரும் தேவை. (1200,1500,2000)என நாள், கிழமை, மாதச் சம்பளம் உண்டு. (ஜேம், பிஸ்கட், சொசேஜஸ், யோகட் ஐஸ் கிறீம், செம்போ, பருப்பு, பிளாஸ்ரிக், சோயா, நூடில்ஸ், டயர், Pvc,தேயிலை, காசில்ஸ் என பல தொழிற்சாலைகளுக்கு வேலையாட்கள் (பெங்கிங்/ மெசின் லேபர்) மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

உடனடித்தொடர்புக்கு: 435/2/18 Funtain Plaza
Maradana Colombo
077 843 0179

## தேவை

உணவுப்பொருட்கள், வாசனைத் திரவியம், பிளாஸ்ரிக் பொருட்கள், பலசரக்கு வகை, ஆடை தொழிற்சாலை என பல தொழிற்சாலைகளுக்கு. 18-60 வயதுடைய இருபாலாரும் வேலைக்கு தேவை. உற்பத்தி/ லேபல்/பெப்கிங்/ ஸ்டோர்ஸ் லேபர்/ செக்ருட்டி பிரிவுகள். உணவு, தங்குமிடம் தொழிலிற்கு அமைய இலவசம். தமிழ், முஸ்லிம் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு:- 077 431 0304

## வேலைவாய்ப்பு

தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், துறைமுகம் விமான நிலையம், மற்றும் கன்ரக் சன்சைட் மற்றும் ஹொட்டல் தொழிற்சாலைகள் என பல்வேறு துறைசார் வேலைவாய்ப்புக்கள் எம்மிடம். இன்றே பதிவுக்கு முந்துங்கள். உணவு, தங்குமிடம் வழங்கப்படும். தமிழ், முஸ்லிம் விசேடம் கல்வி அறிவு தேவையில்லை.

380/b Railway Road,
Vaalaichenai Oddmawadi
077 126 2571



## SHANTHIHAM
Association for Health & Counselling

# VACANCY-DIRECTOR

Shanthiham, Association for Health and Counselling is a Non Governmental organization, based in Jaffna, committed to support the well being and positive mental health persons, families and communities through providing psychological and community based psychosocial services including trainings, publications and capacity building.

Shanthiham is interested to receive applications for the above position.

A person with sound knowledge and skills in Psychosocial work and Management, who will officially represent Shanthiham and take care of all the activities of the institution, and work under the supervision of the Management Council.

The post will be a full time job, based in the Head Office, but demands frequent field visits and attending meetings, workshops and conferences in all parts of the country.

The candidate should possess a Bachelor or Post Graduate Degree preferably in subjects relevant to Psychology and/or Sociology. S/He should possess minimum of 10 years experience in implementing Psychosocial Projects in the field. A good command of both English and Tamil is mandatory in addition to a thorough working knowledge of computers.

The candidate should have the natural qualities of an administrator and a team member, and will be able to handle any crisis situations in Human Re-source Management. S/He should have the interest to develop their knowledge, attitudes and carrier.

Remuneration (including the employee benefits) could be negotiated based on experience and knowledge.

Duration -1 year contract subject to renewal.

Applications for the above posts should be sent along with the CV and the letter of motivation to the following address on or before 09.09.2017. You may also send your application via email but please send the original by post.

The President, Shanthiham,
No.8, Katpahavinayagar Lane,
Off Kachcheri Nallur Road,
Jaffna.

Telephone No: 021 222 3338
E-mail address: shanthiham@yahoo.com

(C-9499)



## IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your Academic / General

# IELTS

Full time / Part time

Next exam date in Jaffna. 30th Sep. 2017

idp www.idp.com/srilanka

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1 B1

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்

ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி — Deutsch

நெதர்லாந்து மொழிப் பாடநெறி — Dutch

பிரான்ஸ் மொழிப் பாடநெறி — French

BRITISH COLLEGE of Education — More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன



மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் ஏற்பாட்டில், மடு வலயக் கல்விப் பணி மனை பிரிவுக்குட்பட்ட பாடசா லைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நேற்று முன்தினம் கற்றல் உபகர ணங்கள் வழங்கி வைக்கப் பட்டன.

மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமை யில், தட்சணா மருதமடு ம.வி. பாடசாலையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வின் போது 150 மாணவர்களு க்கு கற்றல் உபகரணங் கள் வழங்கி வைக்கப்பட் டன.

இந் நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்தந்தை, மாணவர்கள் மற்றும் மன்னார் புனர்வா ழ்வு அமையத்தின் உறுப்பி னர்களும் கலந்து கொண்டி ருந்தனர். (8)

# வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக பண மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

வவுனியாவில் பல இளை ஞர்களிடம் கப்பல் துறை முகத்தில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக தெரிவி த்து பல இலட்ச ரூபா பணம் மோசடி செய்த நபரை வவு னியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர் பில் முல்லைத்தீவைச் சேர் ந்த சிவனேஸ்ராஜா வினோத் குமார் எனும் 29 வயதான இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர், வவு னியா - பூவரசங்குளத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை விஸ்வதீபன் என்பவரிடம் கொழும்பு கப்பல் துறைமுக த்தில் வேலை வாய்ப்பு பெற் றுத் தருவதாக தெரிவித்து 1,586,000 பணத்தை பெற் றுக் கொண்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், இதன் பின் னர் அவரை வவுனியா மாவ ட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் வவு னியா பொலிஸார் தெரிவித் துள்ளனர். (8)

# பெயர்ப் பலகை திறந்து வைப்பு

தருமபுரத்தில் அமைந்து ள்ள பிராந்திய மதுசார புனர் வாழ்வு மையத்தின் பெயர்ப் பலகை திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கி ழமை கிளிநொச்சி மாவட்ட உளநல பொறுப்பு வைத்திய ரும், பதில் பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பா ளருமான மா.ஜெயராசா தலைமையில் நடைபெற்று ள்ளது.

கடந்த 2014.10.31 முதல் இயங்கி வரும் இந் நிலைய த்தில் இதுவரை மது நோயால் பாதிக்கப்பட்டு மதுவிற்கு அடிமையாகியிருந்த 290 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் சிகிச்சை பெற்று முற்றாகக் குணமடைந் துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

மேலும்,காலத்தின் தேவை யான இந்த நிலையத்தினை அமைப்பதற்கான நிதியுதவி கனடா தமிழ் மருத்துவர் சங்கம் அன்பு நெறி, சர்வ தேச மருத்துவ சுகாதார நிறு வனம், டொரன்றோ பல்க லைக்கழகம் ஆகிய அமை ப்புகளால் கிளிநொச்சி உள நலச் சங்கத்தினூடாக வழங் கப்பட்டுள்ளது. (8)

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

வவுனியா உக்குளாங் குளத்தில் நேற்று காலை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். லவன் தலை மையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சிவில் பாது காப்புக்குழு, பிரதேசசபை ஊழியர்கள், பொலிஸார், பொதுமக்கள் ஒன்றிணை ந்து வவுனியா உக்குளாங் குளம் பகுதிகளில் டெங்கு நுளம்பினைக் கட்டுப்படுத் தும் விஷேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகிய இச் செயற்றிட்டம் மாலை 4.30 மணிவரையும் இடம் பெற்றது. உக்குளாங்குளத்தில் டெங்கு பெருகும் இடங்களை இனங்கண்டு அவற்றை அழித்தல், மேலும் டெங்கு நுள ம்பு பெருக்கத்தினை குறைக் கும் நடவடிக்கை மேற்கொள் ளல், தமது இருப்பிடங்களை துப்புரவு பணிகள் மேற்கொள் ளாத உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளல் போன்ற நடவடி க்கை இடம்பெறவுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோத கர்கள் தெரிவித்துள்ளனர்.

துப்புரவற்ற டெங்கு பர வும் இடங்களென கண்டறி யப்பட்ட பகுதிகளுக்கு எச்சரி க்கையாக சிவப்பு அறிவிப்பு க்கள் விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்றிட்டமானது இன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# வரட்சி தொடர்பான கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வரட்சி தொடர் பான பிரதேசங்களுக்குநீர் வழங்கல் தொடர்பான கலந் துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.பிரணவநாதன் தலைமையில் கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

நீர் வழங்கல் நகர திட்டமிடல் வடிகால் அமை ச்சர் ரவூப் ஹக்கீமினால் முல்லை மாவட்டத்திலுள்ள திணைக்கள அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரை யாடல் மாவட்ட செயல கத்தில் இடம்பெற்றுள்ளது. இதில் வரட்சியான பிரதேச ங்களுக்கு நீர்த் தாங்கிகள் மூலமும் குழாய் மூலமும் நீர் வழங்குவது தொடர் பாகவும் தீர்மானங்கள் எடுக் கப்பட்டதோடு முஸ்லிம் முல் லைத்தீவு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட் டுள்ளது.

இதற்கு வன்னிப்பாரா ளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வடமாகாண பிரதி அவைத் தலைவர் வ.கமலே ஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-15)

# இலங்கை விமானப்படையின் கண்காட்சியும் சாகச நிகழ்வும்



இலங்கை விமானப்ப டையின் 66 ஆவது ஆண்டை முன்னிட்டும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாகவும் வவுனியா கூட்டுப் படைத் தலைமையகத்தில் விமா னப்படையின் கண்காட்சி யும், சாகச நிகழ்வும் நடை பெற்று வருகின்றன.

இக் கண்காட்சியினை இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி ஆரம்பித்து வைத் தார். இராணுவ அணி வகு ப்பு மரியாதையுடன் விமா னப்படைத் தளபதி வரவே ற்கப்பட்டதுடன், கண்காட்சி யின் ஆரம்ப நிகழ்வுகளை யும் விமானப் படை வீரர் களின் சாகசங்களையும் பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை தொடக்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை 3 தினங்கள் இக் கண்காட்சியும் சாகசமும் நடைபெறவுள்ளன. இதில் விமானப்படை வீரர்கள் பர சூட்டில் இருந்து குதித்தல், தீ அணைத்தல், விமானத்தின் பகுதிகளை காட்சிப்படுத்தல், விமான இயக்கம் பற்றி வெளி ப்படுத்தல், விமானங்களின் சாகசப் பறப்புக்கள், விமான ப்படை வீரர்களுடன் இணை ந்து நாய்களின் சாகசங்கள் என விமானப்படையுடன் தொடர்புடைய பல விடய ங்கள் காட்சிப்படுத்தப்பட்டு ள்ளன. ஆரம்ப நிகழ்வில் விமானப்படை உயர் அதிகா ரிகள், பொலிஸார், விமானப் படை வீரர்களின் குடும்பங் கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (8-250)

# நாவற்காடு கிராமத்தில் அறநெறி வகுப்புக்கள் ஆரம்பம்



(முல்லைத்தீவு)

முள்ளிவளை வடக்கு பகுதியில் உள்ள நாவற்காடு கிராமத்தில் 100 இற்கு மேற் பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள் இக் கிராம மக்கள் தங்கள் பிள்ளைகளு க்கு அறநெறி கற்பிக்கவேண் டும் என்றும் கிராமத்தில் அறநெறி வகுப்பு தொடங்க வேண்டும் என்றும் கடந்த கிழமை முள்ளியவளை கலைம களகள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற சர்வமதகூட்டத் தில் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக கல்வியால் புரட்சி கர மாற்றத்தை கொண்டு வரு வோம் என்ற முல்லைத் தீவு அமைப்பின் ஏற்பாட்டில் நாவற்காடு கிராமத்தில் சிறுவர்களிடையே அறம் சார்ந்த செயற்பாட்டினையும் மாணவர்களின் எதிர்கா லத்தையும் வளப்படுத்த வேண் டும் என்ற நோக்கோடு இவ் அறநெறி வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறநெறி வகுப்பின் ஊடாக நாவற்காடு கிரா மத்தில் வசிக்கும் 40 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இந்த அறநெறி வகுப்பு ஊடாக பயன டையவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (3-8)





# இரு மொழிப் பாடல் வெளியீடு

கலைஞனும் கிராம சேவை யாளருமான தனேஷின் வரியிலும் குரலிலும் உருவான தமிழ், சிங்கள இருமொழி வீடியோ பாடல் நேற்று மாலை கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மாநாட்டு மண்டபத் தில் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த எட்டு மாதகால மாக பல கலைஞர்களின் உழைப்பில் உருவான "என் வாழ்க்கையில்" என்ற தமிழ் சிங்கள இருமொழிப் பாடலை பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ஜெராணியும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி முல்லைத்தீவிற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிகண்ணவும் கலந்து கொண்டு வெளியிட்டு வைத் தனர்.

இந் நிகழ்வில் படைப் பாளிகள், கலைஞர்கள், நலன்விரு ம்பிகள் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (8-312)

# வாலிபர் ஒன்றுகூடல்



தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் 2017ஆம் ஆண்டின் வாலி பர் ஒன்றுகூடல் நேற்று கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்றது. நேற்றுக் காலை 9 மணியளவில் கிளிநொச்சி கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஆரம்பமான குறித்த வாலிபர் ஒன்றுகூடலில் கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் 150 இற்கு மேற்பட்ட வாலியர்கள் கலந்து கொண்டனர். "பொன் தரும் கிறிஸ்து" எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற குறித்த வாலியர் ஒன்றுகூடல் தென்னிந்திய திருச்சபை நிறை வாழ்வு மையத்தின் அனுசரணை யில் இடம்பெற்றது. தென் னிந்திய திருச்சபையின் பேரா யர் அதி வண கலாநிதி டானி யல் செ. தியாகராஜாவின் ஆலோசனைக்கமைய யாழ். ஆதீனத்தின் வாலிபர் செயற் பாட்டு ஒருங்கிணைப்பாளர் வண பிதா ஜோன் லிங் கேஸ்வரனின் வழிநடத்த லில் கொழும்பு திருச்சபை வாலிபர்களால் நடத்தப்பட்டது.

குறித்த வாலிபர் ஒன்று கூடலில், ஆலோசனைகள், வேதாகம படிப்புக்கள், விளை யாட்டுக்கள், குழு செயற்பாடு கள் உள்ளிட்ட பல விடயங் கள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வொன்றுகூடலில் யாழ். பேராயர், தென்னிந்திய திருச் சபை தூத்துக்குடி திருமண் டலத்தின் சிறுவர் ஊழியத் தின் பாரியநண்பர் குழுவின் செயலாளர் வண ஸ்ரேல் ஆகியோர் ஆலோசனைச் செய்திகளை வழங்கினர்.

அண்மைக் காலமாக நாட் டில் வாள்வெட்டு, போதைப் பொருள் பாவனை உள்ளி ட்ட பல மோசமான நிலை களில் இளம் சமூகம் சென்று கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறு திருச்சபைகள் ஊடாக ஒன்றுகூடல்களை ஏற்பாடு செய்து வாலிப பரு வத்தினை நல்ல முறையில் கட்டியெழுப்பும் பட்சத்தில் நல்லதொரு சமூகத்தினை கட்டியெழுப்ப முடியும் என பேராயர் அதி வண கலாநிதி டானியல் செ.தியாகராஜா நம்பிக்கை தெரிவிக்கின் றார். (8-312)

எல்லோரும் நீதியை விரும்புகின்றனர்...
ஆனால் அடுத்தவர் விடயத்தில் மட்டும்.

*- ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# போர்க்குற்றம் நடந்ததற்கு இந்தச் சாட்சியம் போதாதா?

தெனாலிராமன் கதைகள் என்றால் எவரும் தெரியாது என்று சொல்லமாட்டார்கள். அந்தளவுக்கு ராமன் கதைகள் சிறப்புமிக்கவை.

எங்கள் சிறுவயதில் பாடப்புத்தகத்தில் இடம் பெற்ற தெனாலிராமன் கதை இது.

அயல்வீடுகளில் இரண்டு பெண்கள் வசித்து வந்தனர். ஒரு பெண் தன் வீட்டில் கோழிகள் வளர்த்து வந்தார்.

அந்தக் கோழிகளை அடுத்த வீட்டுப் பெண் திருடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தார்.

இதனால் கோழி வளர்க்கும் அந்தப் பெண் மிகுந்த கவலையும் வேதனையும் அடைந்தார்.

கோழித் திருட்டு எல்லை தாண்டிப் போயிற்று. இனியும் பொறுக்க முடியாது என்ற நிலையில் தெனாலிராமனிடம் தன் குறையை முறையிட்டார் அந்தப் பெண்.

இரண்டு பெண்களையும் ஒன்றாக வரும்படி தெனாலிராமன் உத்தரவிட, மறுநாள் இரண்டு பெண்களும் தெனாலிராமனின் சபைக்குச் சென்றனர்.

ஐயா! இவள்தான் என் கோழிகளைத் திருடி எனக்குப் பெரும் துன்பம் இழைக்கிறாள் என்றார் கோழி உரிமையாளர்.

அதற்கு மற்றப் பெண் ஐயா! நான் திருடவே இல்லை. இந்தப் பெண் வேண்டுமென்றே என் மீது பழி சுமத்துகிறார் என்றார்.

இருவரின் கருத்துக்களையும் கேட்ட தெனாலிராமன் கோழி திருடியதை நேரில் கண்ட சாட்சிகள் உண்டா? என்று வினாவினார். சாட்சிகள் எதுவும் இல்லை ஐயா! என்றார் கோழி உரிமையாளர்.

அப்படியானால் நான் எதுவும் செய்ய முடியாது. நீங்கள் போகலாம் என்றார் தெனாலிராமன்.

கோழி உரிமையாளர் கவலையுடனும் மற்றைய பெண் மகிழ்வோடும் திரும்பினர். சிறிது தூரம் அவர்கள் சென்றதும் அதோ அந்தப் பெண்ணின் தலையில் கோழிச் செட்டை இருக்கிறது என்றார் தெனாலிராமன். இதைக் கேட்டதும் கோழிகளைத் திருடிய பெண் பதறியடித்துக் கொண்டு தன் தலையைக் கையால் தட்டி கோழிச் செட்டை இருப்பது போன்ற பிரமிப்பில் செயற்பட்டார்.

உடனடியாக மீண்டும் இரண்டு பெண்களையும் அழைத்த தெனாலிராமன் கோழி திருடிய பெண்ணைப் பார்த்து உண்மையைச் சொல் என்றார்.

அந்தப் பெண் கோழி திருடியதை ஒப்புக்கொண்டு இழப்பீட்டுத் தொகையை வழங்கவும் சம்மதித்தார்.

கண்கண்ட சாட்சி இல்லை என்பதற்காக குற்றத்தை மறைக்க முடியுமா என்ன? தலையில் கோழிச் செட்டை என்றதும் கோழி திருடிய அந்தப் பெண் அதிர்ந்து போனதில் இருந்தே திருடியது தெரிந்ததல்லவா! இதுபோலத்தான் எல்லாமும்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய இழைத்த போர்க்குற்றத்துக்கு சாட்சி சொல்ல நான் தயார் என்கிறார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

பார்த்தீர்களா! முன்னாள் ஜெகத் ஜெயசூரிய போர்க்குற்றம் இழைத்தார் என்பதற்கான சாட்சியம் அவருக்கு முன்னைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவால் உறுதி செய்ய முடிகிறது.

ஆக, நடந்த வன்னி யுத்தத்தின் போது தமிழின அழிப்பு நடந்தது; தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர்; ஒட்டுமொத்தத்தில் போர்க்குற்றம் இழைக்கப்பட்டது என்பதற்கான சாட்சியங்கள் படைத்தரப்பிலேயே உள்ளது.

இதை உறுதி செய்வதாக முன்னாள் இராணுவத் தளப்தி சரத் பொன்சேகாவின் சாட்சியம் அமைகிறது.

# உரிய தீர்வை வழங்காததால்தான் விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகியது

## அமீரின் மகன் பகீரதன் உரை

(யாழ்ப்பாணம்)

1972ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது தமிழினத்தின் அபிலாசைகளை அமரர் வி.தர்மலிங்கம் தெளிவாக கூறியிருந்தார். எனினும் அது தோல்வியில் முடிந்தது. இவ்வாறு எத்தனையோ சந்தர்ப்பங்களை சிங்கள தலைவர்களுக்கு கொடுத்தும் கூட எமது மக்களுக்கு சரியான தீர்வை வழங்காததனால் தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகுவதற்கு காரணமாக அமைந் தது என அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 32ஆம் ஆண்டு நினைவு தினம் தாவடியில் அமைந்துள்ள அவரது நினைவு தூபியில் நேற்று காலை 7 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு அஞ்சலி உரையாற்றும் போதே வைத்திய கலாநிதி அமிர்தலிங்கம் பகீரதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், செப்டெம்பர் இரண்டாம் திகதி வரலாற்றில் முக்கிய ஒரு தினமாகவும். இன்றைய தினம் (நேற்று) தான் எமது ஆயுத போராட்டம் எந்த வழியில் சென்று கொண்டிருக்கின்றது என்பதை அனுமானிக்க முடிந்தது. அன்று தான் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து மக்களோடு செயற்பட்ட இரண்டு மாபெரும் தலைவர்கள் கொலை செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வீதியில் வீசப்பட்டனர்.

எமது அரசியலில் தர்மலிங்கம் அவருடைய அரசியல் என்பது மிகவும் அழுத்தமான ஒரு பதிவை ஏற்படுத்தி விட்டு சென்றுள்ளது. தர்மலிங்கம் அவர்கள் முதலில் கிராம சபையில் உறுப்பினராகி அதன் பின்னர் 1952 இல் தந்தை செல்வாவின் தேர்தல் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார். அது தான் அவருடைய முதல் அரசியல் பிரவேசம்.

அதன் பின்னர் தனி சிங்கள சட்டம் 1956இல் வந்த போது தமிழரசு கட்சியுடன் மிகவும் நெருக்கமாகி ஐக்கியமாகி பணியாற்ற தொடங்கினார். இறக்கும் வரை அந்த நெருக்கம் இருந்தது. தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலை கூட்டணியாக பரிணாமம் பெற்ற போதும் தொடர்ந்து செயற்பட்டு வந்தார். பாராளுமன்றத்தில் எமது இனத்துக்காக அவரது குரல் ஓங்கி ஒலித்தது.

1972 இல் மாவை சேனாதிராசா, காசிஆனந்தன், வன்னிஆனந்தன் உட்பட 42 இளைஞர்கள் சிறையில் இருந்த போது அவர் பணத்தை கொண்டு சென்று ஒவ்வொரு இளைஞர்களின் வீட்டிலும் கொடுத்து வந்தார். 1972 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது தமிழினத்தின் அபிலாசைகளை அமரர் தர்மலிங்கம் தெளிவாக கூறியிருந்தார். எனினும் அது தோல்வியில் முடிந்தது.

அப்படி எத்தனையோ சந்தர்ப்பங்களை சிங்கள தலைவர்களை கொடுத்தும் கூட எமது மக்களுக்கு சரியான தீர்வை வழங்காததனால் தான் தமிழீழ போராட்டம் ஆரம்பமாகுவதற்கு காரணமாக அமைந்தது. பல சந்தர்ப்பங்களில் டட்லி-செல்வா ஒப்பந்தம், பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் தோல்வியில் முடிவடைந்திருந்தன.

ஆகவே இன்று நடைபெற்று கொண்டிருக்கும் பேச்சு வார்த்தைகள் ஒரு தீர்வை தர வேண்டும் என இறைவனை நம்புவதுதான் ஒரே வழி. எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள் உயிர்த் தியாகம் செய்தும் நிம்மதி இல்லாமல் வாழ்ந்து வருகின்றோம். இந்த இனம் வாழ வேண்டும் என்றால், எங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்பட்ட ஒரு தீர்வு வேண்டும் என பகீரதன் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)

# சிரமதானம்

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து வீதிகளும் பொதுமக்களின் உதவியுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை சிரமதானம் செய்யப்படும்.

இச்சிரமதானத்திற்கு அனைவரும் குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு நிலையத்தலைவர்தே.ரமணதாசன் அறிவித்துள்ளார்.(இ-3-134)

# யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பவளவிழா மண்டப திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகளின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட பவளவிழா மண்டப திறப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி புத கிழமை முற்பகல் 10.50 மணி முதல் 12.30 மணி வரை கல்லூரி வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# கும்பாபிஷேகம்

இளவாலை நாவலடி ஞான வைரவர் ஆலய வருடாந்த கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூஜைகள் இடம் பெற்று அன்னதானம் வழங்கப்படும். (இ-10-104)

# ஆன்மீக நிகழ்வுகளில் இன்று சிங்கமும் சிறுவனும் பிரசங்கம்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டை மானாறு செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையின் அனுசரணையில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரை செல்வச் சந்நிதி ஆலய அறநெறி மாணவிகளின் பேச்சு , இந்தியாவைச் சேர்ந்த பெரியாழ்வார் இராமனுசதாசர் அருள்நிதி நா. யாகவர்ணனின் சிங்கமும் சிறுவனும் எனும் தலைப்பிலான பிரசங்கம் என்பன இடம் பெறும். (இ-3)

# போதைப்பொருளிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் சவால் விசேட அதிரடிப்படையிடம்

(கொழும்பு)

போதைப் பொருளில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் சவால் விசேட அதிரடிப்படையிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கட்டுக்குருந்த பயிற்சிப் பாடசாலையில் நேற்று நடை பெற்ற விசேட அதிரடிப் படையின் 33 ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்து கொண்டபோதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

தற்பொழுது பயங்கரவாத அச்சுறுத்தல் நாட்டில் இல்லை. இருப்பினும் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கு விசேட அதிரடிப்படையைத் தயார் செய்ய வேண்டும் என்றும் அவர் இதன் போது தெரிவித்தார். (இ-7)

# வர்த்தக நிலையங்களுக்கு செவ்வாய்க்கிழமை விடுமுறை

(கரணவாய்)

செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவை முன்னிட்டு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை (05. 09.2017) நெல்லியடி வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் சுரேரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-60)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**முகூர்த்தப் பத்திரிகை எந்நாளில் எழுதுவது?**

நட்சத்திரம்: அச்சுவினி, புனர்பூசம், அத்தம், சுவாதி, திருவோணம், அவிட்டம், சதயம்.

கிழமை: புதன், வியாழன், வெள்ளி

திதி: பௌர்ணமி, துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, துவாதசி, திரயோதசி . (தொடரும்)




# திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

தன் நாட்டுக்கு வருகை தந்த நாரத முனிவரை நல்லபடியாக வரவேற்றான் ஆகாசராஜா. ஆசனம் அளித்து அமரச் செய்தான். அன்புடன் விருந்தளித்தான். தாம்பூலம் தரிக்கச் செய்தான். இசைக்கச்சேரி எனவும் எழிலார்ந்த நங்கைகளின் நாட்டியம் எனவும் ஒரு குறைவுமின்றி உபசாரம் செய்தான். அம்மட்டோடு நில்லாது தன் தாரத்துடன் அவர் தம் கால்களில் விழுந்து வணங்கி ஆசிகளும் பெற்று எழுந்தான்.

அரசனின் கவனிப்பில் யாதொரு களங்கமும் இல்லை. ஆனாலும் இதென்ன அவன் வதனத்தில் களிப்புக்குப் பதிலாக வாட்டம் மிகுந்து காணப்படுகிறதே!

மன்னா! உத்தம மனைவியையும் உயர்ந்த குடி மக்களையும் ஒப்புயர்வற்ற மகளையும் பெற்றவன் நீ. இருந்தும் உன் முகம் வாடியிருக்கிறதே... (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட் கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 5மணிவரை யாழ். பிரதேசத்தில் மானிப்பாய் ஒரு பகுதி, அரசடி, கட்டுடை, பிப்பிலி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பூவரசங் குளததிலிருந்து செட்டிகுளம் வரை, செட்டிகுளம் வைத்திய சாலை, செட்டிகுளம் தொலைத் தொடர்பு நிலையம், செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# மோட்டார் சைக்கிள் விபத்...

சேர்ந்த சிவபாலசிங்கம் சிவராஜ் (வயது 29) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

காரைநகரில் உள்ள முருகன் கோவில் திருவிழாவுக்காக அப்பகுதியில் குறித்த இளைஞர்கள் தண்ணீர் பந்தல் அமைத்திருந்தனர். இந்நிலையில் நேற்றைய தினம் காலை 7.45 மணியளவில் தயிர் வாங்குவதற்காக மோட்டார் சைக்கிளில் குறித்த இரு இளைஞர்களும் மிக வேகமாக சென்றுள்ளனர்.

அப்போது விளான் பகுதியில் இவர்கள் ஓட்டிச்சென்ற மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே உள்ள மதகில் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் அவருடன் பின்னால் இருந்து சென்ற மற்றைய இளைஞர் படுகாயமடைந்து நிலையில் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் மரண விசாரணையை தீவக மரண விசாரணைஅதிகாரி நாகராசா தியாகராசா மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது.(செ-9-30)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தபெயர் நிர்மாணம் | மதிப்பிட்டுத் தொகை | வேண்டப்படும் ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D07/INF/211 | மதகு (Box Culvert)நிர்மாணமும், வீதி புனரமைத்தலும், பரந்தன் | 3.35 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or C7 Highway | ரூபா 34,000.00 வங்கிப்பிணை 18/12/2017வரை | ரூபா 2,000.00 |
| 2 | KN/DPS/D11/Edu/RGTM/329 | கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை வகுப்பறை கட்டட நிர்மாணம் | 2.166மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or C7 building | ரூபா22,000.00 வங்கிப்பிணை 18/12/2017வரை | ரூபா 2,000.00 |
| 3 | KN/DMC/MIT I/2017/28(2) | கோடுக்குளாய் வீதி புனரமைத்தலும், மதகு (Box Culvert) நிர்மாணமும், இயக்கச்சி | 8.01மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா 81,000.00 வங்கிப் பிணை 01/01/2018 வரை | ரூபா 2,000.00 |
| 4 | KN/DPS/D14/RM/439-1 | கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க நவீன நெல் குற்றும் ஆலைக்கான உபகரணங்கள் வழங்கலும் பொருத்துதலும் தொடர்புடைய கட்டுமான வேலைகளும் a) அரிசியாலை கட்டட நிர்மாணமும் புதிய நெல் காயவிடும் தளம் அமைத்தலும் | 6.7மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 building | ரூபா 92,000.00 வங்கிப் பிணை 01/01/2018வரை | ரூபா 2,000.00 |
| | | b) நெல் குற்றும் ஆலைக்கான உபகரணங்கள் வழங்கலும் பொருத்துதலும் | - | - | | |
| 5 | KN/DPS/D14/RM/439-2 | கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியத்தின் அரிசியாலையை நவீனமயப்படுத்துவதற்கான உபகரணங்கள் வழங்கலும் பொருத்துதலும் தொடர்புடைய கட்டுமான வேலைகளும் | - | | ரூபா 80,000.00 வங்கிப் பிணை 01/01/2018வரை | ரூபா 2,000.00 |

01. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.
I.நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட்(ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
II.இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
III.நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்திற்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
IV.ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்க கூடாது.
02. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285357, பக்ஸ் இல:-0212283966)
03. கேள்வி ஆவணங்களை 04.09.2017 ஆம் திகதியிலிருந்து 15.09.2017 ஆம் திகதிவரை முற்பகல் 9.00மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
04. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
05. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 18.09.2017 ஆம் திகதி பிற்பகல் 02.30மணிக்குமுன் கிடைக்கப் பெறல் வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
06. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
07. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் (Pre bid meeting) 13.09.2017 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்
08. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சுந்தரம் அருமைநாயகம்,
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம். (சி-9503)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பரீட்சை தோற்றிய மாணவிகளே! உங்களுக்கான பெறுபேறுகள் வரும் வரை உள்ளதான காலத்தை பயனுள்ளதாக்குவீர்! மற்றும் வெளிநாடு செல்ல தயாராகி வரும் மங்கையரே! சுயதொழில் செய்ய விரும்பும் நங்கையரே! ஆர்வமுள்ள மகளீரே!

உங்களுக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீசா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும். (ஆ-9519)

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார், மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 10-09-2017 ஞாயிறு காலை 10.00மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 11-09-2017 திங்கள் காலை 10.00 மணி

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகள் அதனை உறுதிப்படுத்தும் பட்சத்தில் கட்டணத்தில் 20% கழிவு வழங்கப்படும் .

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

# மரண அறிவித்தல்



## காந்தலிங்கம் (துரை) பிரதீபன் (கமல்)

01-ம் வட்டாரம் மண்டைதீவு

மண்டைதீவை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட காந்தலிங்கம் பிரதீபன் அவர்கள் நேற்று முன்தினம் (01.09.2017) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காந்தலிங்கம் -பத்மாதேவி தம்பதிகளின் அன்பு மகனும், பிரதிபா (கனடா), சஞ்ஜீபா, ஜானி (கனடா), ஜான்ஸி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருள்மோகன் (கனடா), சிவகுமார், தர்மராஜா (கனடா), சதன் (கனடா), ஆகியோரின் மைத்துனரும், கனிஸ்கன், த்ரிஸிக்கன், பிரணக்ஸி, லோஜக்ஸி, அபினித், ரிஸ்நித், ஏவ்ரி, அடிற்றி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மண்டைதீவு, தகவல் : குடும்பத்தினர்
01-ம் வட்டாரம். (416) தொ.பே: 0779792719, 0768838283

## இராணுவத்தி...

கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

போர்க் குற்றச்சாட்டில் சிக்கியிருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய செய்த இனப்படுகொலைகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் சாட்சியமளிப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

இறுதிப் போரிலும், போருக்குப் பின்னரும் ஜெனரல் ஜகத் ஜயசூரிய குற்றச் செயல்களை மேற்கொள்வதற்கான ஆசீர்வாதங்களும், உதவிகளும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் இருந்தே வழங்கப்பட்டதாகவும், அதற்கான ஆதாரங்கள் அனைத்தும் தன்னிடம் இருப்பதாகவும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் நேற்று கேள்வி எழுப்பினர். இதன்போது பதிலளித்த அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஜகத் ஜயசூரிய மீது வழக்குத் தாக்கல் செய்யுமளவிற்கு அவரின் கடந்தகால செயற்பாடுகள் அமைந்திருக்கவில்லை என வலியுறுத்தினார்.

முன்னாள் இராணுவத்தளபதி ஜெகத் ஜயசூரியவிற்கு எதிராக அரச சார்பற்ற ஓர் அமைப்பினால் பிரேசிலில் யுத்தக் குற்றச்சாட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது ஒரு புதுமையான விடயம். அவ்வாறு குற்றச்சாட்டு சுமத்தப்படுமளவிற்கு அவர் கடந்த காலங்களில் செயற்படவில்லை. அவ்வாறு அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட வேண்டுமாயின் அந்த காலத்திலேயே சுமத்தப்பட்டிருக்கவேண்டும். எனினும் பொன்சேகாவிடம் மேலதிக தகவல்கள் ஏதும் காணப்படுகின்றதா எனத் தெரியவில்லை. அவரை ஒரு யுத்த வீரனாகவே நாம் பார்க்கின்றோம். அரசாங்கம் ஜெகத் ஜயசூரியவிற்காக முன்நிற்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளதுடன். குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளது. யுத்த வீரர்களை காட்டிக்கொடுக்க அரசாங்கம் தயாரில்லை. இராணுவம் பொது மக்களை இலக்கு வைத்து யுத்தத்தை நடத்தவில்லை. அவர் ஒரு யுத்த வீரர். விசேட காரணங்கள் எதுவும் பொன்சேகாவிடம் காணப்படுகின்றதா என தெரியவில்லை. இது அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை. இது பொன்சேகவின் தனிப்பட்ட கருத்து. பலர் பல கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். எனினும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றார். (செ-11)

## கஞ்சா கொண்டு...

அவதானிக்கப்பட்டு அதனுள் இருந்த 2 கிராமும் 350 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு சிறைச்சாலை ஊழியர்கள் தகவலை தெரிவித்த நிலையில் குறித்த பெண் உடனடியாக கைது செய்யப்பட்டதுடன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (செ-9)

## மரத்தில் இருந்து...

வர் ஐந்து நாட்களின் பின் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

உடுப்பிட்டி இமையாணன் மேற்கை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசையா பத்மநாதன் (வயது 57) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் தனது வீட்டின் அருகே இருந்த வளவினுள் மாங்காய் பறிப்பதற்காக கடந்த ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி சென்றுள்ளார்.

அப்போது மாமரத்தின் கிளை முறிந்து பிரஸ்தாப நபர் கீழே விழுந்துள்ளார். இவரை காணவில்லை என இவரது மனைவி தேடிச் சென்ற போது இவர் கீழே விழுந்து அனுங்கியபடி கிடந்துள்ளார். உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் மாலை 7 மணியளவில் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

ஐந்து நாட்கள் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவருடைய மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## காணாமல்போன...

இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக அவ்ரால் கரைக்கு திரும்ப முடியவில்லை. இவரது படகு 25 கடல் மைல் தூரம் தெற்கு நோக்கி பயணித்த போது ஆழ் கடல் மீன்பிடி தொழிலுக்கு வந்திருந்த நீர்கொழும்பு தென்பகுதி மீனவர்கள் இவரை மீட்டு உணவு குடிதண்ணீர் வழங்கி படகின் இயந்திரத்தையும் சீர்செய்துள்ளனர். பின்னர் இயந்திரத்திற்குரிய எரிபொருளினையும் வழங்கி அவரது படகை தமது படகில் கட்டி இழுத்து வந்து பருத்தித்துறை கடற்பரப்பிற்கு அண்மையில் கொண்டு வந்து சேர்ப்பித்துள்ளனர்.

இதன்பின்னர் நேற்று காலையில் கரை திரும்பியுள்ள பிரஸ்தாப நபர் உடல் பலவீனமடைந்த நிலையில் தற்பொழுது ஊறணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். (செ-60,87)

## உற்பத்திதுறை...

உற்பத்தி துறை வீழ்ச்சியடைந்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் மேல் நீதிமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் இடம்பெற்றபோது இலங்கையின் உள்நாட்டு உற்பத்தி 17 சதவீதமாக காணப்பட்டது.

தற்போது அது 10 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையின் இலவச சேவைகளை மேலும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தில் வருவாய் அதிகரிக்கப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## கிளிநொச்சியில்...

ள்ளது. இதன்போது ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் பூநகரி இரணைமாதாநகர் கிராமத்தைச் சேர்ந்த ரூபன் லட்டிசியா பிரதீபா (வயது 40) என்ற பெண் பலியானதுடன், அவரின் கணவர் பீற்றர் ரூபன் (வயது 42) என்பவர் கடுமையான பாதிப்புக்குள்ளாகி முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பி.ப 2.30 மணியளவில் மழை பெய்துகொண்டிருந்த போது இருவரும் வீட்டின் அருகிலுள்ள கிணற்றில் நீர் எடுத்துக் கொண்டிருந்துள்ளனர். அப்போது திடீரென ஏற்பட்ட மின்னல் தாக்கத்திலேயே இச் சம்பவம் ஏற்பட்டுள்ளது. பலியானவர் ஆறு பிள்ளைகளின் தாய் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

தமது பூர்வீக நிலமான இரணைத்தீவுக்கு செல்ல வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களில் மேற்படி இருவரும் உள்ளடங்குகின்றனர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (செ-15,60,312)

## ஆயுதம் ஏந்தாத...

தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறு ப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 32ஆம் ஆண்டு நினைவு தினம் தாவடியில் அமைந்துள்ள அவரது நினைவு தூபியில் நேற்று காலை 7 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு அஞ்சலி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்.

கடந்த ஓகஸ்ட் நான்காம் திகதி இந்த நாட்டின் உயர் நீதிமன்றத்தால் முக்கியமான தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இலங்கை தமிழரசு கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கோருவது பிரிவினையை என ஒருவர் தொடுத்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. தள்ளுபடி செய்த வேளையில் சமஷ்டி கோரிக்கை பிரிவினை அல்ல. சமஷ்டிக்கும் ஒற்றையாட்சிக்கும இடையிலான வேறுபாடு என்ன என்பது தொடர்பில் தெளிவாக கூறியிருந்தது.

ஆனால் அதற்கும் மேலாக சென்று தமிழ் மக்கள் சர்வதேச சட்டத்தில் மக்கள் என்ற அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை கோருவதன் பிரதி பலனாக அதனை உள்ளகமாக பிரயோசனை படுத்துவதற்காக சமஷ்டியை கோருகின்றார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. கனேடிய உயர் நீதிமன்ற தீர்ப்பையும் அதற்கு ஆதாரமாக காட்டியுள்ளார்கள். முதல் தடவையாக உயர் நீதிமன்றம் மூன்று சிங்கள நீதியரசர்களை கொண்ட நீதியரசர் குழாம் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு அதன் அடிப்படியில் அவர்கள் சமஷ்டி கோரிக்கையை சட்ட பூர்வமானது என்ற தீர்ப்பு வெளிவந்துள்ளது.

இந்த தீர்ப்பு தற்போதையை அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்துள்ளது. சமஷ்டி அடிப்படையில் தான் எங்களுக்கு தீர்வு வேண்டும். ஆனால் சமஷ்டி என்பதன் அடிப்படை குணாதிசயங்கள் வர போகும் அரசியலமைப்பிலே இருந்தாக வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோம். இந்திய அரசியலமைப்பு சட்டத்தை சமஷ்டி என வர்ணிக்கவில்லை. அது சமஷ்டியை போன்றது என உச்ச நீதிமன்றம் கூறியிருந்தது.

இப்போது அது சமஷ்டி என தீர்க்கமாக கூறியுள்ளது. அந்த குணாதிசயங்கள் மிகவும் முக்கியமானவை, இந்த குணாதிசயங்களோடு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். என்னும் சில நாட்களுக்குள் இடைக்கால அறிக்கை வெளிவரும். அப்போது பல சந்தேகங்களுக்கு விளக்கம் தெரிய வரும் என்பது எனது நம்பிக்கை. ஆனால் இறுதியாக வர போகும் அரசியலமைப்பு சட்டம் மக்களுடைய அனுமதிக்காக அவர்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டு தான் ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என்பதில் எள்ளளவும் விலகவில்லை.

அரசியலமைப்பு சட்ட உருவாக்கத்தில் இது நல்ல சந்தர்ப்பம் என கூறுகின்றார்கள். சர்வதேசத்திலும் இன்று இருக்கும் ஆதரவு போன்று என்றும் இருந்ததில்லை. ஒரு நாட்டை கூட நாங்கள் குறித்து சொல்ல முடியாது. இவர்கள் தமிழர்களுக்கு எதிரானவர்கள் என. இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடைய நியாயமான அரசியல் அபிலாசைகள் ஒரு அரசியலமைப்பு ஊடாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதில் அனைத்து நாடுகளும் ஒன்றாக இருக்கும் சூழ் நிலை இது.

இவ்வாறான சூழ்நிலை எப்போதும் எமக்கு இருந்ததில்லை. இது போருக்கு பின்னதாக உருவாகிய சூழ்நிலை. ஆகவே சர்வதேச அனுசரணையும் முழுமையாக இருக்கும் நிலையில் இந்த நீண்ட அரசியல் நோக்கை அடைவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். எனினும் பல தடைகள் வரும். ஒவ்வொரு தடைகள்வரும்போது விட்டு வந்துவிடுங்கள், இது பயனற்றது என பிதற்றுபவர்களின் சொற்களை கேட்டு மக்களின் இருப்பை விட்டுவிட முடியாது.

அது இறுதியிலே கிடைக்காமல் போனால் அது வேறு கதை. அந்த நிலை வரும் வரையில் அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் பாரிய பொறுப்பு இன்றைய தமிழ் தலைமைகளிடத்தில் சுமத்தப்பட்டுளளது. தலைவர் சம்பந்தனும் அவருடன்செயற்படுகின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களும் திறமையாக தான் செயற்பட்டு வருகின்றார்கள். மேலும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு செல்லும் போது எங்களுடைய மக்களை இப்படி கொன்றார்களே என பொங்கி எழுந்து பேசுகின்றோம்.

ஆனால் இப்படியான நினைவு நிகழ்வுக்கு வரும் போது அவ்வாறான உணர்ச்சி பேச்சுக்களை நாம் பேசவில்லை. யார் செய்தார்கள் என தீர்மானித்து விட்டு தான் நாங்கள் பேசுகின்றோம். ஆயுதம் எடுத்து போராடும் சந்தர்ப்பங்களில் இது நிகழ்வது சகஜம். அதனாலே ஆயுதம் எடுத்து போராடியது தவறு என்று நான் சொல்லவில்லை. நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட போது நீதிமன்றத்தில் நின்று சொன்ன கூற்று, சென்ற வருடம் நாங்கள் சேர்ந்து ஒரு தீர்மானம் எடுத்தோம். நாங்கள் ஆயுத போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என தீர்மானத்தை எடுத்தோம். அந்த சூழ் நிலையிலே வேறொரு மாற்று வழி இருக்கவில்லை. ஆதலால் ஆயுதம் ஏந்தி போராடுவது என தீர்மானித்தோம். எனினும் இதனை நீங்கள் விளங்கி கொள்வீர்கள் என நான் நம்பவில்லை.

ஆகவே குறித்த சூழ்நிலையிலே குறித்த சந்தர்ப்பத்திலே குறித்த ஒடுக்குமுறையின் நேரத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை 30 வருடங்களின் பின்னர் விமர்சிக்க முடியாது. ஆனால் 30 நாற்பது வருடங்களின் பின்னர் அதன் விளைவுகளை சீர்தூக்கி பார்த்து இனி அப்படி செய்வதா? இல்லையா? என்கின்ற ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. இப்படியான நிகழ்வுகளுக்கு வரும் போதாவது நாங்கள் எமது இந்த முயற்சி வெற்றிபெறா விட்டாலும், அடுத்தது என்ன செய்வது என்று தீர்மானிக்கின்ற போது ஆயுதம் ஏந்தாத ஒரு போராட்ட வடிவுக்குள் நாங்கள் நிற்க வேண்டும் என்ற தீர்க்கமான முடிவை நாங்கள் எடுக்க கடமைபட்டுள்ளோம் என அவர் தெரிவித்தார். (செ-4)


## வேலையாட்கள் தேவை

மருந்தகம் ஒன்றுக்கு மருந்தாளர் (Pharmacist) மற்றும் பெண் உதவியாளர் தேவை. அனுபவம் மிக்கவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-

0773056076, 0776309155

(சி-9521)


## மரண அறிவித்தல்

### ஈஸ்வரன் உருத்திராதேவி



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.129, உதய நகர் மேற்கு செல்வா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஈஸ்வரன் உருத்திராதேவி 31.08.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் சின்னப்பிள்ளை (கற்பகம்) அவர்களின் அன்பு மகளும், ஈஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், சௌந்தரபாண்டியன் மற்றும் பாக்கியம் ஆகியோரின் மருமகளும், ஜனார்த்தனன், கஜீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகவதி தில்லைநாயகி (பணியாளர் பொது வைத்தியசாலை-கிளிநொச்சி), பாலசுப்பிரமணியம் நைல்ஸ் (லண்டன்), காலஞ்சென்ற பாலச்சந்திரன் (வீரமணி) மற்றும் பாலகிருஷ்ணன், டானியல் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ராஜேந்திரம் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்-வவுனியா), ரவீந்திரன்-ஜேர்மனி, கருணாகரன்-ஜேர்மனி, சித்திரா-டென்மார்க், பிரேமலதா-வினோதினி ஆகியோரின் மைத்துனியும், தனுஷா, தனுஷன், தர்சன், நேருஷா ஆகியோரின் பெரியம்மாவும், சரோன், கரோன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.09.2017 இன்று ஞாயிறு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று மு.ப 10.00 மணிக்கு திருநகர் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

0771381758-டானியல்
0773640473

(சி-9520)

தகவல்:-
கற்பகம்-அம்மா

அச்சகத்துறையில் நியாய விலை உயரியதரம்

விசிட்டிங்காட் பில்புத்தகம் லேபல்கள் நினைவுமலர்கள் பருவகால மலர்கள் சஞ்சிகைகள் போஸ்டர்கள் லேட்டபாட் சான்றிதழ்கள் அழைப்பிதழ்கள் CD கவர்கள் CD ஸ்ரிக்கர்கள்

எந்தவொரு பிறிண்டிங் நிறுவனமும் வழங்காத, வழங்கமுடியாத நியாய விலை

சகலவிதமான பிறிண்டிங் வேலைகளுக்கும்

கொழும்பு பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ் வீதி. 077 1974 875

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சைவ உணவகத்துக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. ஆண்/பெண் இரு பாலாருக்குமான தொழில்வாய்ப்பு.

01. குசினி வேலையாட்கள்
02. சுத்திகரிப்பாளர்
03. மரக்கறி வெட்டுபவர்கள்
04. உணவு பரிமாறுபவர்கள்
05. காசாளர்
06. பில் கிளாக் (சிட்டை போடுபவர்)
07. பாசல் பொதியிடல்

தொடர்பு: 077 791 7753, 021 222 2373, 076 614 8303

(415)

யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் புதிய ஆங்கில டிப்ளோமா பிரிவு ஆரம்பம்



இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில டிப்ளோமா பாடநெறி!

Diploma In English

காலம்: 06 மாதங்கள்

புதிய பிரிவு ஆரம்பம்

09.09.2017, 8.30 A.M

(சனி/ஞாயிறு தினங்களில் காலை 8.30 - 10.30 மணி வரை இடம்பெறும் )

முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறை!

E-CITY COLLEGE OF ENGLISH

இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Tel :0212217106 / 0770610271 /0774924166

web: ecitycollege.lk

உயர் தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு பாடநெறியின் 20 வீதம் கட்டணக் கழிவு வழங்கப்படும்.

(C-9495)

பல்கலைக்கழக பட்டதாரி ஆனாலும் வேலைவாய்ப்பு உத்தரவாதம் உண்டா?

க.பொ.த. உயர்தரத்தில் என்ன பெறுபேறு பெற்றாலும் பல்கலை அனுமதி கிடைத்தாலும் – கிடைக்காவிட்டாலும்

6 மாதத்தில் வேலைவாய்ப்பு & வெளிநாட்டு விசா ஏற்பாட்டுடன்

Fast Track (1-3 months) | Dip. Level (3-6 months) | Adv.Diploma (6-12 months) | HND/Degree (2-3 years)

COURSES IN BUSINESS, TOURISM, HOSPITALITY & MEDIA STUDIES



Diploma in BUSINESS & MARKETING MANAGEMENT
Diploma in FRONT OFFICE MANAGEMENT
Diploma in RESTAURANT MANAGEMENT
Diploma in TRAVEL & TOURISM MANAGEMENT
Diploma in SPOKEN ENGLISH
Diploma in PHOTOGRAPHY
Diploma in JOURNALISM & MEDIA STUDIES

100% JOB GUARANTEED

FREE Computer Basics & ENGLISH

SIKARAM ACADEMY Business • Hospitality • Media SCHOOL of HOSPITALITY

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 077 36 16 798

இல.175. முதலாம் குறுக்குத்தெரு (வேம்படிச் சந்தி Pizza Hut அருகில்) யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 00 11 www.sikaram.lk

(C-9494)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401 மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

(சி-9480)

## வேலையாட்கள் தேவை

சோ றூம் வேலையாட்கள் தேவை. சுன்னாகத்தில் புதிதாக திறக்கப்படவிருக்கும் சோ றூம் ஒன்றுக்கு உடனடி வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

தொடர்பு: 077 868 9375, 076 833 5634

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(294)

ROYAL BIOLOGY
Brown road,Neeraviyadi-Jaffna (Neer to Science World)

Tamil & English medium classes for A/L
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்

Con : 0713438442
www.facebook.com Royal-Biological-Sciences-Jaffna

2019 A/L- Unit-03 Evolution and diversity of organisms அங்கிகளின் உயிர்ப்பல்வகைமையும் கூர்ப்பும்

2018 A/L- Unit 11- Heredity (genetics) பாரம்பரியம்

2018- Day class (for2017 August-A/L Students)
தமிழ் மொழிமூலம்- Monday to Friday morning 6:15 am - 7:30 am
English medium - Monday to Friday Evening 1:45 pm- 2:45pm

Group or Personal classes also available ★★★★★

க.கலைவாணன (Spl.in.BiologicalSciences)

(267)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● ஐரோப்பிய நாடுகளிலும் ... உண்டு
● ... சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9462)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல்யமான நகைக்கடை ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: 0758507802

(C-9506)

NEW SCIENCE WORLD VICTORY MUST

NEW SCIENCE WORLD

தொடர்புகளுக்கு : 021 221 6690 (7.00 am - 4.00 pm)

G.C.E(A/L) 2018

Day Classes

திங்கள் – வெள்ளி

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குகன் / திரு. R. குமரன் (நேரம் - 11.30am- 1.30pm) |
| இரசாயனவியல் | திரு. டயஸ் / திரு. K.T. சிவகுமார் (நேரம் - 9.30am- 11.30am) |
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன் / திரு. N.T. கஜேந்திரன் (நேரம் - 7.30am- 9.30am) |
| இணைந்த கணிதம் | திரு. S.S. செந்தில்நாஜ் (நேரம் - 7.00am) / திரு. T. சஞ்சீவன் (நேரம் - 7.30am- 9.30am) |

❊ நிறுவன ஒழுக்க விதிகளை மீறும் மாணவர்கள், பெற்றோர்களுக்கு அறியப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்படுவர்.

ஆரம்பம் 05.09.2017 செவ்வாய் காலை 07.00 மணி

அமைவிடம்: நாவலர் வீதி, பிறவுண் வீதி சந்தி, யாழ்ப்பாணம். பிறவுண் வீதி சந்தியிலிருந்து 75 M இடது புறமாக அமைதியான சூழலில்.

(சி-9482)

Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்

புதிய சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.

கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293

(277)

V2 TRAVELS

PASSPORT

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9464)

அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

(C-9472)


## நியாயமான அரசியல்....

பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் போராட்டத்தை எடுத்து கொண்டால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போராட்ட இயக்கங்களில் தாங்களாகவே இணைந்து கொண்டு உயிர் தியாகங்களை செய்திருந்தார்கள். அதே போல் போராட்டத்தில் மாட்டுப்பட்டு அப்பாவி மக்களும் கொல்லப்பட்டிருந்தார்கள். அமரர் அமிர்தலிங்கம், எனது தந்தை உள்ளிட்ட பலர் இந்த போராட்டத்தின் பெயரால் கொல்லப்பட்டவர்கள்.

இவர்கள் உண்மையில் ஏன் கொல்லப்பட்டார்கள் என்று பொதுமக்களுக்கும் தெரியாது. கொன்றவர்களுக்கும் தெரியாது. இது உண்மை. இவ்வாறாக எங்கள் போராட்டத்தில் சரியாகவும், பிழையாகவும் தமது உயிர்களை இழந்துள்ளார்கள். இவ்வாறு உயிரிழந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய வேண்டும் என்றால். நியாயமான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும்.

ஆனால் அந்த அரசியல் தீர்வு நியாயமானதாக மக்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாக இருக்க வேண்டும். அதன் மூலம் தான் மக்களுடைய ஆத்மா சாந்தியடையும் என அவர்மேலும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் அரசியல் வாதிகள், பொது அமைப்புக்கள் சார்ந்தோர், கல்வி அறிஞர்கள் புத்திஜீவிகள், பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்(செ-4)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378


வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்


நாதம் 132

வள்ளுவர் ஆண்டு 2048 | 03.09.2017 | தொலைபேசி : 021 222 3378



# கடலோடு கண்ணீர்








# சர்வமதம் கூடியது எதற்கு ?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

## சர்வமதக் கூட்டத்திலும் அதர்மத்தனம் தெரிந்தது



இறைவன் நம்மை எந்த சமயம், எந்த மொழிக்கெனப் படைத்தானோ அந்தச் சமயத்தில் அந்த மொழியில் எங்கள் வாழ்வை நடத்துவதுதான் இறை தர்மமாகும். என்னை சைவசமயத்திற்கென இறைவன் படைத்துவிட்டான். எனவே நான் சைவ சமய நெறி முறைகளை, அதன் சடங்கு முறைகளைப் பின்பற்றி வாழ்வது தான் தர்மமாகும்.

நான் பிறந்த தாய்ச்சமயத்தில் இருந்து மதம் மாறி எனது தாய்ச் சமயத்தை இழிவுபடுத்த நினைப்பது மிகப்பெரும் பாவச்செயலாகும். மதம் மாறுவதும் மதம் மாற்றுவதும் மிகப் பெரும் கொடும் பாவம்.

எல்லாச் சமயங்களும் அன்பு, தர்மம், அறம் என்பவற்றைப் போதிக்கின்றன. பாவம் புண்ணியம் என்பதனூடாக மனித வாழ்வை ஒழுங்குபடுத்த முற்படுகின்றன.

எனினும் சில சமயம் சார்ந்தவர்கள் பணக் கூலிகளாக மாறி வீடு வீடாகச் சென்று பிற சமயங்களை நிந்தித்து தமது சமயத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்கின்றனர்.

மக்களின் வறுமை, நோய், துன்பம் இவற்றைத் தமக்குச் சாதகமாக்கி தமது மதத்திற்கு ஆள்பிடிப்புச் செய்கின்றனர். இவை தனிப்பிட்ட வாழ்வில் துன்பங்களையும் அவலங்களையும் ஏற்படுத்தும்.

சைவசமயத்தில் பிறந்தவருக்குரிய சமயச் சடங்குகளை கத்தோலிக்க மதம் சார்ந்து செய்வதோ அல்லது கத்தோலிக்க மதம் சார்ந்தவருக்கு சைவசமய முறைப்படி சடங்குகள் செய்வதோ அநீதியானது. இவ்வாறான செயல்கள் அதர்மத்தின் பாற்பட்டது.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கத்தின் தெய்வீக உரை ஆலடிப்பிள்ளையார் கோயிலில் ஒலிக்கிறது. வாத்தியாரின் தெய்வீக உரை நிறைவடைய ஆலடி மாநாடும் ஆரம்பமாயிற்று.

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர். அந்நேரம் வாத்தியார் வைத்திலிங்கமும் ஆலடிக்கு வந்து மாநாட்டில் அமர்ந்து கொண்டார்.

**சாத்திரியார்:** வாத்தியார் நீங்கள் ஆற்றின உரை அற்புதமாக இருந்தது. உண்மையில மதமாற்றம் என்பது ஒரு பெரும் பாவச் செயலாகும். இறை நீதிக்குப் புறம்பானது. எனினும் அந்த அநியாயம் நம்மண்ணில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

**கங்காணி:** மதமாற்றம் என்பதை தனித்து சமய மாற்றம் என்று நினைத்து விடக் கூடாது. மாறாக, மத மாற்றத்தினூடாக தமிழ் மொழியும் அழிக்கப்படுகிறது. தமிழ்ப்பற்று இல்லாமல் செய்யப்படுகிறது.

**விதானையார்:** சரி... சரி... மதமாற்றம் ஒரு புறம் இருக்க யாழ்ப்பாணத்தில நடந்த சர்வமதத் தலைவர்களின் கூட்டம் பற்றி அறிஞ்சனீங்கள் தானே.

**மூப்பர்:** ஏகப்பட்ட இராணுவத்தினர் கூடி நின்று அஸ்கிரிய பீடாதிபதிக்குப் பாதுகாப்புக் கொடுத்தவியளாம்.

**கங்காணி:** சர்வமதத் தலைவர்களின்ர அந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில சிங்கள மகா வித்தியாலயத்தை மீள ஆரம்பிக்க வேணும் எண்டு முதலில சொன்னவர் குறிஞ்சி நிலத்துப் பாதராம்.

**வாத்தியார்:** அடக் கடவுளே ஏன் அவர் அப்படிச் சொன்னவராம்?

**கங்காணி:** அப்படிச் சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. சிங்கள மகா வித்தியாலயத்தை மீள ஆரம்பிக்க வேணுமெண்டு தமிழ் மக்கள் விரும்புகினம் எண்டும் அந்தப் பாதர் சொன்னவராம்.

**பண்டிதர்:** யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவை என்றொரு அமைப்பு இருக்கிற போது அதற்கு எதிராக யாழ்ப்பாண சர்வமதக் குழு என்ற ஒரு அமைப்பை உருவாக்கி எல்லாவற்றையும் குழப்பினவரும் அந்தப் பாதர் என்று சனங்கள் கதைக்கினம். பெளத்த சிங்கள அமைப்புகள் அவரை இங்கு அனுப்பி தமிழுக்கும் சைவசமயத்திற்கும் எதிராகச் செயற்பட வைப்பதாகவும் தகவல்.

**விதானையார்:** பண்டிதர் சொல்லுறது உண்மை எண்டால் சைவசமயத்தவர்கள் அதுவிடயத்தில நிதானமாக நடந்து கொள்ள வேணும்.

**மூப்பர்:** யேசுபிரானோட தானே யேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் இருந்தவர். அப்படித்தான் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை வெள்ளிக் காசுக்கான காட்டிக் கொடுப்புக்கள் நடக்கத்தான் செய்யுது.

**வாத்தியார்:** சர்வமதக் குழு என்ற பெயரில நாங்கள் ஏமாற்றப்படுவதை எவரும் சம்மதிக்கக்கூடாது என்பதுதான் எங்கட மாநாட்டுத் தீர்மானம்.

உண்மையான விசுவாசத்துடன் நேர்மையாக இறைவனுக்கு கணக்குக் கொடுக்க வேணும் என்ற பரிசுத்தத்துடன் சர்வமதத் தலைவர்கள் செயற்பட்டால் அதற்கு நாங்களும் ஒத்துழைப்பு வழங்க வேணும்.

இதை விட்டிட்டு சர்வமதத் தலைவர்களின் கூட்டம் என்று கூறிவிட்டு பெரும்பான்மை இனம் சார்ந்து தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுப்பதென்பது ஒருபோதும் அமைதியை சமாதானத்தைக் கொண்டுவராது.

**சாத்திரியார்:** வியாழ மாற்றமும் நேற்று நடந்திட்டுது.

**கங்காணி:** சாத்திரியார் வியாழமாற்றம் எப்படியிருக்குது..

**சாத்திரியார்:** வியாழ மாற்றம் நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் எவ்வளவு மரணங்கள் நடந்தன் எண்டு பார்த்தியளோ.

**பண்டிதர்:** சாத்திரியார் சொல்லத்தான்... அருமந்த ஆறு பிள்ளைகள் கடலில உயிரிழந்த சோகம் யாழ்ப்பாணத்தை உலுக்கிப் போட்டுது.

என்ன செய்யிறது. சரியான வழிகாட்டல்கள் அந்தப் பிள்ளைகளுக்குக் கிடைக்கவில்லை எண்டு தான் சொல்லுவன்.

**வாத்தியார்:** உண்மை தான் பண்டிதர். அந்தப் பிள்ளைகளின்ர உயிரிழப்புத் தொடர்பில அவர்கள் கற்ற பிரபல்யமான கல்லூரிகளும் மௌனமாக இருந்து விட்டினம். என்ன செய்யிறது. எல்லாம் சந்தர்ப்பசூழல் என்பதை. இனி மேலாவது எங்கட மாணவச் செல்வங்கள் அறிந்து கொள்ளவேணும்.

**மூப்பர்:** கடலில இறங்குகிறதாக இருந்தால் பாதுகாப்பு மிதவைக் கவசம் அணியவேணும் என்று கட்டாயப்படுத்த வேணும்.

**பண்டிதர்:** மூப்பர் சொல்லுறது உண்மை தான். ஆனால் அனலைதீவுக்குச் செல்கிறவர்களுக்கு அந்தப் படகு உரிமையாளர்கள் பாதுகாப்பு மிதவைக் கவசம் அணியக் கொடுப்பதில்லையாம்.

**கங்காணி:** இதென்ன நாசமறுப்பு படகில மிதவைக் கவசம் இல்லையாமோ.

**பண்டிதர்:** ஏன் இல்லை. அது ஒரு மூலைக்குள் இருக்குதாம். ஆனால் அந்த மிதவைக் கவசங்கள் கொடுக்கப்படுவதில்லையாம்.

**வாத்தியார்:** அப்ப இது விடயத்தில. உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேணுமல்லோ.

வாத்தியார் இப்படிக் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்


# சர்வமதக் கூட்டம் எதற்காக நடந்தது?

அரசியலமைப்புச் சீர்திருத்த வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டே தீரும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிபடக் கூறியுள்ளார்.

அதேநேரம் பௌத்த பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்கர்கள் அண்மையில் ஒன்றுகூடி அரசியலமைப்புச் சீர்திருத்தம் தேவையில்லை எனக் கூறியுள்ளனர்.

இந்நிலையில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் அரங்கேறுமா அல்லது அப்படியே அஸ்தமித்துப் போகுமா என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

எனினும் அண்மைக் காலமாக இலங்கையின் பேசுபடுபொருளாக இருப்பது அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றியதுதான் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.







இலங்கையில் மட்டுமன்றி உலக நாடுகளும் இலங்கையின் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மீது தமது பார்வையை உன்னிப்பாக்கியுள்ளன. அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வருமாக இருந்தால் இனப்பிரச்சினையின் பெரும்பகுதி சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்ற எண்ணக்கரு வெளிநாடுகளிடம் அதிகமாக உண்டு.

அதிலும் அண்டை நாடான இந்தியாவிடம் அரசியலமைப்புச் சீர்திருத்தம் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது. இவை ஒருபுறமிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் அரசியலமைப்பு மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார்.

எப்பாடு பட்டாவது அரசியலமைப்பை அமுலாக்கிவிட்டால் எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்பது அவரின் இறுதி முடிவாக இருக்கிறது. அதற்காக அவர் படாப் பாடுபடுவதும் தெரிகிறது.

தள்ளாடும் வயதிலும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுலாக்குவதில் அவரின் கரிசனை அதீதமானதெனலாம். இதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கரங்களையும் அவர் பற்றிப் பிடிக்கின்றார்.

சமஷ்டி என்ற சொற்பிரயோகம் இல்லாவிட்டாலும் சமஷ்டிக்குரிய அதிகாரங்கள் உண்டு என தமிழ்த் தரப்புகளையும் அவர் ஆற்றுப்படுத்த முயற்சிப்பதும் தெரிகிறது.

இருந்தும் புதிய அரசியலமைப்பு தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றவில்லை. அது ஒரு செப்படி வித்தை. தமிழ்மக்களை ஏமாற்றுகின்ற நாடகம் என்ற கருத்துக்கள் தமிழ்த்தரப்பிற்குள் இருக்கவே செய்கின்றன.

ஐயா! அரசியலமைப்புச் சீர்திருத்தம் வரப்போவதேயில்லை. பின்பு அரசியலமைப்புச் சீர்திருத்தத் திற்குள் எது இருந்தென்ன எது இல்லாமல் விட்டென்ன என்ற பற்றற்ற நிலையிலும் பலர் இருக்கவே செய்கின்றனர்.

எது எவ்வாறாயினும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கு பௌத்த பீடங்களின் ஆதரவு கிடைக்காதென்பது மட்டும் உறுதி.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான வேலைத்திட்டங்கள், வழிகாட்டல் கூட்டங்கள் என அனைத்தும் நடந்து கொண்டிருக்கையில் மௌனமாக இருந்த பௌத்த பீடங்கள் அரசியல மைப்பு அரங்கேறப் போகிறது என்றவுடன் அவசரமாகக் கூட்டம் போட்டு அரசியலமைப்பு சீர்திருத்தம் தேவையில்லை எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை ஆச்சரியமான ஒன்றுதான்.

இவ்வாறு அரசியலமைப்புச் சீர்திருத்தம் தேவையில்லை என்று கூறிய அஸ்கிரிய பீடாதிபதி அவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சர்வமதத் தலைவர்களின் சந்திப்பு என்ற பேரில் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். அஸ்கிரிய பீடாதிபதிக்குரிய மதிப்பு மரியாதை யாழ்ப்பாணத்தில் இரட்டிப்பாக இருந்தது. ஏகப்பட்ட இராணுவத்தினர் பிரசன்னமாகியிருந்தனர். அஸ்கிரிய பீடாதிபதியுடன் வடக்கு மாகாண ஆளுநர்- படை அதிகாரி ஆகியோரும் நேர் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

சர்வமதக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பில் மதத்தலைவர்கள் தவிர்ந்தவர்கள் ஏன் இடம்பெற்றிருந்தனர் என்பது புரியவில்லை.

அதேவேளை இந்தச் சந்திப்பு எதற்கானது என்றும் அறியமுடிய வில்லை. அரசியல்மைப்புச் சீர்திருத்தத்திற்கு அஸ்கிரிய பீடம் ஆதரவளிக்க வேண்டும் என யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சுவாமிகள் கோரிக்கை விடுத்தபோதும் அதற்கு அஸ்கிரிய பீடாதிபதி எந்தப் பதிலும் அறிவிக்காமல் பேசாமல் இருந்துவிட்டார்.

தவிர இலங்கையில் தனித்தமிழீழம் என்பது ஒற்றுமைக்குப் பங்கம் என்று நீங்கள் கூறுவது போல இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று அடிக்கடி கூறிக்கொள்வதும் நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் என்று இந்து சமயத் தலைவர்களின் சார்பில் யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் வணக்கத்திற்குரிய ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் மிகத் தெளிவாகக் கூறியிருந்தார். எனினும் இதற்கும் அஸ்கிரிய பீடாதிபதி எந்தப் பதிலும் தரவில்லை.

மாறாக யாழ்ப்பாணத்தில் சிங்கள மகா வித்தியாலயம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்பதுதான், அஸ்கிரிய பீடாதிபதியின் பதிலாக இருந்தது.

யுத்தத்தின் அழிவுகளில் இருந்து இன்னமும் மீள முடியாமல் தவிக்கும் தமிழ்மக்களின் தேவை என்ன; தமிழ்- சிங்கள உறவைப் பலப்படுத்துவது எப்படி; இலங்கையில் சர்வமதங்களையும் சமமாகப் பேணுகின்ற வழிமுறைகள் என்ன? என்பது பற்றி ஆராய்வதுதான் சர்வமதத் தலைவர்களின் சந்திப்பின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் இங்கோ சிங்கள மகா வித்தியாலயத்தை மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கான முடிவுகளே அறிவிக்கப்பட்டனவெனில் அதன் உள்ளார்ந்தம் சிங்களக் குடியேற்றத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதுதான் என்பதைப் புரிந்து கொள்வதில் கடினம் இருக்கமுடியாது.

ஆக,. சிங்களக் குடியேற் றத்தைக் கூறுவதற்காக அஸ்கிரிய பீடாதிபதியால் கையாளப்பட்ட குறியீடுதான்.


சிங்கள மகா வித்தியாலயத்தின் மீள் ஆரம்பம் பற்றிய செய்தியாகும்.

விதுரன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## அரசனும் சிற்பியும்



நாட்டை ஆளும் அரசன் ஒருவனிடத்தில் அந்த நாட்டின் சிற்பி நான்கு பொம்மைகளை கொண்டு வந்து தருகிறார்.

அரசன் கோபமாக நான் என்ன சின்னக் குழந்தையா? இதை வைத்து விளையாடுவதற்கு என்றுக் கேட்கிறார்.

அதற்கு சிற்பி இல்லை அரசே, இது நம் வருங்கால ராஜாவுக்கு அதாவது நம் இளவரசருக்கு என்கிறார்.

இந்தப் பொம்மைகளில் சில விசேடங்கள் உண்டு. நான்கு பொம்மைகளின் ஒரு பக்க காதுகளிலும் ஓட்டை இருக்கிறது பாருங்கள் என்கிறார்.

அரசன் "இதில் என்ன விசேடம் இருக்கிறது" என்கிறார்.

முதல் பொம்மையை அரசனிடம் கொடுக்கிறார் சிற்பி. கூடவே ஒரு மெல்லிய சங்கிலியையும் கொடுத்து அதன் காதில் இருக்கும் ஓட்டையில் விடச் சொல்கிறார்.

(தொடரும்)

## பொது அறிவு

1) முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்ட ஆண்டு எது?
**1871**

2) முதன் முதலில் வெளியான செய்தித்தாள் எது?
**கொழும்பு ஜேணல்**

3) முதலாவது அஞ்சல் முத்திரை எத்தனையாம் ஆண்டு வெளியிடப்பட்டது?
**1857**

4) சிங்கள இராச்சியத்தின் முதலாவது தலைநகரம் எது?
**அநுராதபுரம்**

5) முதலாவது பெண்கள் பாடசாலை எது?
**உடுவில் மகளிர் கல்லூரி**

6) இலங்கையை ஆட்சி செய்த முதலாவது அரசி யார்?
**அனுலா**

7) இலங்கையின் புறவுருப் படத்தை வரைந்தவர் யார்?
**தொலமி**

8) முதலாவது பிரதமர் யார்?
**D.S. சேனாநாயக்கா**

9) இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி யார்?
**சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க**

10) இலங்கையின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி யார்?
**J.R. ஜெயவர்த்தனா**

வா. சாருஜா
ஒட்டுசுட்டான்.

## அழிந்து வரும் விலங்கினம்



கரடிப் பூனை அல்லது "பயர் பொக்ஸ்" என்றும் அழைக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் மூங்கிலையே உணவாகக் கொள்கின்றன. அடர்த்தியான முடிகளுடன் காணப்படும். இவை இமயமலையையும் தென் சீனாவையும் பிறப்பிடமாகக் கொண்டவை.

## எவரையும் ஏளனம் செய்யாதே!

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை
புனிதமான கடவுளை
பூசை செய்ய உதவுதே!

அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்
கழுத்தில் நல்ல மாலையாய்
கட்டி மகிழ உதவுதே!

கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமோ
இன்பம் இன்பம் என்றுதாம்
இன்னும் கேட்க செய்யுதே!

விசத்தில் மிக்க பாம்பிடம்
விலையுயர்ந்த இரத்தினம்
அடடா அந்த இரத்தினம்
மனிதருக்கும் கிட்டுமோ?

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோஜா மலருதே
வீசி நல்ல மணத்திலே
விரும்பி அணியச் செய்யுதே!

மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டு
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்யாதே!


உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே










## பிக்போசில் ஓவியாவை ஏன் எல்லோருக்கும் பிடிக்கிறது?

## தமிழ் தலைமை என்ன செய்யப் போகிறது?

## ஆளப்போறான் தமிழன் பாடல் எப்படி?

**சுதன்** — குப்பிளான்

M **தமிழர்களின் தலைவன் ?**

என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே இருட்டினில் நீதி மறையட்டுமே தன்னாலே வெளிவரும் கலங்காதே ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே என்று கவிஞர் கண்ணதாசன் பாடியிருக்கிறாரே.

**டிலக்ஷனா** — கரவெட்டி

M **பிக்போஸ் பார்ப்பீர்களோ?**

நடிக்கிறார்கள், நடிக்கிறார்கள் என்கிறார்கள். ஆனால் பார்க்க நன்றாக இருக்கிறது. அதனால் தவறாமல் பார்க்கிறேன்.

**கலையரசன்** — யாழ்ப்பாணம்

M **ஆளப்போறான் தமிழன் பாடல் எப்படி?**

ரகுமான் இசையில் பட்டையைக் கிளப்பும் என்பதில் சந்தேகமே இல்லை. விஜயின் அரசியல் பயணம் தொடங்கி விட்டதற்கான அறிகுறிகளும் தெரிகின்றன.

**கஜல்** — யாழ்ப்பாணம்

M **ஒரு பெண் திருமணம் செய்யாமல் இருக்கலாமா?**

வாழ்க்கை என்பது சிலருக்கு பாடமாகவும் பலருக்கு படமாகவும் ஆகி விடுகிறது.

உயர்ந்து ஓங்கி வளர்ந்தாலும் ஒற்றை மரம் என்றால் அது தோப்பில்லை. சோடை பத்தி பற்றைமண்டிக் கிடந்தாலும் வெறும் பத்து மரமென்றாலும் அது தான் தோப்பாகின்றது.

**ஜீபா** — கரவெட்டி

M **வெளிநாட்டுக்காரரிடம் இடித்துரைக்கும் சம்பந்தர் நல்லாட்சியிடம் ஏன் உரைக்க முடியவில்லை?**


ஒரு படத்தில் வடிவேலு பார்த்திபனிடம் குத்து மதிப்பாக என்ற வசனத்தை விட்டு விட பார்த்திபன் குத்துக்கு மதிப்பிருக்கா என்று வடிவேலுவை குத்தி குத்தி இந்தக் குத்துக்கு என்ன மதிப்பு, இந்தக் குத்துக்கு என்ன மதிப்பு என்று வாட்டி எடுத்திடுவார்.

ஒரு சிலரின் இந்த 'இடித்துரைப்பு' கண்டு பிடிப்பு சம்பந்தர் ஐயாவுக்குத்தான் வெளிச்சம்.

**நிவேதா** — புத்தூர்

M **தத்துவம் ஒன்று சொல்லுங்கள்?**

இறப்பவர்களை விட இருப்பவர்களுக்கே அதிகம் புரிய வைக்கப்படுகிறது உயிரின் மதிப்பு.



**அபியுத்** — விசுவமடு

M **இலங்கை அணிக்கு என்ன நடந்து விட்டது?**

அணியை ஸ்திரப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் அது நடைபெறுவதாகக் தெரியவில்லை.

தரங்க, மத்தியூஸ், சந்திமால், மலிங்க போன்ற ஓரளவு அனுபவ வீரர்கள் இருந்தும் அணி தோல்வியை நோக்கிச் செல்கிறது எனின் நிச்சயமாக அணியை மனரீதியாக வழிப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

மலிங்கவை பார்த்து பந்து வீசக் கற்றுக் கொண்டு அவரிடமே பயிற்சி பெற்ற பூம்ரா இலங்கையைப் பதம் பார்க்கிறார் எனின் நிச்சயமாக இலங்கை அணி மனரீதியாக பலம் பெற வேண்டும். நடைபெறுமா பொறுத்திருந்து பார்ப்போம்.




**சகானா** — மானிப்பாய்

M **தமிழ்த் தலைமை என்ன செய்யப் போகிறது?**

தேர்தல் வரப் போகிறது அல்லவா இனி வீர வசனங்கள் தூசு தட்டி எடுக்கப்படும். சிவப்பு, மஞ்சள் கொடிகள் தையல் கடைக்கு வேலையைக் கொடுக்கும். போஸ்ரர் அடிப்பதற்காய் அச்சகங்கள் உயிர் பெறும். கோதுமை மாவின் விலை ஏறும் (போஸ்ரர் ஒட்ட பசை கிண்டுவதனால்)

கூட்டங்கள் கூட்டப்படும், மக்கள் இன்றிய கதிரைகளுக்கு வாக்குறுதிகள் அள்ளி வீசப்படும். கட்டில், கதிரை, மேசை, அலவாங்கு, பிக்கான் என்று எமக்கு பழக்கப்பட்டவைதான். ஆனாலும் சின்னங்கள் புதிதாக மினுமினுக்கும். வென்று விட வேண்டும் என்று துடியாய் துடிப்பார்கள். வென்றாலும் உறங்கு நிலை தோற்றாலும் உறங்கு நிலை. இது தான் தமிழர்க்கு கிடைத்த சாபம் என்று தன்னைத் தானே தமிழன் நொந்து கொள்வான்.

**அபர்ணன்** — சண்டிலிப்பாய்

M **யாருடைய அன்பு உண்மையானது?**

இரும்பின் வைரத்தையும் சிலரின் வைராக்கியத்தையும் சோதிப்பது போல அன்பை சோதித்து விட முடியாது.

அன்பு என்பது நீர்த்தேக்கத்தில் நிறைந்து நிற்கும் நீரைப் போன்றது. ஆவி ஆனாலும் எங்கோ ஓரிடத்தில் மழையாய் மண்ணை அடைந்து விடும்.

**இந்து** — யாழ்ப்பாணம்

M **பிக்போசில் ஓவியாவை ஏன் எல்லோருக்கும் பிடிக்கிறது?**

உண்மையாக இருப்பவர்களை யாருக்குத்தான் பிடிக்காது. இப்போது நம் சமூகத்தில் உண்மையானவர்களைத்தான் பார்க்க முடியாதே. எல்லாம் வேசம் எல்லாம் போலி. இப்படிப்பட்ட உலகத்தில் உண்மையாக இருக்கும் ஒருவரை பிடிப்பதற்கு காரணம் கூற முடியாதே.

**கமல்** — புளியடி

M **வியாசரை இரண்டு வாரமா காணலையே?**

மலையாய்க் குவிந்து வந்த அன்பு வாசகர்களின் கேள்விகளுக்கு பதில் தராததற்கு மன்னிப்பைக் வேண்டுகின்றேன்.

வியாசருக்கு கொஞ்சம் உடல் நிலை சரியில்லை. இனித் தடங்கல் இன்றி தங்கள் கேள்விகளுக்கான பதில் தொடரும்.

**கமல்** — இளவாலை

M **திருடர்களும் பிச்சைக்காரர்களும் அதிகரித்து விட்டார்களே?**

பிச்சை எடுப்பதும் திருடுவதும் பிச்சைக்காரரும் திருடனும் மட்டும்தான் என்று நினைத்துக் கொண்டிருந்தால் அது தான் நாம் விடும் பெரும் தவறாக இருக்கும்.

**ரஜீவ்** — கோண்டாவில்

M **நீங்கள் படித்ததில் பிடித்தது ஏதும் உண்டா?**

வேலை இல்லாதவனின் பகலும் நோயாளியின் இரவும் மிகமிக மிக நீளமானது.

**குகதர்சன்** — யாழ்ப்பாணம்

M **காதல் என்றால் என்ன?**

வேலைவெட்டி இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும். வேலை வெட்டி உள்ளவர்களுக்கு வேலையைக் கெடுக்கும். கெ,கொ இதில் எது வேண்டும் என்று முடிவெடுங்களேன்.

உங்கள் காதல் கேள்விகளுக்கு பதில் சொல்லிச் சொல்லியே வியாசரின் தொண்டைத்தண்ணி வற்றிவிட்டது.




### ஓ! சமுதாயமே சற்றுத் திரும்பிப் பார்...

ஓ சமுதாயமே சற்றுத் திரும்பிப்பார்
நீ செல்லும் வழிகளில்– உள்ள
வலிகள் என்னவென்று
ஆழ்கடலினை ஆர்ப்பரித்த
எம் இளைய தலைமுறை
என்னவானதென்று
போகும் திசையறியாது
திரும்பிய திசையெங்கும்
தீமைகளில் நெருடல்கள் இங்கே
திசைமாறும் இளையோர் கூட்டத்தின்
திசைகாட்டியாய் திகழ
பெற்றோர் மறுப்பதேன்
யுத்தம் என்னும் கொடிய தீ
எம் எதிர்கால மொட்டுக்களை
கருக்கியது போதாதா
இன்று அடுத்தடுத்த
அகால மரணங்களுக்கும்
துப்பாக்கிச் சன்னங்களுக்கும்
இலக்காக வேண்டிய துர்ப்பாக்கிய
நிலையேன் எமக்கு
சிட்டுக்குருவியாய் சிறகடித்த
எம் சிட்டுக்கள் சிறைவாசம் செல்வதேன்
கண்கட்டி வாய்மூடி வேடிக்கை பார்க்கும்
அடிமைப்படுத்தப்பட்ட தமிழனாய்
இன்னும் எம் இனம்

**பி.கஜானி**
**கொக்குவில்**

### உயர்வானவன்

கிடைத்தது போதுமென்று
மனம் புடைத்தொரு
சாந்தம் கொள்ளு
படைத்தவன் அளந்த
உலகில் பலவித மனங்களுண்டு
கிடைத்தது பெருமை கொள்ளின்
இனிக்கிடைப்பது உரிமையாகும்
கிடந்து நீ கனவு கண்டால்
இனிக் கிடைப்பதே உறுதியாகும்
திடம், பலம் வேண்டும் சாந்தம்
தினம் பல உயிர்களிடத்தில்
நல்மனமென்னும் கோபுரத்தில்
இறை குணமது சாய்ந்து நிற்கும்
திறமெனும் பொறிக்குள்
மயை தினறிடும் நேரம் தானாம்
பல மனங்களைப் பிணங்களாக்கி
மரத்த தாம் மனித குலங்கள்
தரமது ஏதுமில்லை
தரணியில் தாழ்வு இல்லை
மனமது உயர்வே எண்ணின்
அம்மனிதனே உயர்வானவனாம்

**யாழ்வாகீஷ்**
**ஒட்டுசுட்டான்**

### காணவில்லை

ஊரடங்கு வேளையிலே
ஊரடங்கிப் போகையிலே
நடுச்சாம ராத்திரியில்
ஏக்கமெல்லாம் இறக்கிவைத்து
தொட்டணைக்கும் பொழுதினிலே
தொலைத்துவிட்டேன்
என் அவனை
தேடாத இடமுமில்லை
நேராத நேர்த்தியில்லை
பார்க்காத பாவியில்லை
வணங்காத கோவிலில்லை
கேட்காத கேள்வியில்லை
பிடிக்காத போஸ்டரில்லை
குடுக்காத மனுவுமில்லை
குந்தாத தெருவுமில்லை
காணவில்லை என் அவனை
கண்டுபிடிப்பார் யாருமில்லை.
பகடைகளாய் நாமிங்கு
பந்தாடப்படுகின்றோம்
ஆசனப் போட்டிக்கு
ஆடைகளை அவிழ்க்கின்றார்
அறிவில்லா மாந்தரெமை
அடிமைகளாய் பார்க்கின்றார்
இந்தநிலை மாறுமா?
சொந்தநிலை மீளுமா...?

**மதிதீ**
**அளவெட்டி**

### பாடு

இது வெறும் கூடுதான்
ஆனால்...
உயிரைப் பிடித்து வைக்கத்தான்
பெரும் பாடு....

ஆடாடென்றாடி
ஆயிரம்
தாதாவென்று கூவியிறுதியில்
மூச்சைப் பிடிக்கப் பாடு

ஓட்டமும் நடையும்
பாதி...
ஒரு காலமும் இல்லை மீதி
ஒருகால் அழவைக்கப் பாடு...

வீட்டினில் அவன் கூடு
இப்போ
குழந்தையாய் கட்டிலில்
படுகிறான் பாடு

கடமைகள் சரியாய் செய்வார்
தம்
கடமைகள் முடிக்கவே
மூச்சிறைக்கிறான் பாடு

தோற்றுவிடுவது வாழ்வு
அல்ல
தோற்றுவிடுவது இளமை
இளமை முதுமைக்கிடையில் பாடு

மாவை. நா.கஜேந்திரன்



# மௌனத்தின் தேடல்– 366

### மாற்று(ம்)த் திறனாளி

உன் நலம் மறந்து
என் நலம் காக்கும்
அண்ணனே!
கையின்றிலும் கால்களால்
உணவூட்டுவேன் உனக்கு,
ஊனம் என்பது
என்னுடல் மட்டுமே
என்னுள்ளமல்ல
மாற்றுத்திறனாளி நான்
உலகையே மாற்றும்
திறனாளியாய்
மகிழ்வோடு வாழ்வேன்
என் அண்ணா உன்னோடு

**எளிமைக்கவி றொபின்**
**புன்னாலைக்கட்டுவன்**

### என்னால் முடியும்

உடலில் ஊனமாயினும்
என் மனதில் அன்பும்
தன்னம்பிக்கையும்
நிறையவே உண்டு
ஆகவே என்னால்
முடியும் உணவூட்டி
உன்னை உலகில்
சீரும் சிறப்புமாய்
வாழ வைக்க

**சு.ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

### இந்த அன்பே போதும்

செஞ்சோற்றுக் கடன்
தீர்க்கின்றேன்
சிறுவயதில் எனக்கு
சோறூட்டி
வளர்த்தாய் தாலாட்டி
ஊட்டினாய்
எனது விழிகள்
உன் பார்வையை
நோக்கும்போது
நீ உணவு ஊட்டுகின்றாய்
நான் உண்கின்றேன்
உன் திறமையையும்
உன் ஆற்றலையும்
நான் போற்றுகின்றேன்

**பா. கலாநிதி**
**சண்டிலிப்பாய்**

### மனம் கனிந்தால் மட்டுமே

இதழ் குறைந்த
பூவொன்று வீசுது
பூமிக்கு காருண்ய
வாசனை!
அள்ளிக் கொடுப்பதற்கு
காலமா கனிய வேண்டும்?
மனம் கனிந்தாலே
போதுமென்று
கூறுது யோசனை

**அராலியூர்**
**சே.ர.சிவகுமாரன்**

### உண்மை அன்பு

பண்பையும் அன்பையும்
பாசத்தில் உயர்வையும்
ஊட்டும் உணவிலே
உண்ணும் விதத்திலே
பாருக்குக் காட்டும்
பாலகர்களே நீங்கள்
கள்ளம் கபடமற்ற
வெள்ளையுள்ளம் கொண்ட
பிள்ளை நெஞ்சிலே பிரிவேதிங்கு
உண்மை அன்பிலே
காணும் உயர்வை
உம்மிடம் தான்
உலகம் கற்றல் வேண்டும்

**சி.திவ்வியா**
**யா/ப.மெ.ம.வி.**

### கலங்காதே

யுத்தம் எனும் சக்கரத்தில்
எம் எத்தனையோ உடைமைகள்
உறவுகள் அங்கங்களை
தொலைத்து விட்டோம்
சாகாது சாத்திருந்து
அழியா நினைவுகளைச் சுமந்து
தன்னால் முடியும் என
தன்கரம் இழந்தும்
தன் பாதத்தால் உணவூட்டும்
குழந்தையே
உனது முயற்சியின் இலட்சியமே
எதிர்வின் கொடுமைக்கு
வழிதேடும் குழந்தாய்
கலங்காதே

**வா.சாரங்கனி**
**முத்தையன்கட்டு**

### ஊனம் குறையல்ல உள்ளமே நிறைவு

காலால் உணவூட்டும் கைங்கரியம்
புரியும் தம்பியே
உன்முகமும் மலர்கின்றது
உள்ளமும் பூரிக்கின்றது
இக்காட்சியைக் கண்ணுற்றதும்
பலரது உள்ளங்களும்
பலவித உணர்வுகளால்
அலைமோதுகின்றது
கரங்கள் அற்ற
இப்பிஞ்சு மனத்தின் ஏக்கம்
பணம் படைத்த கரங்கள் உள்ள
இரக்கமற்ற கனவான்களுக்கு
ஒரு பாடமாகட்டும்
ஊனம் ஒரு குறையல்ல
உள்ளம் உயர்ந்து நிற்கும் போது

**அப்துல்மாலிகா**
**சங்கானை**

# மௌனத்தின் தேடல் –367



**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.08.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



# போர்க்குற்றவாளி யார்?





இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் படைத் தரப்பு மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்பட்டன.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் இதில் பிரதானமானவை. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக மகிந்த அரசால் அறிவிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை போர்க் குற்றச்சாட்டுக்களை அரச படைகள் சுமந்து கொண் டிருக்கின்றன.

அரச படைகள் மீது சுமத்தப்பட்ட போர்க்குற்ற குற்றச்சாட்டு குறித்து சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்படும் வரை இந்தக் குற்றச்சாட்டு நிலைத்திருக்கும்.

ஆட்சி மாறலாம். ஆனால் காட்சி மாறாது. மகிந்த போய் மைத்திரி வந்தார். தமிழ் மக்கள் வாக்களித்து மைத்திரியை அரியணை ஏற்றினர். ஆனால், போர்க்குற்றங்கள் குறித்து உரிய விசாரணையை முன்னெடுக்கும் நிலைப்பாட்டில் அவர் இல்லை என்பதை அண்மையில் நடந்த பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவன பிரதானிகளுடனான சந்திப்பின் போது வெளிப்படுத்தியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக உள்ளார். போர் இடம் பெற்ற காலப்பகுதியில் பொதுச் செயலாளராக இருந்தவர்.

மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாகவும் சுதந்திரக்கட்சியின் தலைவராகவும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராகவும் இருந்த போது தான் முள்ளி வாய்க்கால் பேரவலம் நடந்தது.

ஆனால், அப்போது பாதுகாப்புத் துறையில் முக்கிய கவனம் செலுத்தி போரை முடிவுக்கு கொண்டு வருவதில் கோத்தபாய ராஜபக்ஷ, சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தவர். கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராகவும் மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சராகவும் துணை ஜனாதிபதி என்ற நிலையில் இருந்ததோடு ராஜபக்ஷவினரின் உத்தரவுகளை அப்படியே நிறைவேற்றுபவராகவும் பணியாற்றினார்.

தமிழின அழிப்புப் போரில் இவர்கள் மட்டும் தான் முக்கிய பங்காற்றினர் என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. பசில் ராஜபக்ஷ, கருணா அம்மான், பிள்ளையான் மற்றும் ஜெகத் ஜெயசூரிய, சவேந்திர சில்வா போன்ற படைத் தளபதிகளும் உள்ளடங்குகின்றனர்.

போர்க்குற்றச்சாட்டைப் பொறுத்த மட்டில் தற்போது ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோரின் பெயர் அடிபடுகிறது.

அதேவேளை ஜெகத் ஜெயசூரிய, பிரேசில் நாட்டுத் தூதுவராக இருந்த நிலையில் நாட்டுக்கு தப்பி வந்தாரா? திரும்பி வருமாறு உத்தரவிடப்பட்டதால் வந்தாரா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இலங்கைக்கான பிரேசில் நாட்டுத் தூதுவராக நல்லாட்சி அரசால் நியமிக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதியான ஜெகத் ஜெயசூரிய மீது அந்நாட்டு குற்றவியல் நீதிமன்றில் போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவர் திடீரென நாட்டுக்கு வந்ததால் தப்பிவந்தாரா? அவரது பதவிக்காலம் முடிந்தநிலையில் வந்தாரா? என்ற கேள்விகள் எழுகின்றன.

ஜெகத் ஜெயசூரிய, தப்பியோடி வரவில்லை என்று வெளிவிவகார அமைச்சு விளக்க மளித்துள்ளது. அதேவேளை தப்பியோடி வரவேண்டிய அவசியம் ஜெகத் ஜெயசூரியவிற்கு இல்லை என்றும் தூதுவர் பதவிக்காலம் இரண்டு வருடாங்கள்தான். பதவிக்காலம் முடிந்த பின்னரே அவர் நாட்டுக்குத் திரும்பி வந்தார் என்றும் ஜனாதிபதி மைத்திரி உறுதிபடக் கூறியுள்ளார்.

போர்க்குற்றவாளிகளைப் பாதுகாக்கும் முயற்சியிலிருந்து இலங்கை அரசு இன்னும் பின்வாங்கவில்லை என்பதையும் போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து இப்போதைக்கு விசாரணை கள் இடம்பெறக்கூடிய முகாந்திரம் இல்லை என்பதையும் ஜனாதிபதியின் கருத்துக்கள் ஊடாகப் புரிந்து கொள்ளலாம்.

மகிந்த ஆட்சியில் நடந்த இனப்படுகொலைகள்; போர்க்குற்றங்கள்; மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டால் ஜனாதிபதி மைத்திரி உட்பட நல்லாட்சியிலும் அங்கம் வகிக்கும் சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் முகங்கொடுக்க நேரிடலாம் என்பதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பர்.

உள்நாட்டு விசாரணையா? சர்வதேச விசாரணையா? என்ற நிலைமாறி தற்போது விசாரணை நடக்குமா? என்ற நிலை உருவாகியுள்ளது.

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத தமிழ்த் தலைமை பதவியைத் தக்க வைப்பதில் மட்டுமே கரிசனை கொண்டுள்ளது.

எனவே, முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தி சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் அமைச்சராகியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா , ஜெகத் ஜெயசூரியவிற்கு எதிராக சாட்சியமளிக்கத் தயார் என்று அறிவித்துள்ள நிலையில் விசாரணைகளை முன்னெடுக்க வலியுறுத்துவது சாலப் பொருந்தும்.

இத்தகைய சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் இனி எக்காலப் பகுதியிலும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை முன்னெடுக்கப்படாது.

போர்க்குற்றவாளிகள் இப்போது இரண்டு பட்டு நிற்கின்றனர். தமிழினத்தைக் கருவறுத்தவர்களைத் தண்டிக்கும் காலம் கனிந்துள்ளது.

இதனை உரிய முறையில் பயன் படுத்தி போர்க்குற்ற வாளிகள் யார் என்பதை உலகறியச் செய்து தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.


இலங்கையில் தமிழினம் வாழ வேண்டும் என்றால் , இன்னொரு இனப்படு கொலைக்கு தமிழர்கள் ஆளாகாமல் இருக்க வேண்டுமென்றால் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

எஸ்.ஆர்.கரன்

# அறிவின் அம்மா அற்பு

"தலைநிறைய சுருள் முடியோடு துறுதுறுன்னு வளைய வந்து கொண்டிருந்த என் செல்லத்தை, 19 வயதில் 'விசாரணை' என்று டுக்குள்ளே கூட்டிட்டுப்போயி ஒரு காபித்தண்ணி கூட தர முடியலயே கண்ணு..." என்று இயலாமையோடு சொன்னார்.

பேரறிவாளன் இல்லம் பிரிகிற வழியைச் சரியாகக் கண்டுபிடித்துச் சொல்ல முடியாம குழம்பியிருக்கான். இருபத்தாறு வருஷ மாச்சே. எவ்வளவு பெரிய இடைவெளி. எவ்வளவு முறை 'என்னப்பா சாப்பிட்டே?'னு கேட்டேன். 'சாம்பார் சாதம்தான்ம்மா'ன்னு சாதாரணமா சொன்னான். 'உனக்குப் பிடிச்ச சாப்பாடுதானேப்பா...'னு அதனால அவளை 'தோளி' என்று பட்டப் பெயர் வெச்சுக் கூப்பிடுவான். என் சின்ன மகளுக்குப் பெரிய கண்கள். அதை வெச்சு அவன் கிண்டல் பண்ணு அந்தக் கொழுக்கட்டைகளை என் பேத்தி கள் எடுத்துச் சாப்பிட்டு காலி பண்ணிட்டாங்க. இப்போ, கொழுக் கட்டைக் காகத்தான் அறிவும் அவனுடைய மருமகள்களும் சண்டை போட்டுக்கிட்டு இருக்காங்க."



சொல்லி, கூட்டிட்டுப் போனாங்க. 26 வருஷ மாச்சு. முதிர்ந்த இளைஞனா 'பரோலில்' வந்திருக்கான்" என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கப் பேசுகிறார், அற்புதம்மாள்.

ஓகஸ்ட் 24 ஆம் திகதி ஒரு மாத பரோலில் விடுவிக்கப்பட்ட பேரறிவாளன், 26 ஆண்டுகளுக்குப் பிறகு வீடு திரும்பியிருக்கிறார். ஜோலார் பேட்டை, கே.கே. தாங்கவேல் தெருவில் உள்ள 'பேரறிவாளன் இல்லம்', இன்பவெள்ளத்தில் மிதக்கிறது. ஊர் மக்கள், நண்பர்கள், உறவுகள் என அனைவரும் பேரறிவாளனைக் கட்டித்தழுவி, உச்சி முகர்ந்து கொண்டாடுகிறார்கள். "மகன் வந்ததிலிருந்து அவரைக் கண்கொட்டாமல் அற்புதம்மாள் பார்த்துக் கொண்டே இருக்கிறார்" என்று வீட்டுக்குள் போய் விட்டுவரும் அனைவரும் சொன்னார்கள்.

நாம் தகவலைச் சொல லியனுப்பிவிட்டு, பேரறிவாளன் இல்லத்துக்கு வெளியே காத்திருந்தோம். சிறிது நேரத்தில் வெளியே வந்த அற்புதம்மாள், "உங்களை வீட அமைந்துள்ள பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பொலிஸ் கெடுபிடிகளுக்கு மத்தியில், வீட்டுக்கு வெளியே அமர்ந்து நம்முடன் பேச ஆரம்பித்தார் அற்புதம்மாள், "என் மகன் விடுதலையாகிவிடுவான் என்கிற செய்தியைக் கேட்டு ஏமாந்த அனுபவம் நிறைய இருக்கு. அதனால்தான், ஓகஸ்ட் 24 ஆம் திகதி இரவு, பரோல் கிடைச்சு, அவன் வீட்டு வாசல்படியை மிதிக்கிற வரைக்கும் அந்தச் செய்தியை என்னால் உறுதிப்படுத்த முடியலை" என்றார்.

"வேலூர் சிறையிலிருந்து பொலிஸ் வாகனத்துல வீட்டுக்கு வந்தப்போ, வழி தெரியாமல் பேரறிவாளன் குழம்பி விட்டாராமே?" என்றதும், சட்டென்று முகம் மலர்ந்த அற்புதம்மாள், "ஆமாப்பா..." என்று அந்தக் கதையை விபரிக்க ஆரம்பித்தார்.

"வேலூர் சிறையிலிருந்து வீட்டுக்குச் செல்ல உத்தரவு கிடைச்சதும், 'வீட்டுக்குப் போக நானே வழி சொல்றேன்'னு டிரைவருக்கு வழிகாட்டியபடியே அறிவு வந்திருக்கான். வாணியம்பாடியைத்தாண்டி ஜோலார்பேட்டைக்குப் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கு. தேசிய நெடுஞ்சாலை அகலமா ஆகிட்டது. அறிவை விசாரணைக்குக் கூட்டிட்டுப் போனப்போ, பொட்டல்காடாகக் கிடந்த இடமெல்லாம் இப்போ கட்டடங்களா ஆகிப் போச்சு. அதனால, அறிவுக்கு வழி தெரியலையாம். வீட்டுக்குள்ளே வந்ததும், 'என்னம்மா நம்ம வீடு ரொம்ப சின்னதாயிடுச்சு'னு குழந்தை போல் கேட்டான். 'இல்லடா கண்ணு! நீ வளந்துட்டே... ரோடெல்லாம் உயர்ந்துடுச்சு'ன்னு சொன்னேன்" என்று கண்ணீரைத் துடைத்தவாறே பதில் சொன்னார் அற்புதம்மாள்.

"வீட்டுக்கு வந்திருக்கும் மகனுக்கு என்ன சமைத்துக் கொடுத்தீர்கள்?"

"என்னை எங்கே சமைக்க விடுறாங்க. அறிவு வீட்டுக்கு வந்த செய்தியைத் தொலைக்காட்சியில் பார்த்துட்டு, அவனுடைய அக்காவும் தங்கையும் குடும்பத்தோட வந்துட்டாங்க. அவங்கதான் அறிவுக்கு ஆசை ஆசையா சமைச்சுப் போடுறாங்க. என்னுடைய சமையலில் அவனுக்குப் பிடிச்சது சாம்பார்தான். அவன் ஜெயில்ல இருந்தப்போ ஒரு

## அன்பு சூழ் உலகத்திற்கு

பேரறிவாளன் இருந்த சிறையறை பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்காது. ஆனால், எனக்கு நன்றாகத் தெரியும். அவனது மரண தண்டனை, ஆயுள் தண்டனையாகத் திருத்தி எழுதப்படுவதற்கு முன்பு ஒரு முறை அவனை அந்தத் தனிமைக் கொட்டடியில் சந்தித்திருக்கிறேன். சுவர்களுக்குக் கண்கள் இருந்திருந்தாலும் குருடாகவே இருந்திருக்கும்படியான இருண்ட அறை. அதே அறையின் ஓரத்திலேயே கழிப்பறை. மற்றொரு ஓரத்தில் குடிப்பதற்கான நீர். அங்கே குறுகிக் கொண்டு படுத்துக் கிடந்தான் என் மகன். பார்த்த எனக்கு நெஞ்சத்தை அழுத்திக்கொண்டு கண்ணீர் வந்தது. அதற்குப் பிறகு, என் மகனை எப்படியாவது அங்கிருந்து மீட்டுக் கொண்டு வந்துவிட வேண்டும் என்கிற எண்ணம் மட்டுமே எனக்குள் நிறைந்து இருந்தது.

இதோ இப்போது என் மகன் திரும்பி வந்திருக்கிறான். முழு விடுதலை இல்லை என்றாலும், பல மாதப் போராட்டங்களுக்குப் பின் முப்பது நாள் சிறை விடுப்பில் என் மகன் மீண்டும் வீட்டுக்கு வந்திருக்கிறான்.

1991ஆம் வருடம். தனது பத்தொன்பதாவது வயதில் என் மகன் மிதிவண்டிகளில் ஊர்த் தெருக்களைச் சுற்றிக் கொண்டிருந்த ஒருநாள். அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டான். வெறும் விசாரணைதானே, மீண்டும் வீட்டுக்கு வந்துவிடுவான் என்று நாங்கள் காத்திருந்தோம்.

அன்றிரவு நாங்கள் கூட்டாக அமர்ந்து சாப்பிட, அவனுக்குப் பிடித்த பருப்புக் குழம்பு எங்கள் வீட்டு அடுக்களையில் அவனுக்காகத் தயாராகிக் கொண்டிருந்தது. ஆனால், அறிவு மீண்டும் வீட்டுக்குத் திரும்ப, எங்களோடு சேர்ந்து உணவருந்த 26 ஆண்டுகள் ஆகிவிட்டன!

அவனுக்காகச் சாப்பிட எதுவுமே செய்து வைக்கவில்லை. வாசலுக்கும் வீட்டுக்குமாகப் பதற்றமாக ஓடவில்லை. ஆனால், அறிவு வந்தான். பத்தொன்பது வயதில் தலை நிறையச் சுருண்டு கிடந்த முடியுடன் சென்றவன், நாற்பது வயதில் முன்னந்தலை முடிகள் கொட்டி வயோதிக வாலிபனாய் வந்திருக்கிறான். சிறையின் உயிர்ப்பற்ற சூழல் அவனது இளமையை விழுங்கியிருந்தது.

'அம்மா!' என்று என்னை அழைத்தபடியே வந்தான். 'என்னம்மா இது வீட்டுக் கூரை தாழ்ந்திருக்கு?' என்ற படியே நுழைந்தான். உண்மையில் வீட்டுக் கூரை அப்படியேதான் இருந்தது. வீதியை உயர்த்திக் கட்டியிருந்தார்கள்.

வீட்டிற்குள் நுழைந்தவன் 'உடம்புக்கு இப்போ எப்படிப்பா இருக்கு?'



என்று என் கணவர் படுத்திருந்த கட்டிலை நோக்கி ஓடினான். மகன் சிறையில் இருந்ததுதான் என்னவரின் உடல்நிலையை மோசமடையச் செய்திருந்தது. அத்தனை முடியாதபோதும், மகனைக் கண்டதும் எழுந்து அமர்ந்து ஆரத் தழுவிக் கொண்டார்.

கடந்த சில ஆண்டுகளில் எனக்கும் நீரிழிவு நோய்த் தாக்கம் ஏற்பட்

நான் கேட்டதும் முகத்தைத் திருப்பிக்கிட்டு, 'இது நீ வெக்கிற சாம்பார் இல்லம்மா... வேற ஏதாவது பேசலாம்'னு சொல்லிட்டு வேதனை தாங்காம வெடிச்சு அழுதுட்டான். அதுக்கப்புறம் அவன்கிட்ட, 'என்ன சாப்பிட்டப்பா'னு நான் கேட்டதேயில்லை. எந்தத் தாய்க்கும் நேரக் கூடாத கொடுமை" அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் வடித்தார்.

"சிறுவயதில் பேரறிவாளன் எப்படி... எல்லோரையும்போல் வீட்டில் அக்கா தங்கையோடு சண்டை பிடிப்பாரா?"

"ம்ம்ம்... எல்லோர் வீட்டையும் போல் நடக்கும். என் பெரிய மகள் கொஞ்சம் புஷ்டியா இருப்பா. வான். அவங்க ரெண்டு பேரும் இவனை 'பட்டா'னு கூப்பிடுவாங்க. விடுமுறை நாள் வந்துட்டா, ஒண்ணா சேர்ந்து விளையாடுவாங்க. திடீர் திடீர்னு சண்டை வந்து அடிச்சுக்குவாங்க. அடுத்த நிமிஷமே அதை மறந்துட்டு அன்பா கொஞ்சி விளையாடுவாங்க. காலம் உருண்டோடி விட்டது. அப்போ, சகோதரிகளோடு விளையாடினான். இப்போ, சகோதரிகளோட பிள்ளைகளுடன் செல்லச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறான். நேத்து 'விநாயகர் சதுர்த்தி'. பக்கத்து வீட்டுக்காரங்க எல்லாம் அறிவுக்காகக் கொழுக்கட்டை செஞ்சுட்டு வந்து கொடுத்தாங்க.



# ...தம்மாள் பேசுகிறேன்

“சிறு வயதுப் பேரறிவாளனை, எந்த விஷயத்துக்காக நீங்கள் கண்டித்திருக்கிறீர்கள்?”

“நான் கண்டிக்கிற அளவுக்கு தவறேதும் அவன் செய்ததில்லை. அவனுடைய அப்பா, பள்ளிக்கூட வாத்தியார். குடும்பத்திலுள்ள அனைவருமே பெரியார் இயக்கத்தைச் சேர்ந்தவங்க. அதனால, சிறுவயதிலேயே அவனுக்குத் தெளிவான மனநிலையும் உறுதியும் இருந்துச்சு. 26 வருட சிறை வாழ்க்கைக்குப் பிறகும், அதே தெளிவும் உறுதியும் அவன்கிட்ட இருப்பதைச் சொல்லித் தான் எல்லோரும் ஆச்சர்யப்படுறாங்க.

பள்ளியில் படிக்கிறப்போ, ஏதோ ஒரு விஷயத்துக்காக அவனைக் கண்டிக்க நான் கூப்பிட்டேன். வராமல் ஓடினான். கோபத்தில், நான் கையில் வெச்சிருந்த ஜல்லிக்கரண்டியை வீசியெறிஞ்சிட்டேன். அது அவனுடைய கால்களுக்கிடையே மாட்டிக் கீழே விழுந்துட்டான். காலில் அடிபட்டிருச்சு. அப்போதிருந்து, ஜல்லிக்கரண்டியை ‘ஆயுதம்’னு விளையாட்டா சொல்வான். ஒரு தடவை, சிறையில பார்க்கப் போனப்போ, ‘ஆயுதம் எல்லாம் பத்திரமாக இருக்காம்மா’னு விளையாட்டா கேட்டான். அங்கே நின்றிருந்த போலிஸ்காரர் பதற்றத்துடன் விசாரிக்க ஆரம்பிச்சுட்டார். ‘ஒண்ணுமில்லை. அது எனக்கும் அம்மாவுக்குமான விஷயம்’னு சொல்லி ஜல்லிக்கரண்டிக் கதையைச் சொன்னான்.”

“அந்த ஜல்லிக்கரண்டி இப்போதும் இருக்கிறதா?”

“அதுமட்டுமல்ல... அவன் ஓட்டிப்பழகிய சைக்கிள், வாசித்துப்பழகிய கிற்றார் எல்லாமும் பத்திரமாக இருக்கு. வீட்டுக்குள் வந்து அப்பாவின் உடல் நலத்தை விசாரித்தவன், அவனோட விளையாட்டுப் பொருள்கள் எல்லாம் பத்திரமா இருக்கான்னு போய்ப் பார்த்தான். எல்லோரையும் போல, என் மகனோட வாழ்க்கையும் இருந்திருந்தா, இந்நேரம் அவனோட பிள்ளைங்க இங்கே விளையாடிட்டிருப்பாங்க.”

“அப்பா குயில்தாசன் - அம்மா அற்புதம்மாள் பற்றி பேரறிவாளன் என்ன சொன்னார்?”

“வயசான காலத்துல நோய் நொடின்னு நாங்க சிரமப்படுறதைப் பார்த்து அவனுக்கு மனசுக்குள்ள வருத்தம். ‘நாம ஒரே பிள்ளையாயிருந்தும் பெத்தவங்களைப் பக்கத்துல இருந்து கவனிக்க முடியலியே... இந்த வயசுலேயும் நமக்காக அவங்களைச் சிரமப்படுத்துறோமே’ங்குற ஏக்கம் அவனுக்கு உண்டு. அதை மத்தவங்ககிட்டே சொல்வான். அவன் சொன்ன விஷயங்களையெல்லாம் நான் தெரிஞ்சுக கிட்டாலும், அந்த வலியையெல்லாம் ஆழ்மனசுல புதைச்சுட்டு, எதுவும் தெரியாத மாதிரியேதான் அவன்கிட்ட பேசுவேன். ‘நாம யார்கிட்டயும் உதவின்னு போக வேண்டாம்மா... நாம ஒருத்தர்கிட்டே உதவின்னு போயிட்டாலே அவங்க நம்மை அடிமைப்படுத்தத்தான் நினைப்பாங்க’ன்னு எனக்கு அறிவுரை சொல்வான். சின்ன வயசிலிருந்தே ‘சுயமரியாதை’, ‘பகுத்தறிவு’ன்னு வளர்ந்ததால இந்தப் பக்குவம் அவனுக்கு இருக்கு.”

“பேரறிவாளன் திருமணத்துக்குப் பெண் பார்ப்பதாகச் செய்திகள் வந்தனவே?”

“பிள்ளையைப் பெற்ற எனக்குள்ள இருக்குற ஆசையை நான் வெளிப்படுத்துறேன். ஆனா அவனோ, ‘என் வாழ்க்கை உள்ளேயா, வெளியேவா என உறுதியாகாத இந்த நேரத்துல கல்யாணமெல்லாம் வேண்டாம்மா’ன்னு விரக்தியா சொல் நான். ஆனா, என்னால அப்படிக் கடந்து போக முடியல. எங்கள் குடும்பத்தில் அனைவருமே பெரியாரிஸ்ட்கள்தான். பிள்ளைகளையும் ஆண், பெண் என்ற பாகுபாடில்லாமல்தான் என் கணவர் வளர்த்தார். சமத்துவம், சுயமரியாதை, பெண் விடுதலை, சாதி ஒழிப்பு என்று முற்போக்குச் சிந்தனைப் பாதையிலேயே பயணிச்சிருக்கேன். என் மகன் உள்ளிட்டவர்களுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்தெறிய நல்லவர்களின் துணையோடு நாங்கள் கடந்து வந்த பாதையும் எங்களுக்கு நம்பிக்கையைத் தந்திருக்கு.

‘பேரறிவாளன் நல்ல பையன்’ன்னு எங்க ஊர்க்காரங்களும், உறவுக்காரங்களும், நண்பர்களும்தான் சொல்லிட்டு இருந்தாங்க. ஆனா, தமிழகச் சட்டமன்றத்தில், மூவர் விடுதலைக்காகத் தீர்மானம் இயற்றித் தந்து, இவர்கள் ‘குற்றமற்றவர்கள்’ என உலகுக்கே உரக்கச் சொல்லிச்சென்ற மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு நாங்கள் நிச்சயம் நன்றி சொல்லணும். அதுக்கப்புறம் தான், உலகமே இவங்க பக்கம் இருந்த நியாயத்தை உணர ஆரம்பிச்சது.

இப்போகூட, தமிழக அரசியல் சூழலில், பல சிக்கல்களுக்கிடையே என் மகன் பரோலுக்காக நான் முதல்வரைச் சந்திக்க நேரம் கேட்டப்போ, நேரம் ஒதுக்கியதோடு உதவுவதாகவும் முதல்வர் உறுதியளிச்சார். சொன்னதுபோலவே இப்போது என் மகனுக்கு ஒரு மாதம் பரோல் கொடுத்து வீட்டுக்கும் அனுப்பி வெச்சிருக்காங்க. இந்த மகிழ்ச்சி முப்பது நாள்களுக்குள் வடிந்துவிடாமல், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவருமே நிரந்தர விடுதலை பெற்று வீடு திரும்பணும்.

எங்களின் இந்த மகிழ்ச்சியை நிரந்தரமாக்க நல்ல உள்ளம் படைத்தவர்கள் நிச்சயம் உதவுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு.

இத்தனை ஆண்டு காலமாக தனியாகக் கழிவறை வசதிகூட இல்லாமல், உணவு, தூக்கம், காலைக்கடன்... என அனைத்துமே ஒரேயொரு சின்ன அறைக்குள் தான் என்று வாழ்க்கையைக் கழித்து விட்டவன் அவன். எல்லோரையும் போல், என் பிள்ளையும் குடும்பம், குழந்தைகள் என எங்களுடன் வந்து வாழ வேண்டும் என்ற ஆசையைத் தவிர வேறு எந்த ஆசையும் எனக்கு இல்லை...” கண்ணீர் மல்க நம் கரங்களைப் பற்றி விடை கொடுத்தார் அற்புதம்மாள்.



போலீஸ் பாதுகாப்பில் பேரறிவாளன் வீடு...

டிருந்தது. ஆனால், மகனைக் கண்டதும் நோய் என்ன? நொடிப்பென்ன? அத்தனையும் பறந்து போய்விட்டது. இரவு உண்பதற்கு தோசை ஊற்றித் தரச்சொல்லிக் கேட்டான். சிறைவாசம் அவனுக்கு தோசை கிடைப்பதைக்கூட அரியதாக்கியிருந்தது. அன்றிரவு, நான் என் கணவர் மற்றும் பிள்ளைகள் மூன்று பேர் என இருபத்தாறு ஆண்டுகள் கழித்துக் குடும்பமாக ஒன்றாக உட்கார்ந்து உணவு உண்டோம்.



அறிவுக்கு கிற்றார் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசை. அவனுடைய அக்கா ஆசையாக வாங்கிக் கொடுத்த கிற்றாரைத் தடவிப் பார்த்துக் கொண்டிருந்தான். இளையவள் அவனுக்கு மொபைல் போன் வாங்கிக் கொடுத்து அதில் வாட்ஸ்அப் உபயோகிக்கக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். சிறு வயதில் ஒருவருக்கு ஒருவர் சீண்டிக் கொண்டும் செல்லப்பெயர் இட்டுக்கொண்டும் விளையாடியதைப்போலவே இப்போதும் செல்லமாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குறிஞ்சி மலர் பூக்க பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகும். இங்கே எங்கள் குடும்பம் மீண்டுமாய் பூக்க இரு குறிஞ்சி மலர்கள் பூக்கும் காலங்கள் கடந்துள்ளன. இந்த 26 ஆண்டு காலம் அதற்குத் தேவையாய் இருந்துள்ளது.

இயற்கையென்றால் அவனுக்கு மிகவும் இஷ்டம். சிறையில் இருக்கும்போது நிலவைப் பார்க்க வேண்டும், கவிதை எழுத வேண்டும் என்று அடிக்கடி சொல்வான். பரோலில் வெளியே வந்த பிறகு, இரவு எங்கள் வீட்டுத் தோட்டத்தில் இருந்து வானத்தில் நிலாவைப் பார்த்துவிட்டு ‘அம்மா! நிலாவைப் பார்த்துட்டேன். ஆனால், மகிழ்ச்சியில் கவிதை தான் தோணலை’ என்றான் குழந்தையைப் போல. “இந்தக் குழந்தை மனதை ஏனடா சிறைக்குள் பூட்டி வைத்துள்ளீர்கள்” என்று மனதுக்குள் அழுது கொண்டேன்.

அழ வேண்டாம் என்று மட்டும் தயவுசெய்து எனக்கு அறிவுறுத்தாதீர்கள். சோகம் என்றாலும் மகிழ்ச்சி என்றாலும் என்னால் கண்ணீரில் தான் வெளிப்படுத்த முடியும்.

இதை எழுதும்போது என் மகன் என்னுடன் இருக்கிறான் என்கிற மகிழ்ச்சியில் என் கண்களில் நீர் வடிகிறது. அவன் எங்களுடன் இருக்கும் இந்த முப்பது நாட்களில் ஒவ்வொரு நிமிடமும் அவனுக்குப் பிடித்தது போல அனைத்தும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

முப்பது நாட்கள் கழித்து அதே இருட்டறை சிறைவாசத்துக்கு மீண்டும் என் மகன் சென்றுவிடுவானோ... என்பதை நினைக்கும்போது மனது பயம் கொள்கிறது. நிரந்தரமாக அவன் எங்களுடனே இந்த வீட்டில் இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

என் மகன் அறிவு இதுவரை அனுபவித்த துன்பங்கள் போதும். அவனுக்கான முழு விடுதலை வேண்டும். அவன் வாழ்க்கையில் இனிமேல் மகிழ்ச்சியை மட்டுமே உணர வேண்டும். அவனோடு மகிழ்ச்சியாகத் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கும் ஒரு பெண்ணைப் பார்த்து அவனுக்கு மணமுடித்து வைக்க வேண்டும். என் குடும்பமும் எங்கள் மனமும் நிரம்பி இருக்க வேண்டும். அதைப் பார்த்துவிட்டுத்தான் நான் நிம்மதியாகக் கண்மூடுவேன்.

நீங்காத நம்பிக்கையுடன்,
அற்புதம் அம்மாள்



# கடந்து போக முடியாத கனம்

எல்லாமே சகஜம் என கடந்து போக முடியவில்லை எமக்கு என்ன நடக் கின்றது என புரிந்து கொள்வதற்கிடையில் அடுத்தது நடந்து விடுகிறது.

என்ன நடந்து கொண்டிருக்கிறது எம் சமூகத்துக்கு...சமூகத்துக்கு கரு த்துக்கூற நான் யோக்கியமா? என்பதற்கப்பால் சமூகத்தின் மீது விருப்பு கொண்டவனாகவும் வெறுப்பு கொண்டவனாகவும் எதையோ உதிர்த்துவிட முனைகிறது மனது.

யாழ்ப்பாணத்தில் பிறந்த நாள் கொண்டாட கடலில் சென்று பிறந்த நாளை இறந்த நாளாக பிரகடனப்படுத்தியவனையும் மற்றைய தம்பிகளை நினைக்கவும் மனம் அழுக்கம் தாங்காது வெடிக்க விளைகிறது.. என்ன சொல்வதென்றே தெரியவில்லை. முதலில் என் தம்பிகளின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நகருகிறேன்.

இத்தகைய நிகழ்வுகளுக்கு யார் பொறுப்பு கூற வேண்டும்

1.பெற்றோர்
2.ஆசிரியர்கள்
3.உறவினர்கள்
4.பாடசாலை சமூகம்
5. சமூகம்
6.புத்திஜீவிகள்
7.சமூக ஆர்வலர்கள்
8.சட்டம் பேசும் வல்லுநர்கள்

என எல்லோருமே பொறுப்புக்கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

அதாவது ஒரு தசாப்த காலத்துக்கு முன் கூட இவ்வாறான நிகழ்வுகள் நடந்தேறவில்லை...சாவுகள் நடந் தேறின. ஆனால் காரணகர்த்தா வோடு. ஆனால் எமனுக்கு ஆடம் பர பரிசாக பறிகொடுக்கவில்லை.

முன்னரெல்லாம் நாம் வீட்டில் பெரியவர்களை மதிக்கவில்லை என்றால் ஓட ஓட அடி விழும்,


நல்ல ஞாபகம் எனக்கு. தரம் 10 படிக்கையில் மாபிள் விளையாடும் போது ஒரு அண்ணாவை தரக்குறைவாக பேசியதை அவதானித்த என் அப்பா வயலுக்கு தண்ணீர் இறைக்கும் வோட்டர்பம்ப் ஷ்ராரனன்னுகுற கயித்தினால் நான் ஓட ஓட என்னை ஊருக்குள் கலைத்து கலைத்து அடித்தார். அது அப்போது வலித்தது. இப்போது இனிக்கிறது.

மாலை 6மணியென்றால் லாம்பு களுக்கு எண்ணெய் விட்டு சிமிலிகள் துடைத்து மண்ணெண்ணெய் விட்டு படிக்க அமர வேண்டும். இடையில் தூங்கி விழுந்தால் முதுகில் விழும்.

வெள்ளியென்றால் தேவாரம் பாடமாக்கிக் கொண்டு கோவிலுக்கு செல்ல வேண்டும். இல்லையென்றால் ஊர் அண்ணாமார் அடிப்பாங்கள்.

ரியூசனுக்கு போக வில்லையெண்டால் வாத்தி அடிக்கும் , பாடசாலையில் குழப்படி என்றால் வாத்தியார் அடிச்சு, பிறகு பகுதித் தலைவர் அடிச்சு, பிறகு அதிபர் அடிக்க என் தண்டனைகள் நிறைவேற்றத்துக்கு வரும், அதோடு பாரதூர குழப்படிகள் என்றால் வீட்டுக்கும் பாரப்படுத்தப்பட தண்டனைகள் அதியுச்சமாகும்.

இவ்வாறு பல சம்பவங் களை அடுக்கிக்கொண்டே போகலாம்.



அப்போது மின்சாரம் இல்லை. வெளிச்சம் வாழ்க்கைக்கு அதிகமாக கிடைத்தது.

❖ அப்போது வசதி வாய்ப்புக் கள் குறைவாய் இருந்தன. வாழ்க்கை நன்றாய் இருந்தது.

❖அப்போது பணங்கள் அதிகமாய் இல்லை. ஆனால் மனங்கள் நிறைந்திருந்தது.

❖ அப்போது கட்டடங்கள் அதிகமாயில்லை. ஆனால் மனம் கல்லாயிருக்கவில்லை.

❖ அப்போது அப்பா அம்மா அப்பா அம்மாவாகவே இருந்தார்கள். இப்போது....

❖ அப்போது வாத்தி கையில் பிரம்பிருந்தது. இப்போது மனித உரிமை கவுன்சிலில் வழக்கிருக்குது.

❖ அப்போது மாணவர்களை ஆசிரியர்கள் தண்டித்தார்கள்... இப்போது ஆசிரியர்களை மாணவர்கள் தண்டிக்கிறார்கள்.

❖ அப்போது நாட்டில் சண்டை நடந்தது. மனதில் சமாதானம் இருந்தது

❖ அப்போது கணவன் மட்டுமே வேலைக்கு போனார்கள். குடும்பத்தில் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு குறைவேயில்லை, பணச்சுமை வரவேயில்லை, இப்போது இருவரும் வேலைக்கு போகிறார்கள்....ஆனால்.?

❖ அப்போது கோவில்கள் இருந்தன. சமய, சமூ கத்துக்காக இப்போது பணம் விளைவிக்கும் கொள்ளையடிக்கும் தொழிற்சாலையாக..

❖அப் போதும் போதைகள் இங்கிருந்தன. அதை நுகர நுகர்வோர் மட்டுப்படுத்தப் பட்டிருந்தனர். இப்போது ஊருக்கு பாடசாலைகள் இருக்கிறதோ இல்லையோ ஊருக்கு 2 மது பான சாலைகள் உள்ளன. விலை கட்டுப்பாடுமில்லை, நுகர்வோர் கட்டுப்பாடுமில்லை.

> **“அப்போது மின்சாரம் இல்லை. வெளிச்சம் வாழ்க்கையில் அதிகமாய் இருந்தது.”**

❖ அப்போதும் குடிகாரர்கள் இருந்தார்கள். குடிகாரர்களிடம் மாணவர்கள் அடிவாங்கினார்கள். இப்போது மாணவக்குடிகாரர்களிடம் குடிமக்கள் அடி வாங்குகிறார்கள்.

❖ அப்போதும் திருவிழாக்கள், கச்சேரிகள். பார்டிகள் நடைபெற்றன தான் அளவோடு. இப்போது பார்டி என்றாலே மதுபானப் பாவனையாகி விட்டது.இவ்வாறு எனது கட்டிக் காக்கப்பட்ட நல்ல தேசமொன்று கண் முன் நாசமாய் போவதை ஜீரணிக்க முடியாதவனாக நான் மட்டுமல்ல குடாவின் ஒவ்வொரு குடிமகனும் கடந்து போகிறான்.

பெற்றோரே ....

1.மகனுக்கு கல்வியைக் கொடு , கல்விக்காக காசை கண்டபடி இறைக் காதே, இளமையிலும் கல்வியிலும் கொஞ்சம் வறுமை காட்டு, நீங்கள் பணக்கார குடும்பமாக இருக்கலாம் செயற்கை வறுமை காட்டு,

ஔவையார் சொன்னார் "கொடிது கொடிது இளமையில் வறுமை" அது சரி அவர் சொன்னது உழைத்து குடும்பம் பார்க்க எண் ணும் இளைஞனுக்கு இளமையில் வறுமை கொடிது...ஆனால் நமது குடா நாட்டு பெற்றோர் சும்மா சுத்தி திரியும் பிள்ளைகளுக்கு வாரி இறைகிறார்கள், படிப்பவனுக்கு எதற்கு மோட்டார் சைக்கிள்?, வீட்டில் மோட்டார் சைக்கிள் இருக்கட்டும் மகனை சைக்கிளில் அனுப்பு..படிக்க .

இப்போது என் சமூகத்துக்கு ஔவையாரின் வாக்கு பொய்த்து போகிறது.. இளமையில் வறுமை காட்டு உன் குழந்தைகளுக்கு.


இப்போது தாய் தகப்பன் எல்லோ ரும் பிள்ளைகளை பாடசாலைக்கு வகுப்புக்கு, பிரத்தியேக வகுப்புக்கு என காவிச்செல்கிறார்கள். ஆனால் எல்லோருமே சிறந்த சித்தியை பெறுகிறார்களா? இல்லை

ஒரு கதை .. நடிகர் ஜாக்கிசான் அவர் கள் தன் சொத்து எல்லாவற்றயும் வறிய மாணவர்களுக்கு எழுதி வைத்துவிட்டார், ஏனென்றால் நான் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்த மாதிரியே என் மகனும் வளரட்டும், அவனுக்கு வாழ்க்கையின் கஷ்டங் கள் புரியட்டும் என் பணத்தில் அவன் ஊதாரியாக வேண்டாம் என்றார்.

ஆனால் என் சமூகமோ ஓடுகிறது, ஓடி ஓடி உழைகிறது, சொத்து சேர்கிறது, நகை சேர்கிறது. அதை தான் அனுபவிக்காமல் சேர்த்து சேர்த்து மகளுக்கு சீதனமாக கொடு க்க அச்சொத்து மேலும் திரளுகையடைந்து அவர்களும் சேர்கிறார்கள்.. இதனால் சொத்து திரளலைந்து கொண்டு போகிறதே தவிர அது நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எந்த வழிபாங்கினையும் ஏற்படுத்துவதில்லை .என் சமூகம் எங்கு போகிறது, ஓடுகிறது என எனக்கு புரியாத விடயமாக இருப்பது போலத்தான் உங்களுக்கும் இருக்கும்.

**கு.மதுசுதன்**

# வெஸ்ட் இண்டீஸ், வங்க தேச அணிகளின் எழுச்சி... புத்துயிர் பெறும் டெஸ்ட் கிரிக்கெட்



2008-ம் ஆண்டு ஐபிஎல் முதல் சீசன் அறிமுகமான ஏப்ரல் மாதம் இப்போது இருப்பதுபோல் அப்போது ஐபிஎல்-க்குப் பின்னால் 8, 9 என்றெல்லாம் எழுதாத காலம்.

ஷாருக்கான், மல்லையா, அம்பானி, சீனிவாசன் என்று பெரும் பணக்காரர்கள் பல கோடி முதலீட்டில் உதயமான அந்த கிரிக்கெட் திருவிழாவின் முதல் ஆட்டத்தில் கொல்கத்தா அணியின் மெக்கலம் 73 பந்துகளுக்கு 158 ரன்கள் எடுத்து ஐபிஎல்இன் முதல் சதத்தைப் பதிவுசெய்தார்.

223 ரன்கள் என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய டிராவிட் தலைமையிலான பெங்களூர் அணி, 82 ரன்களுக்கு மண்ணைக் கவ்வியது. அப்போது 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் சர்வதேச அணிகள் விளையாட ஆரம்பித்து சில ஆண்டுகள் தான் கடந்திருக்கும்.

2007ஆம் ஆண்டுதான் டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, 20 ஓவர் கோப்பையை தன் வசமாக்கி புதிய வரலாற்றின் முதல் அத்தியாயத்தை எழுதத் தொடங்கியது.

ஐபிஎல்இன் எழுச்சி பலருக்கு சந்தோஷம் தந்தது. குடும்ப உறுப்பினர்கள் மாலை வேளையில் ஒன்றாக உட்கார்ந்து கிரிக்கெட் பார்க்க ஆரம்பித்தார்கள். பெண்கள் அதிக அளவுக்கு மைதானத்துக்கு வந்தார்கள். உலகின் அத்தனை முன்னணி கிரிக்கெட் வீரர்களும் காசு கொடுத்து வாங்கப்பட்டார்கள். பொலிவுட்டும் கிரிக்கெட்டும் மணமுடித்த அந்த திருவிழாவில் பட்டாசு சத்தத்துக்கு பஞ்சமே இல்லை. கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு உலக கிரிக்கெட் ரசிகர்களை கட்டிப் போட்டது ஐபிஎல். பல டெஸ்ட் விரும்பிகள் மனதில் ஒரு மூலையில் இருந்த பயம், "இனி டெஸ்ட் கிரிக்கெட்டின் நிலை!"

அடுத்த ஆண்டும் ஐபிஎல் வந்தது. உலகில் இருக்கும் பெரும்பான்மையான கிரிக்கெட் போர்டுகள் ஐபிஎல் போட்டிகளுக்கு ஏற்றவாறு தங்களது போட்டிக்கான அட்டவணையை மாற்றினர். இதோ ஐபிஎல் இன் 10ஆவது சீசனும் முடிந்துவிட்டது.

ஆரம்பத்தில் ஐபிஎல்-க்கு இருந்த மவுசு இப்போது இருக்கிறது என்று அறுதியிட்டுக் கூற முடியாத நிலை. இப்போதெல்லாம் ஐபிஎல் இரண்டு மாதங்கள் நீடிப்பது பலருக்கு அலுப்பூட்டுகிறது. சம்பியன்ஸ் டிராபியின் மீதும் ஒருநாள் போட்டிக்கான உலகக் கோப்பை மீதும் இருக்கும் மோகம் ஐபிஎல் மீது இப்போது இருப்பதில்லை.

இத்தனைக்கும் முன்னைப் போதையும் விட ஐபிஎல்இன் விளம்பரத்துக்கான செலவு கூடிக் கொண்டுதான் போகிறது. ஆனால், அதே நேரத்தில், தரமான டெஸ்ட் போட்டிகள் மீது (அது அண்டை நாடாக இருந்தாலும் சரி) இருக்கும் ஈர்ப்பு அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

இன்றும் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்று நாடுகளில் நடக்கும் டெஸ்ட் போட்டிகளுக்கு மைதானத்தில் "புல் ஹவுஸ்" கூட்டம் வருகிறது. தொழில்நுட்பம் உச்சத்தைத் தொட்டுள்ள சமயத்தில் தான் இந்த அதிசயமும் தொடர்ந்து நடந்து வருகிறது.


புத்தாயிரத்தின் தொடக்கத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு பெரிய அச்சுறுத்தலாக ஒரு விடயம் இருந்தது. அப்போது அவுஸ்திரேலியா கோலோச்சிக் கொண்டிருந்த 2000ஆம் ஆண்டுகளின் தொடக்கம். பொண்டிங், தலைமையிலான அவுஸ்திரேலிய அணி அனைத்துவித கிரிக்கெட் போட்டிகளிலும் எதிராளிகளை தவிடு பொடியாக்கிக் கொண்டிருந்த காலகட்டம்.

அப்போது பொண்டிங், "மிகவும் உயிரோட்டமே இல்லாத பிட்ச்களால் டெஸ்ட் கிரிக்கெட்டின்சுவாரஸ்ய தன்மையே இல்லாமல் போகின்றது" என்று கூறினார். டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் ஒவ்வொரு நாடும் பெரும்பான்மையான நேரங்களில், தன் நாட்டு பட்ஸ்மேன்கள் அதிக ரன்கள் அடிக்க வேண்டும் என்ற நோக்கில் மிக தட்டையான பிட்ச்களை உருவாக்கினார்கள்.

இதனால், அதிக ரன்கள் எடுக்கப்பட்டாலும் ஒரு பக்கம் ரிசல்ட் கிடைக்காமல் டெஸ்ட் கிரிக்கெட்டின் மீதிருந்த சுவாரஸ்யத்தன்மை குறைந்து வந்தன. பின்னர் 20 ஓவர் கிரிக்கெட்டின் அறிமுகம் டெஸ்ட் கிரிக்கெட்டை வீரர்கள் அணுகும் விதத்தையே மாற்றியது. இது ஒரு வகையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் "ரிசல்ட்" கிடைப்பதற்கு மறைமுகமாக உதவியது.

இப்படி மறைமுகமான பல விடயங்களால் டெஸ்ட் கிரிக்கெட்டின் சுவாரஸ்யத் தன்மை கூடிக் கொண்டே போனது, 29ஆம் திகதி வெஸ்ட் இண்டீஸ் அணி, உலகில் தற்போது நம்பர் 1 டெஸ்ட் அணி என்று சொல்லப்பட்ட இங்கிலாந்தை சொந்த மண்ணில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு வீழ்த்தி தற்கால கிரிக்கெட்டில் மிகப் பெரிய "அப்செட்டை" அரங்கேற்றியுள்ளது. இது ஒரு புறமிருக்க, அவுஸ்திரேலியாவை முதன்முதலான டெஸ்ட் அரங்கில் வீழ்த்தி வரலாற்றை திருத்தி எழுதியுள்ளது வங்கதேச அணி. டுவிட்டரில் அக்டிவாக இருக்கும் அனைத்து கிரிக்கெட் பிரபலங்களும் இது டெஸ்ட் கிரிக்கெட்டின் புத்துயிர் பெற்றுள்ள விடயமாகவே பார்க்கின்றனர்.

இருபது-20 அல்ல T10, T5 என எத்தனை கிரிக்கெட் வந்தாலும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு மாற்று இருக்கப் போவதில்லை என்பது மீண்டுமொரு முறை நிரூபணம் ஆகியுள்ளது. (க)



## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: படகோட்டி
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல் வரிகள்: வாலி
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்




உலகத்தின் தூக்கம் கலையாதோ ஓ...
உள்ளத்தின் ஏக்கம் தொலையாதோ ஓ...
உழைப்பவர் வாழ்க்கை மலராதோ ஓ...
ஒரு நாள் பொழுதும் புலராதோ ஓ...
தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை
தண்ணீரில் பிழைக்க வைத்தன்
கரைமேல் இருக்க வைத்தான் பெண்களை
கண்ணீரில் குளிக்க வைத்தான்
தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை
கட்டிய மனைவி தொட்டில் பிள்ளை
உறவை கொடுத்தவர் அங்கே
அலை கடல் மேலே அலையாய் அலைந்து
உயிரைக் கொடுப்பவர் இங்கே
வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்
கடல் தான் எங்கள் வீடு
வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்
கடல் தான் எங்கள் வீடு
முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும்
இதுதான் எங்கள் வாழ்க்கை
இதுதான் எங்கள் வாழ்க்கை
தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை
கடல் நீர் நடுவே பயணம் போனால்
குடி நீர் தருபவர் யாரோ
தனியாய் வந்தால் துணிவைத் தவிர
துணையாய் வருபவர் யாரோ
ஒரு நாள் போவார் ஒரு நாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்
ஒரு நாள் போவார் ஒரு நாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்
ஒரு சாண் வயிறை வளர்ப்பவர் உயிரை
ஊரார் நினைப்பது சுலபம்
ஊரார் நினைப்பது சுலபம்
தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை

# உங்கள் மாதப்பலன் எப்படி?

*(கடந்த வார தொடர்ச்சி)*

மிகவும் எளிய குடும்பங்களில் பிறந்தவர்கள், கல்வியில்லாதவர்கள் இந்த மாதத்தில் பிறந்தவர்களாக இருந்தால் தாம் எண்ணியதைச் செய்ய முடியும். செய்வார்கள். சட்டத்தைப் புறக்கணிப்பார்கள். எசமானர்களாக இவர்கள் விளங்கினால் மிகக் கொடியவர்களாக மாற வாய்ப்புண்டு. அதன் பலனை நன்கு அனுபவிப்பார்கள். பண்புள்ள குடும்பத்தில் பிறந்தவர்களாக இருந்தால் சிறந்த முதலாளிகளாகவும் ஒழுக்கத்தில் மிகவும் கருத்துடைய வர்களாகவும் இருப்பார்கள்.

எதிர்காலத்தைப் பற்றியே இவர்கள் பெரும்பாலும் எண்ணிக்கொண்டிருப்பார்கள். எந்த ஒரு செயலும் வளரும் வரை பொறுத்திருக்க முடியாது இவர்களால். என்ன நடக்கும், எப்படி முடியும் என்று முன்கூட்டியே எதையும் கற்பனை செய்து கொண்டே இருப்பார்கள். இவர்கள் எண்ணுவதைப் போலவே பெரும்பாலும் நடக்கும்.

குடும்பத்திலோ, பணியாற்றும் இடங்களிலோ, தொழிலிலோ தன்னை மற்றவர்கள் முதல்வர் என்று எண்ண வேண்டும் என்பது இவர்களுடைய ஆவல்.

அன்பினால் இவர்கள் துன்பம் கொள்ளுவார்கள். பெண்களை இவர்களால் புரிந்து கொள்ளவே முடியாது. இதனால் பெரிய தவறுகளை இழைத்து விடுவார்கள்.

தாம் எடுத்துக்கொண்ட வேலைகளைச் செய்து முடிப்பதிலும் அப்போது ஏற்படும் தடைகளைத் தகர்த்து எறிவதிலுமே இவர்கள் மகிழ்ச்சியைக் காண்கிறார்கள்.

இவர்கள் வாழ்க்கையில் கடி வெடிப்புக்கள் ஏற்படும். மூக்குத்துவாரத்தில் ஏதாவது நோய் வரும். தலையில் அடி, வெட்டுக் காயங்கள் ஏற்படலாம். வெடி விபத்துக்கள், தீ விபத்துக்கள், இன்ஜின்கள் அல்லது இயந்திரங்கள் வெடிப்பதில் ஏற்படும் ஆபத்துக்கள் இவர்களைப் பாதிக்கும். வாழ்க்கையில் இவர்கள் ஒரு தடவையாவது சத்திரசிகிச்சை செய்து கொண்டுதான் ஆக வேண்

## மார்ச் 21- ஏப்ரல் 19 ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

வெட்டுக்காயம், ரணங்கள், மண்டையில் அடி, அடி உதைகள், அச்சம் தரும் நிகழ்ச்சிகள், விபத்துக்கள் முதலியன அடிக்கடி ஏற்பட வாய்ப்புண்டு.

உடல் நிலை

மற்றவர்களைவிட இவர்கள் மிக அதிகமாகத் தூங்க வேண்டும். மூளைக்கு இவர்கள் மிகுந்த வேலைகளைக் கொடுப்பதால் தலையைப் பாதிக்கும் நோய்கள் இவர்களுக்கு மிக எளிதில் வரும். தலைவலி, கண் நோய்கள், மூளை வீக்கம் முதலியவை அடிக்கடி ஏற்படும். தலைக்கு இரத்தம் அடிக்கடி விரைந்து செல்லும். முகத்திலும் தலையிலும் அடிக்டும். டாக்டர்களின் கத்திகளுடன் கூடிய அனுபவங்கள் இவர்களுக்கு மிகுதியாக ஏற்படும்.

வண்ணங்கள்

இவர்களுக்குப் பிடித்த வண்ணங்கள், சிவப்பு, ரோஸ். உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கும் போது நீலம், ஊதா முதலிய வண்ணங்கள் இவர்களுக்குச் சிறந்தவை.

இந்த மாதத்தில் பிறந்த சிலர்

பிஸ்மார்க்- ஜேர்மன் அரசி யல்வாதி,ஹிட்லர், ஷேக்ஸ் பியர்,ஸர் ஸ்டா போர்டு கிரிப்ஸ், ஜெக ஜீவன்ராம்.

(தொடரும்)

# உயிரணிகம்

## உயிர் காக்கும் உன்னத பணிக்காய்

மூன்று தசாப்தகால கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எம் தமிழினம் சற்றே போரோய்ந்து நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற தருணத்தில் பல்வேறு வகையான நோய்களின் தாக்கத்திற்குள்ளாகி வருவது வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்தும் பல்வேறு ஊடகங்கள் வாயிலாகவும் அறிய முடிகிறது.


தொற்றுநோய்கள் (communicable diseases) மற்றும் தொற்றா நோய்களின் (non-communicable diseases) தாக்கத்தால் எமது மனிதவளம் உச்ச அளவில் பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம்.

இவற்றுள் நீரிழிவு, குருதிய முக்கம் மற்றும் புற்றுநோய்கள் போன்ற தொற்றா நோய்கள் நன்கு முற்றிய பின்னரே மக்கள் விழித்துக் கொள்கின்றமை, நோயின் கொடிய தாக்கத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற முடியாமல் போவதற்கு ஏதுவாகின்றது.

இவ்வகை நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தகுந்த சிகிச்சை மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டால் பாரிய பின்விளைவுகளைத் தவிர்க்க முடிவதோடு எமது சமூகத்தின் மனித பொருளாதார வளங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் முடியும்.

எம் மக்களிடையே இந் நோய்கள் பற்றிய விழிப்புணர்வும் வருமுன் காக்க வேண்டும் என்ற அக்கறையும் போதாமல் இருப்பதோடு இந்நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக, தம்மைப் பரிசோதித்துக்கொள்ள தனியார் துறையில் அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளமை, பரிசோதனை வசதிகள் காணப்படும் இடங்கள் அதிக தூரத்தில் இருப்பதால் ஏழைகள் ஒருநாள் வேலையை விட்டுச் சென்று வருவதைவிட கைவைத்தியத்துடன் சமாளித்து விடலாம் என்பதனையும் அவர்களது நிலைமையிலிருந்து பார்த்தால் மறுதலிக்க முடியாதுள்ளது.

மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு சமுதாயப் பொறுப்புணர்வோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட




முன்னாள் மாணவர்கள் (ALUMNI) தங்களாலான தீர்வொன்றினைக் காண முன்வந்துள்ளனர்.

அதாவது, ஏழை மக்களின் மத்தியில் தொற்றாநோய்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஆரம்பத்திலேயே நோய்களைக் கண்டறியும் நோக்கில் கிராமங்கள் தோறும் சென்றுவரும் ஆய்வுகூட வாகனம் ஒன்றினைக் கொள்வனவு செய்து தமது நிபுணத்துவத்தினையும் ஒருங்கிணைத்து செயற்படத் திட்டமிட்டுள்ளனர்.

இச்சமுதாய ஆரோக்கிய மேம்பாட்டுச் செயற்றிட்டத்திற்கான நிதியினைச் சேகரிப்பதற்காக மாபெரும் இசை நிகழ்வொன்றினையும் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

எமது பிரதேசவாழ் மக்களின் உயிரைப் பாதுகாக்கும்: உயிருக்கு அணிசெய்யும் இவ் இசை நிகழ்வானது- "உயிரணிகம்"- எதிர்வரும் ஐப்பசி 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் மருத்துவபீட "ஹூவர்" கேட்போர்கூடத்திலே நடந்தேறவுள்ளது.

இவ்விசை நிகழ்விலே, இளம் பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷுடன் எல்லோர் மனதினையும் கவர்ந்த "சுப்பர் சிங்கர்" புகழ் பிரியங்கா மற்றும் கௌசிக் ஆகியோர் இசையாலே எமது ஆத் மாக்களை வருடப்போகிறார்கள்.

எனவே, இவ் இசை விருந்திலே கலந்து சமுதாயப்பணிக்கு உதவுவார்கள் எம்மவர்கள் என யாழ்ப் பாணப்பல்கலைக்கழக மருத்துவபீட முன்னாள் மாணவர்கள் ஆழமாக நம்புகின்றார்கள்.

Dr.எஸ்.கண்ணதாசன்

சினிமா செய்தி

# புரியாத புதிர்

## திரைவிமர்சனம்



புரியாத புதிர் நீண்ட நாளாய் எதிர்பார்க்கப் பட்ட படங்களில் ஒன்று. பெயர் மாற்றப்பட்டு நாட்கள் நகர்ந்து போய் தற்போது வெளியாகியிருக்கிறது. படத்தின் பெயர் போல கதைக்குள் ஒளிந்திருக்கும் சம்பவம் என்ன, புதிர் புரியுமா என பார்ப்போம்.

விஜய் சேதுபதி ஒரு கிற்றார் இசைக்கலைஞர். தன் நண்பனின் இசைக்கருவிகள் தொழிலை கவனித்து வருகிறார். வயலின் வாங்க கடைக்கும் வரும் ஹீரோயின் காயத்திரியின் நட்பு கிடைக்கிறது.

காயத்திரி இசை ஆசிரியையாக பணி செய்கிறார். இருவரும் நெருங்கிய நண்பர்களாக பின் காதல் மலர்கிறது. இவரின் அன்பான கல்லூரி தோழி ஒரு கட்டத்தில் தற்கொலை செய்துகொள்கிறார்.

கதையின் ட்விஸ்ட் இங்கே தான். சமூக வலைதளக்குற்றங்கள். சைபர் கிரைம் என காயத்திரியை சுற்றுகிறது. மீராவாக நடித்திருக்கும் இவரின் பின்னணியில் நடக்கும் சம்பவங்கள் விஜய் சேதுபதிக்கு தெரியவர அவர் நிலை குலைந்து போகிறார்.

தன் நண்பன் தற்கொலை செய்துகொண்டது. காயத்திரி சம்பவம் என அடுத்தடுத்த நிகழ்வால் விஜய் சேதுபதியின் குணங்களில் வரும் திடீர் மாற்றம் காயத்திரிக்கு ஒரு ட்விஸ்ட். ஒரு கட்டத்தில் விடயம் இவருக்கு தெரியவர இவரும் தற்கொலைக்கு முயல்கிறார்.

விஜய் சேதுபதி தன் நிலையில் இருந்து மீண்டாரா, காயத்திரி உயிருக்கு என்னானது, சம்பவத்தின் பின்னணியில் யார் இருக்கிறார், அமானுஷ்யமா, திட்டமிட்ட சதியா என்பது புரியாத புதிரின் மீதிக்கதை.

விஜய் சேதுபதி ஒரு நகரத்து இளைஞராக கலக்கியிருக்கிறார். அவரின் நடிப்பு, சூழ்நிலையால் குணம் மாறும்விதம் என டபுள் ஆக்ட் போல தோன்றும். அவரின் உடல் அசைவுகள், நடிப்பிற்கு உணர்வுகள் கொடுக்கிறது.

காயத்திரி விஜய் சேதுபதிக்கு பொருத்தமான ஜோடியாக மாறியிருக்கிறார். ஒரு கட்டத்தில் வரும் கதைக்கு ட்விஸ்டாக மாறியது எதிர்பாராத ஒன்றாக இருக்கும்.

விஜய் சேதுபதியின் படங்களில் ஹியூமர் இருக்கும். ஆனால் இப்படத்தில் நண்பனாக அர்ஜுனன் வந்தாலும் பெரிதளவில் காமெடிகள் எதுவும் இல்லை. ஹீரோவுக்கு வைக்கப்படும் செக் சமீபத்தில் பரவி வரும் ப்ளூ வேல் கேம் போல தோன்றும்.

ஹீரோ ஹீரோயின் ரொமான்ஸ் தான் படத்தில் தனித்துவம். இருவருக்கும் கெமிஸ்ட்ரி ஒர்க்கவுட் ஆகியிருக்கிறது. அதற்கேற்ப பாடல்க ளும் ஓகே. இடையில் திடீரென வந்து கைதாகும் ரமேஷ் திலக் எங்கிருந்து வந்தார்? எதற்காக வந்தார்? என்பது சஸ்பென்ஸ்.

வேறொருவரின் தற்கொலையில் நாமும் ஒரு காரணமாக இருக்கிறோம். தற்கொலை பிரச்சினைகளுக்கு தீர்வல்ல. பார்க்கும் பார்வை கூட தற்கொலைக்கு தூண்டும் என சொல்லியிருக்கிறார் இயக்குநர்.


விஜய் சேதுபதியை பாராட்ட வேண்டும். கதை தேர்ந்தெடுத்த விதம், அதற்கு ஏற்ப மாறிய விதம். ரொமான்ஸ் என ஸ்கோர் அள்ளுகிறார்.

மீரா என்ற பெயர் காயத்திரிக்கு பொருந்தியதோடு விஜய் சேதுபதியுடன் கெமிஸ்ட்ரியில் இணையாக நடித்திருக்கிறார்.

இயக்குநர் கதையை காட்டிய விதம் கச்சிதம் இருக்கையின் நுனியில் உட்கார வைத்துள்ளது. ஆங்காங்கே கதைக்கு தேவையான பின்னணி இசை.

கதையில் சில இடங்களில் லொஜிக் இடிப்பது போல தோன்றலாம். ரமேஷ் திலக் வந்து போகும் காட்சி கதையின் பாதையை மாற்றுகிறதோ என தோன்றுகிறது.

மொத்தத்தில் புரியாத புதிர் கதைக்கு சரியான பெயர். அத்தனை பொருத்தம். புதிரின் உச்சம், உணர்ச்சியுடன் விளையாடுகிறது.



# இப்படியும் ஒரு தாய்...



சிறுகதை

அன்று நான் மகளைத் தூக்கி வைத்துக்கொண்டு மாடி விறாந்தையில் நின்று கொண்டிருந்தேன். முதலாம் மாடியில் குடியிருக்கும் ரமணி அக்கா லதா.. லதா... என்று கூப்பிட்டார். நான் கீழே எட்டிப்பார்த்து என்னக்கா... ஏன் கூப்பிட்டனீங்கள் என்றேன். வீட்டில் நில்லும் வாறேன் என்று தன் வீட்டுக் கதவை பூட்டிக் கொண்டு மேலே வந்தா சிறிது படபடப்புடன். உமக்கொரு விடயம் சொல்ல வேணும். நீர்தான் சின் னண் ணையின் பிள்ளைகளுடன் நன்றா கப் பழகிறனீர் கவனமா இருக்கவேணும் என்றா.

என்னக்கா என்ன என்ன என்றேன். எனக்கு யோகாவின் செய்கையால் மனம் குழம்பி உமக்கும் சொல்லி வைக்க வேணும் என்ற மன அந்தரத்தில் கூப் பிட்டுக் கொண்டு வந்துவிட்டேன். பொறும். காஸ் அடுப்பில் கறி. குறைத்து விட்டு வந்தனான். பிறகு வாறன் எல்லாம் சொல்ல என்று சொல்லிக்கொண்டு போயிட்டா.

எங்கள் குடும்பம் கொழும்பிலுள்ள அந்தத் தொடர்மாடிக் குடியிருப்புக்கு வந்து ஆறு மாதத்திற்கு மேலாகிவிட்டது. எனது மகன், ஒன்றரை வயது மகள், 9 மாதக் குழந்தை. கணவரும் கணவரின் தம்பி இந்திரனும் தான் வீட்டில் வசிப்பவர்கள். எங்கள் வீடு இரண்டாம் மாடியில் முதலாவது வீடு. 3 ஆவது வீட்டில் யோகா அன்ரியும் மூன்று பிள்ளைகளும். முதலாவது மாடியில் இரண்டாவது வீட்டில் ரமணி அக்காவும் கணவரும் மகன் கோகுலனும். ரமணி அக்காவும் யோகா அன்ரியும் உறவினர்கள். அத்துடன் அந்த மாடிக் குடியிருப்பில் ஒரு வருடத்திற்கு மேலாக வசிப்பதாலும் தமிழர்கள் என்பதாலும் நாங்கள் வீட்டிற்குக் குடிபுகச் சென்றபோது வீட்டுக்கு வந்து அன்பாகப் பேசி, நான் குழந்தைகளுடன் இருப்பதால் நாங்கள் இருக்கிறோம் என்ன தேவை என்றாலும் சொல்லுங்கோ என்று ஆதரவுடன் கதைத்தார்கள். அதனால் நானும் பிள்ளைகளும் சந்தோசமாக இருந்தோம்.

எனது கணவர் சந்திரன் வீடமைப்புத் திணைக்களத்திலும் தம்பி தனியார் கம்பனியிலும் வேலை செய்வதால் இருவரும் காலையில் சென்று மாலையில் வருவார்கள். ரமணி அக்கா மகனைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு சமையல் வேலை முடிய எனது மகளைத் தூக்கி விளையாட்டுக்காட்டி பொழுதுபோக்க வந்துவிடுவா. யோகா அன்ரியின் பிள்ளைகள் சுரேஸ் 6 ஆம் வகுப்பு, ராஜா 4 ஆம் வகுப்பு, தங்கா 2 ஆம் வகுப்பு. மூவரும் பாடசாலை சென்று வந்த பின்பும் பாடசாலை இல்லாத நாட்களிலும் மகனுடன்வந்து விளையாடுவார்கள். யோகா அன்ரிவிறாந்தையில்நின்று கதைப்பா.

பாடசாலை விட்டு வந்தபின் பிள்ளைகள் முன் அறையில் விளையாடிக் கொண்டிருப்பார்கள். நான் சமையலறையில் வேலையில் இருப்பேன்.

நாங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாச் சாமான்களும் வாங்கவில்லை. மேசை மணிக்கூடு இல்லாததால் எனது கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்து சமைப்பேன். மகளுக்குப் பால் பருக்குவதற்கு. சாப்பாடு கொடுப்பதற்கு நேரம் பார்ப்பேன். நான் எல்லோருடனும் நம்பியும் நடப்பேன். நம்பவும் நடப்பேன். நம்பி ஏமாறியதும் உண்டுதான்.

ஒரு நாள் பக்கத்து அறையில் உள்ள மேசை லாச்சியைச் திறந்து எனது கைக்கடிகாரத்தை எடுத்து நேரம் பார்த்தேன். அப்போது சுரேஸ் என் பக்கத்தில் வந்து லதா அன்ரி நேரம் என்ன? என்று கேட்டுவிட்டு என் கையிலிருந்த கடிகாரத்தின் பட்டியைப் பார்த்து றிஸ்மெற்றின் செயின் தங்கமா? அன்ரி என்று கேட்டார். நானும் சிறுவனிடம் பெருமையாக அம்மாவை கைச்சங்கிலிக்குப் பதிலாக மணிக்கூட்டுச் செயின் பவுணால் போட்டுத் தந்தார்கள் என்று கூறிவிட்டு மணிக்கூட்டை லாச்சியில் வைத்துப் பூட்டிவிட்டு திறப்பையும் அதிலேயே விட்டுவிட்டு எனது வேலைகளைக் கவனித்தேன். இவ்வாறு அதிகமாகச் செய்வேன். சிலவேளைகளில் மணிக்கூடு பார்ப்பதில்லை.

யோகா அன்ரியின் பிள்ளைகளும் சில நாட்களில் வருவதில்லை. நானும் மகனும் அவர்களைக் காணாவிட்டால் போய் ஏன் விளையாட வரவில்லை என்று கேட்போம். பெரியப்பா வீட்டில் போய் நின்றோம். அதனால் வரவில்லை என்று சொல்வார்கள்.

யோகாவின் கணவர் வங்கியில் உயர் பதவியில் இருக்கும்போது நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். அதனால் யோகா அன்ரிக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு தொகைப்பணம் அவர்களின் பேரில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. அத்துடன் யோகாவின் கணவரின் தமையன் அலுவலக மேலதிகாரியாக (Staff Officer) பணியாற்றியதால் தன் தம்பியின் பிள்ளைகளையும் நன்கு கவனிப்பார். மாதாமாதம் அவர்களுக்கு வேண்டிய செலவுக்குப் பணம் கொடுப்பார். இந்த விபரம் எல்லாம் ரமணி அன்ரி சொல்லுவார். யோகா அன்ரியின் கணவரைச் சின்னண்ணா என்றும் தமையனைப் பெரியண்ணா என்றும் கதைப்பார்.

விடயத்தைச் சொல்ல வருகிறேன் என்று சென்ற ரமணி அக்கா தன் வேலைகளை முடித்துவிட்டு ஆவேசமான மன நிலையுடன் மேலே வந்தா. தைா “ யோகா அண் ணியும் பிள்ளைகளும் வீட்டில் இல்லையெல்லோ... அவ நல்ல சோக்காளி தானே. அவவின்ர சோக்குக்கு வாற காசொன்றும் போதாது. அதனால் அந்தப் பெடியன் சுரேஸ்... பெற்ற பிள் ளைய்ய விட்டு பெரியண்ணை வீட்டில் அலுமாரியில இருந்த நகைகளை எடுத்து வரச் சொல்லியிருக்கிறா. பெடியன் பெரியண்ணையின் மகளிடம் பிடிபட்டுவிட்டான். ஏன் இப்படிச் செய்தாய் என்று மகள் கேட்க, அம்மா எடுத்துவரச் சொன்னா என்று உண்மையைச் சொல்லிவிட்டான். அதனால பெரியண்ணை தன் தம்பியின் பிள்ளை வெளியில விடயம் தெரிந்தால் வெட்கம். சிறுபிள்ளை அவனை மன்னித்து இப்போதே திருத்தி தான் வைத்துப் பராமரிக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு தாயைக்கூப்பிட்டு இப்படியும் ஒருதாய் செய்வாளா? என்று பேசிவிட்டார்.

“ நீரும் கவனமாயிரும்” என்று அவ சொன்னதும்தான் எனக்கும் பக் என்று பயம் பிடித்து அக்கா பொறுங்கோ நானும் லாச்சியில் கொஞ்சச் சாமான்கள் வைத்தனான் என்ன நடந்ததோ என்று ஓடிச் சென்று லாச்சியைத் திறந்து பார்த்தேன். வைத்த பொருள்கள் ஒன்றும் இல்லை. தங்க நகைகள் ஒரு சோடி காப்பு, மகனின் ஒன்றரைப் பவுண் சங்கிலி, மணிக்கூடு ஒரு பவுண் செயினுடன். ஐயோ “அக்கா ஒரு பொருளும் இல்லை அக்கா. எப்போ போனது என்றே தெரியவில்லை என்று அழுதேன். ரமணி அக்கா பொறு பிள்ளை பக்கமெல்லாம் சிங்கள ஆட்கள், முஸ்லிம் ஆட்கள். எங்களுடன் நல்லமாதிரி. அவர்கள் என்ன நினைப்பார்கள். தம்பி சந்திரன் வரட்டும். பொலிஸில் போய் என்றி போடச் சொல்லுவம். நான் பொலிசுக்குச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மாலையில் கணவர் வந்ததும் நான் அழ ஆரம்பித்தேன். அவரிடம் விடயத்தை அழுதழுது சொன்னேன். இந்த ஊரில் யார் எடுத்தது? எப்படிப் போனது என்று தேட பேசாமல் இரும். உமக்குத் தொலைக்கிறதும் எடுக்கிறதும்தானே. பொருள் போனது இடம் புண்ணியம் என்று சிறு கடுப்புடன் பேசிவிட்டு இருந்துவிட்டார்.

கணவர் வந்ததைக் கண்டு சிறு நேரஞ்செல்ல ரமணி அக்கா மேல வந்தா. தம்பி விடயம் லதா சொன்னா தானே. நீர் யார் எடுத்தது என்று யோசிக்க வேண்டாம். பொலிஸில் என்றி போடும். சந்தேகம் கேட்டா யோகாவிலும் மகனிலும் என்று சொல்லும். பெரியண்ணை வீட்டில் நடந்து பிடிபட்டுத் தன் தம்பியின் குடும்பம் என்று விட்டார். நீங்கள் விட்டால் அந்தப் பிள்ளை இன்னும் களவு செய்து யாரிடம் பிடிபட்டுக் கெட்டுப் போகிறதோ? பாவம் வளரும் பிள்ளை, வாழவேண்டிய பிள்ளை. தாயே பிழையான வழியைக் காட்டினால் பிள்ளை என்ன செய்யும்? அவவையும் திருத்தவேணும். பிள்ளைக்கும் விளங்க வேணும். போய் முறைப்பாடு செய்யும் என விடாப்பிடியாக நின்றா. அவவும் ஒருதாய்தான். எனக்குத் தெய்வமாக வந்தா. கணவரும் அவவின் வற்புறுத்த லால் சென்று பொலிஸில் பதிவு செய்தார்.

பொலிஸார் வந்தார்கள். வீட்டைச் சுற்றி பார்வையிட்டு வீட்டில் உங்களுடன் வேறு யார் இருக்கிறார்கள் என்று கேட்டனர். கணவரின் தம்பி என்று சொன்னதும் அவரை விசாரித்தார்கள். வீட்டுக்கு வருபவர்கள் யார் என்று கேட்டார்கள். ரமணி அக்கா, யோகா அன்ரியின் பிள்ளைகள் என்று சொன்னேன். ரமணி அக்காவையும் யோகா அன்ரியையும் விசாரித்தார்கள். பிள்ளைகளை விசாரிக்கவேண்டும் எனப் பொலிஸார் கூறியதும் யோகா அன்ரி சிங்கள மொழியில் சரளமாகவும் காரமாகவும் பேசி பிள்ளைகளை விசாரிக்க விடமுடியாது எனத் திருப்பி அனுப்பி விட்டார். பொலிஸாரும் ஒரு தடயமும் இல்லை எனக்கூறிச் சென்று விட்டனர்.

ஆனால் ரமணி அக்கா என் கணவரை விடுவதாக இல்லை. தம்பி இன்னொரு தடவை பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் சுரேஸைக் கொண்டுபோய் விசாரிக்கச் சொல்லும் என்று வற்புறுத்தினர். நான் ஒன்றும் பேசவில்லை. பேசினால் விளைவு எதுவும் இராது. எனது கவனயீனம் பேசாமல் கடவுளை வேண்டிக்கொண்டு இருந்தேன். ரமணியக்கா தெய்வத்தால் கணவர் மீண்டும் யோகாவின் மகனை விசாரிக்கச் சொன்னார்.

அவர்களும் யோகாவிடம் வந்து சமாதானமாகப் பேசி மகனை ஒருமுறை விசாரித்துவிட்டு கொண்டு வந்து விடுகிறோம் எனக்கூட்டிச் சென்று சாம பேத தான தண்டம் என பலவிதமாக விசாரித்தார்களாம்.


இறுதியாக இதமாகப் பேசியே உண்மையை வரவழைத்தார்களாம். இனிய இதமான சொற்களுக்குப் பெருமதியுண்டு. மணிக்கூடு எடுத்து அம்மாவிடம் கொடுத்தேன் என்று கூறியதிலிருந்து முழு விபரத்தையும் பெற்றுவிட்டார்கள். திருட்டு வெளிப்பட்டு விட்டதென்று அறிந்த தாய் மற்ற இரு பிள்ளைகளுடனும் தலைமறைவாகி விட்டார்.

சுரேஸின் விசாரணை மூலம் எடுத்த பொருட்களைக் கொடுத்த கடைகளில் சுரேசுடன் சென்று மீட்டு சுரேஸை நீதிமன்றில் பாரப்படுத்தினர். அதனை அறிந்த தாய் சட்டத்தரணியுடன் நீதிமன்றில் ஆஜராகி பிழையை ஒப்புக் கொண்டார். உயரதிகாரியின் பெரிய தந்தையார் சட்டத்தரணி மூலம் தம்பியாரின் மகனான சுரேஸையும் தாயையும் மன்னித்து விடுதலை செய்யும் படியும் தான் சுரேஸைப் பொறுப்பெடுப்பதாகவும் கேட்டுக் கொண்டார். ஆயினும் நீதிபதி 12 வயது சிறுவனாகையால் 16 வயது வரை சிறுவர் நன்னடத்தைப் பள்ளியில் படிக்க உத்தரவிட்டார். பொலிஸாரின் சேவையைப் பாராட்டிய நீதிபதி பொலிஸார் மூலம் மன்றிலே எமது பொருட்களை ஒப்படைத்தார்.

ஒரு தாயின் செயற்பாட்டால் பிள்ளைக்கு ஏற்பட்ட விளைவு. ஒரு தாயின் செயற்பாட்டால் பிள்ளையின் வாழ்வில் ஏற்பட்ட நற்கதி. ஒரு குடும்பத்தின் மனத் துன்பத் தீர்வு. இப்படியும் தாய்மார்கள் இருக்கிறார்கள்.

**திருமதி ச.சந்திரராசா**
**பொன்னாலை**

# facebook நண்பன்



'ஆனாலும் இதுபோன்ற நிகழ்வுகளும் உதவிகளும் நட்புகளும் இன்றைய காலத்தில் காண்பது மிக அரிது என்ற ஓர் எண்ணமும் என்னுள் மட்டுமல்ல, வாசிக்கும் உங்கள் மனதிலும் எழுவது புரிகிறது.

நட்புடன் வாழ்வோம் ...நன்மைகள் செய்வோம் . நாமும் வாழ , மற்றவர்களும் வாழ்ந்திட சாதிமதம் , இனம், மொழி என்பதை அறியாமலே வெறுங்கையோடுதான் பிறக்கின்றோம் . செல்லும்போது அனைத்துத் தரப்பினரும் வழியனுப்பிட , தனியாகத்தான் ஏதும் எடுத்து செல்லாமல் மறைகிறோம். உள்ளவரை உண்மையுடன் அர்த்தமுடன் வாழ்வோம்.

முற்றும்

# ராசியான மோதிரம்

அலுவலகம் முடிகின்ற நேரமது. பிரகாஷ் அவசர அவசரமாக தன் வேலையை முடிப்பதில் வேகம் காட்டினான். அதற்காக அந்த கம்ப்யூட்டரிடம் தனியாக ஏதோ பேசிக்கொண்டே தட்ட ஆரம்பித்தான். அவனைத் தாண்டி சென்ற ரமேஷ், என்னடா பிரகாஷ் அவசரமா... வெளியே எங்கும் போகிறாயா...இத்தனை வேகத்துடன் செயற்படுகிறாயே என்றான். இல்லை ரமேஷ்... ஒரு அவசர காரியமாக வீட்டிற்குப் போக வேண்டும். ஆனால் மனேஜர் உடனே இதை முடித்து விட வேண்டும் என்று கூறிவிட்டார். அதான் அந்த ரிப்போர்ட் எடுப்பதற்கு சற்று வேகப்பட்டேன்.

உடனே ரமேஷ், அப்படியானால் நீ புறப்படு பிரகாஷ், நான் பார்த்து முடித்து கொடுத்துவிட்டு போகிறேன், எனக்கு ஒன்றும் வேலை இல்லை என்றான் உதவிடும் எண்ணத்தில். இக்காலத்தில் இப்படி கூறுபவர்களே மிகவும் குறைவுதானே.., உண்மை நண்பன் என்று நினைக்கிறேன். உடனேயே பிரகாஸ்க்கு உச்சிக் குளிர்ந்து உள்ளம் நிறைந்தது ...மிக்க நன்றிடா மச்சான் ...நான் கிளம்பவா...இதில் உள்ள தேவைகளை படித்து அறிந்து முடித்துக் கொடுத்துவிடு ....ரமேஷ் நாளை காலை காபி என்னோடது தான்... மத்தியானம் சாப்பாடும் என்



னோடுது தான்...ஓகே டீலா ...என்று சிரித்தவனை ரமேஷ் உடனே டபுள் ஓகேப்பா என்று பதிலுக்கு சத்தமாக சிரித்தான் .

அப்படி என்ன அவசர வேலை பிரகாஸ்க்கு... மனதிற்குள் சுழன்றது ரமேஸ்க்கு... ஆனாலும் நாளை கேட்கலாம் என்று விட்டுவிட்டான். அன்று மதியம் வீட்டிலிருந்து அழைப்பு வந்தது பிரகாஸ்க்கு. அழைத்தவர் அவன் மனைவி ரேணுகா. எடுக்கும்போதே மிகவும் படப்படப்புடன் பேசினாள். பிரகாஷ் எனக்கு மனசு சரியில்லை... எனது வைர் மோதிரம் காணாமல் போய்விட்டது... தேடிப் பார்த்தேன் வீடு முழுவதும்... கிடைக்கல ...எவ்வளவு ராசின்னு உன்கிட்ட சொல்லி இருக்கேன்... ரொம்ப பயமா இருக்கு... ஏதோ நடக்கப் போகுது ... என்று அழுது கொண்டே பேசினாள். சரி சரி அழாதே ... நான் வருகிறேன் சீக்கிரம். அழாமல் இரு. எந்த கற்பனையையும் மனதில் போட்டு குழப்பிக்கொள்ளாதே. உடனடியாக போனை துண்டித்து சற்று நேரம் யோசிக்க ஆரம்பித்தான். அதன் பின்பு தான் மனேஜர் அறைக் குச் சென்று அவசரமாக வீட்டிற்கு செல்ல அனுமதி கேட்டபோது அவர் இந்த வேலையை முடித்து விட்டு செல்லுமாறு கூறிவிட்டார். அதன்பின் நடந்ததுதான் முதலில் கூறிய நிகழ்வு.

நேராக வீட்டிற்கு சென்றவன் வேகமுடன் உள்ளே நுழைந்து ரேணு, ரேணு என்று அழைத்தான். அவளோ பதில் ஏதும் கூறாமல் சோபாவில் அமர்ந்து கண்டு விசும்பிக் கொண்டிருந்தாள். அருகில் அமர்ந்தவன் அவளை அணைத்தபடியே ஆறுதல் கூற ஆரம்பித்தான். இதென்ன நீ வேண்டுமென்றா தொலைத்தாய் ...ஏதோ நடந்துவிட்டது... யார் தான் என்ன செய்ய முடியும் ...நீ கேட்டுத்தான் வாங்கி கொடுத்தேன்...மறுபடியும் வேறு ஒன்று வாங்கிக்கொள்ளலாம்... விடு இதற்காக வருத்தப்பட்டு அழுவதால் என்ன நடக்கப்போகிறது என்றான். அவள் நிமிர்ந்து வழியும் விழிகளுடன் அவனை நோக்கினாள் ...எப்படிங்க உங்களால் இப்படி சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடிகிறது ?

அடுத்தவாரம் தொடரும்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1179

Search for people, places and things · Nagendram Home

### ராஜேஸ் கரன்





### துஷாந்தன்





### சிந்துஜன்





### ரவிராஜ்



### ஹரிகரன்




### சிலோஜன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 99

# மீண்டும் சுகமும் சுதந்திரமும் பெற...



சுகமும் சுதந்திரமும் தொலைத்தோம்
தொல்லைகள் பிணிகளை வளர்த்தெடுத்தோம்.
அன்னை மண்ணை மறந்தோம்.
அந்நியன் சொன்னதைஅருள்வாக்காய் கொண்டோம்.

சத்துமாப் பேணியில் தான் சத்து என்று சத்தியம் செய்தோம்.
சொந்த உணவுகளை சுத்தமாய் மறந்தோம்.
சோறும் போதெல்லாம் சோடா குடித்தோம்
நண்பர்களை எதிரிகளாய் கொண்டோம்.
உண்மைச் சொந்தங்களை உதாசித்தோம்.
எம்மை ஏய்ப்பவர்களுக்கு என்ன முன் எண்ணெய் ஆனோம்.

குற்றம் குறை சொல்ல ஒற்றைக்காலில் நின்றோம்.
நிறைகளைச் சொல்ல நிறைய யோசித்தோம்.
ஆசிரியர் சேவையை அவதூறாய்ச் சொன்னோம்.
தாதியரை என்றும் தரக்குறைவாய்ப் பேசினோம்.
வைத்தியர்களை வாயார வைத்தோம்.
மருந்து விசிறுவதால் விவசாயியைக்கூட விட்டா வைத்தோம்.
வர்த்தகர்களை வார்த்தைகளால் அர்ச்சித்தோம்.
மாணவரின் ஒழுக்கத்தை மணிக்கணக்காய் விமர்சித்தோம்.

நாம் மட்டும் நல்லவராய் இருக்க.
மற்றவரெல்லாம் போக்கிரியாயும்
புல்லுருவியாயும் ஆனது எப்படி?
இது சாத்தியமான சமன்பாடா?
எல்லோரும் நொந்து நோயுற்ற ஒரு சந்ததியின் மாதிரிதான்
மீண்டும் சுகம்பெற்று ஆகவேண்டும்.
சொந்தமாய் சிந்திப்போம்.



நாமாக என்ன செய்தோம் நம்மை வளப்படுத்த
எத்தனை மரங்களை நட்டோம்.
என்னத்தை பயிரிட்டோம்.
எம் எத்தனை உறுப்புக்களை
இறந்த பின்னாவது தானம் செய்யத் துணிந்தோம்.
எத்தனை தடவை இரத்தம் கொடுத்தோம்.
எவரெவரின் துயர் துடைத்தோம்
வைத்தியசாலையின் நெருக்கடிகள் தீர
நோய்களைத் தணித்து வைக்க
உடற்பயிற்சி செய்தோமா?
உடல்நிறை பேணினோமா?
சீனி தவிர்த்தோமா?
சீராக வாகனம் விட்டோமா?
புகைப்பதையும் குடிப்பதையும் துறக்கத் துணிந்தோமா?
மற்றவனுக்காய் அழுதோமா?
மன்னிப்புகள்கேட்க மனம் துணிந்தோமா?
பெற்றவரை உற்றவரை உயிர்போலக் காத்தோமா?



தெருவிலே துப்புவதை
வாகனத்தில் துரத்துவதை
குப்பை கொட்டுவதை
சண்டைகள் போட்டு சத்தம் போடுவதை
சுத்தமாய் நிறுத்திவிட சித்தம் துணிந்தோமா?

மற்றவனை செதுக்குமுன் எம்மை நாமே செதுக்குவோம்.
அடுத்தவனுக்குப் பட்டம் சூட்டுமுன் எமக்கு நாமே பட்டை தீட்டிடுவோம்.
அந்நியன் எல்லாம்
தன்னைத்தானே செதுக்கிறானே வளர்ந்துவர
நாம் மற்றவனைச் செதுக்க உளி கொண்டு துரத்துவதா?
பேனா என்ற பேராயுதம் தூக்கி
போர்க்குற்றம் புரிவதா?
பட்டவை போதும் பண்படுவோம்
தொட்டவைகள் துலங்க
ஒற்றுமையாய் ஒன்றாகி உழைப்போம்.
உறுதி கொள்வோம்.
நாளை எம் கனவுகள்
நிச்சயம் நிதர்சனமாகும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

### சென்றவார இதழில் கேட்கப்பட்டதற்கிணங்க

## மருத்துவ குழுவுக்கு வந்த ஆலோசனை முடிவுகள்

**நோயாளி ஒருவருக்கு கடுமையான ஒரு நோய்நிலை கண்டறியப்பட்டால்...**

1) முதலிலே அவரது குடும்பத்தவருடன் கலந்துரையாடி அவர்களின் அனுமதியுடன் நோயாளிக்கு அதை தெரியப்படுத்துவது நல்லது என்று 55 வீதமானவர்களும்

2) முதலில் நோயாளியுடன் கலந்துரையாடி அவரின் அனுமதியுடனேயே குடும்பத்தவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று 20 வீதமானவர்களும்

3) குடும்பத்தவர்களுடன் மட்டும் கலந்துரையாடி நோயாளிக்கு தெரியப்படுத்தாமல் மருத்துவக் கவனிப்பை தொடர்வது நல்லது என்று 10 வீதமானவர்களும்

4) நோயாளிக்கோ குடும்பத்தவர்களுக்கோ இது பற்றி தெரியப்படுத்தாது மருத்துவக் கவனிப்பை தொடரலாம் என்று 10 வீதமானவர்களும்

5) நோயாளிக்கு மட்டும் தெரியப்படுத்தி பிறருக்கு தெரியப்படுத்தாமல் மருத்துவக் கவனிப்புகளை தொடர்வது நல்லது என்று 5 வீதமானவர்களும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த முடிவுகள் மேலைத்தேசத்து மருத்துவ விதிமுறைகளை நாம் அப்படியே கடைப்பிடிப்பது சிக்கலானது என்பதை தெளிவுபடுத்தி நிற்கின்றது.

மேலைத்தேச மருத்துவ விதி முறைப்படி ஒருவருக்கு கடுமையான நோய்நிலை ஒன்று ஏற்பட்டால் முதலிலே அது சம்பந்தமாக பக்குவமாக நோயாளிக்கு தெரியப்படுத்தி அவரின் அனுமதியுடனேயே மற்றவர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.



யாழ்.மருத்துவக்குழு

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் **076 468 5555** என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.